ஒக்டோபர் 02-08, 2005 Octember 02 -08, 2005 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்




## முயற்சி பலிக்குமா?

## குஷ்பு கிளப்பிய சர்ச்சை!

# சந்திரிக்காவின் மௌனராகம்

ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது ஆண்டுக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிக்கா அங்கு உரையாற்றியதும் நாடு திரும்பி ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக அதிரடி நடவடிக்கைகள் சிலவற்றை எடுப்பார் என பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆனால், ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரும் அரசியல் பரப்பில் பெரிதாக திடீர் திருப்பங்கள் எதுவும் இடம் பெறப் போவதில்லை என்பதையே கள நிலைமைகள் கட்டியம் கூறி அறிவிக்கின்றன.

### மஹிந்தவின் ஒப்பந்தங்கள்

ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்காக மேற்கொண்ட தான்தோன்றித்தனமான ஏற்பாடுகள் இருதரப்பினரைச் சிந்திக்கவைத்தன. அவர்கள் தான் ஜனாதிபதியும், தமிழீழ விடுதலைப்புலிகளும்

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுவிட வேண்டுமென்ற ஆதங்கத்தில் - துடிப்பில் - தமிழ் மக்களது நீண்டகால உரிமைப் போராட்டத்தைக் கணக்கில் எடுக்காது, தனது கட்சியின் இனப்பிரச்சினை சம்பந்தமான அடிப்படைக் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்து, பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தங்கள் செய்துகொண்டார் மஹிந்த.

இது கண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அலட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் சிந்தித்தனர். தமது அடுத்த நகர்வு நோக்கிய பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆனால், சந்திரிக்காவும் அவரது அரசாங்கமும் நிலைகுலைந்து தடுமாறுகின்றன. ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான தன்னைக் கணக்கெடுக்காது மஹிந்த மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகள் சந்திரிக்காவை சினம் கொள்ளத் தூண்டின. சீறவும் வைத்தன.

### சந்திரிக்காவின் மௌனத்தின் இரகசியம்

கட்சிக்குள் தனது நிலையைப் பலப்படுத்திக்கொண்ட மஹிந்த இதுவரை தன்னை மிரட்டிவந்த சந்திரிக்காவின் கையறு நிலைகண்டுமௌனமாகச் சிரிக்கிறார். தனது பெற்றோரால் கட்டி வளர்க்கப்பட்ட கட்சிக்குள்ளே தான் தனித்துவிடப்பட்டிருப்பதை சந்திரிக்கா இப்போது புரிந்து கொண்டிருக்கிறார்.

கட்சியின் பெரும்பாலான அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மஹிந்தவின் பின்னால் நிற்கிறார்கள் என்பதாலும் -

மஹிந்தவுக்கு எதிரான தனது கடும் போக்கு கட்சியை சிதறடித்துவிடும் என்பதாலும்-

ஐ.நா.வில் உயர் பதவி ஒன்றில் கண்வைத்திருப்பதாலும் -

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையிலான தனது பதவிக்காலத்தில் மௌனம் காப்பதே மேல் என்று சந்திரிக்கா தீர்மானித்துவிட்டார். அதனால் தான் கடந்த 18ஆம் திகதி ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதுவரை இந்த நாட்டு அரசியல் நிலைபற்றி வாய் திறக்காது இருக்கிறார்.

சந்திரிக்காவுடன் மிக நெருக்கமாக உள்ள ஒரு சில அமைச்சர்கள் கூட சந்திரிகாமீது தாம்கொண்ட கௌரவத்துடன் கூடிய பயத்தின் காரணமாகவே அவருக்கு வால் பிடிக்கின்றனர். அவரது கொள்கைகளுக்கோ அவரது கருத்துகளுக்கோ மதிப்பளிப்பவர்களாக அவர்கள் இல்லை.

இந்த உண்மையை அவருக்கு மிகவும் வேண்டிய ஒருவர் அக்குவேறு ஆணிவேறாக அவருக்குவிளக்கி இருக்க வேண்டும். அதனால்தான் அவர் இதோ, மஹிந்தவை ஒரு கை பார்த்து விடுகிறேன் என்ற நிலைப்பாட்டிலிருந்து தடம்புரண்டுள்ளார் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.



### ஸ்ரீ.ல.சு.கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்

மஹிந்தவுக்கும் - சந்திரிக்காவுக்கும் இடையில் நிலவிவந்த முரண்பாடுகள் இருவரும் ஒட்டி உறவாட முடியாத அளவுக்கு விரிவடைந்ததற்குக் காரணம் என்ன?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அணுகு முறையில் இருவரும் கொண்டுள்ள நிலைப்பாடுகளே இதற்குக் காரணம்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பங்கீடே பரிகாரம் என சந்திரிக்கா கூறி வருகிறார். ஆனால், பிரதமர் மஹிந்த ஜே.வி.பி.யுடனும், ஹெல உறுமயவுடனும் செய்துள்ள தேர்தல் ஒப்பந்தங்கள் எந்தவிதமான அதிகாரப் பரவலாக்கலையும் அடியோடு நிராகரிக்கின்றன. ஒற்றையாட்சியின் கீழேயே எந்தத் தீர்வும் என்கிறார் மஹிந்த. சந்திரிக்கா சமஷ்டி பற்றிய தனது நிலைப்பாட்டில் எவ்வளவு நேர்மையாகவும், உறுதியாகவும் இருக்கிறார் என்பது வேறுகதை.

நிலைமை இப்படி இருக்க, ஸ்ரீ.ல.சு. கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி சந்திரிக்காவே மத்திய குழுவுடன் இணைந்து கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பார் என்று கூறியிருக்கிறார். அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கட்சியின் அணுகுமுறை அதில் உள்ளடக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இங்கு நாம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உண்டு. தேர்தலில் வெற்றி பெறும் ஒரு கட்சியோ அல்லது ஜனாதிபதி வேட்பாளரோ தனது விஞ்ஞாபனத்தில்கூறப்பட்டுள்ளவற்றை அமுல் நடத்தியே ஆக வேண்டும் என்ற கடப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது. அதனால் அது பற்றி மஹிந்தவோ, தமிழ் பேசும் மக்களோ அக்கறை கொள்ள வேண்டியஅவசியம் இல்லை. அத்துடன்தமது கொள்கைகளுடன்முரண்பட்டு நிற்கும் ஸ்ரீ.ல.சு. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் காரணமாக ஜே.வி.பி யோ சிஹலஉறுமயவோ மஹிந்தவுடனான தமது கூட்டணியை உடைத்துக் கொண்டு வெளியேறி விடப் போவதும் இல்லை.

### ஜே.வி.பி.யின் இலக்கு

இதற்கான காரணம் என்ன தெரியுமா? மஹிந்த ஒரு பலவீனமான மனிதர் என்பதையும், அவர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால், அவரைத் தமது கைப்பொம்மையாக்கி அவரைத் தமது தாளத்திற்கேற்ப ஆடவைக்க முடியும் என்பதையும் ஜே.வி.பி. நன்கு தெரிந்து வைத்துள்ளது. அத்துடன் மஹிந்த ஜனாதிபதியாக வெற்றி பெறுமிடத்து, ஸ்ரீ.ல.சு கட்சியை சின்னாபின்னமாக்கி இந்த நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியாக உருவெடுக்க வேண்டும் என்றொரு அரசியல் வியூகமும் அதனிடம் உண்டு. தமது இந்த இலக்குகள் தோல்வியடைய இந்தக் கட்சி இடமளிக்கப் போவதில்லை. எனவே, தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெறப்போகும் கொள்கை முரண்பாடுகள் காரணமாக மஹிந்தவுக்கான தமது ஆதரவை விலக்கிக் கொள்வதற்கு ஜே.வி.பி. தலைவர்கள் படு முட்டாள்கள் அல்லர்.

மேலும், ஸ்ரீ.ல.சு கட்சியின் அமைச்சர்களோ அல்லது மத்தியக் குழுவோ ஜனாதிபதி தனது காலடியின் கீழ் மஹிந்தவைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் அவரை அனுமதிக்கப் போவதில்லை என்றே நம்பப்படுகின்றது.

* வானளாவ உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு.

*சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலை

* சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் அவல வாழ்க்கை.

பொதுத் தேர்தல் ஒன்று ஸ்ரீ.ல.சு கட்சிக்கு சாதகமாக அமையமாட்டாதென்பதை மேற்கண்டவை அக்கட்சிக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதனால் தான் நாடாளுமன்றக் கலைப்பு என்ற பேச்சுக்கே இடமின்றி எதிர்வரும் நவம்பரில் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்தப் பின்னணியில், அமெரிக்காவில் இருந்து சந்திரிக்கா இங்கு வந்த பின்னரும் மஹிந்தவைப் பாதிக்கக் கூடிய கடும் நடவடிக்கை எதையும் எடுக்கக் கூடிய நிலையில் அவர் இப்போது இல்லை. அரசியல் வானில் வாலறுந்த பட்டம் போலஅல்லாடிக் கொண்டிருக்கும் தனது நிலையை எண்ணி, தினம் வெதும்பி மௌனராகம் பாடுவதை விட அவரால் செய்வதற்கு எதுவுமே இல்லை.

### பச்சை நிறம்

தவிர, தேர்தல் ஒன்று வரும்போது தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை, நலன்களை அடகு வைத்து தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள ஐ.தே.க கட்சியும், ஸ்ரீ.ல.சு. கட்சியும் பின் நிற்கப் போவதில்லை.

இரு கட்சிகளுக்கும் பொருத்தமான நிறம் பச்சை நிறம் தான். ஏனெனில், இந்த இரு கட்சிகளுமே தாம் பச்சை இனவாதக் கட்சிகள் என்பதை காலத்துக்குக் காலம் தமது அரசியல் செயற்பாடுகள் மூலம் நிரூபித்துள்ளன. இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தூக்கி எறிந்து, பேரினவாதக் கட்சிகள் இரண்டுடன் மஹிந்த தேர்தல் உடன்பாடு செய்துள்ள போதும், அவருக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறது ஸ்ரீ.ல.சு. கட்சி.

அண்மையில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தின் போது, தனது ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவரான தி.மகேஸ்வரனை பேசவிடாது திட்டமிட்டுத் தடுத்ததன் மூலம் ஐ.தே.க தனது சுய ரூபத்தைக் காட்டியது.

இந்தக் கட்சிகளின் இவ்வாறான சுயநலப் போக்கையும், இனவிரோத செயற்பாடுகளையும் தமிழ் தலைமையும், மக்களும் நன்கு புரிந்து வைத்துள்ளனர். 'அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்' என்பதும் அவர்களுக்குத் தெரியாத விடயமல்ல.

தற்போதைய தென் இலங்கை அரசியல் போக்கு தொடருமானால்,தமிழ்த்தேசத்தின் விடுதலைப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பது நியாயப்படுத்தப்படும்.

ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் நியாயத்தீர்வு ஒன்றை தென்னிலங்கை சிங்களத் தலைமை வழங்குவதற்கு முன்வரமாட்டாது என்று காலங்காலமாக தமிழர்கள் கூறிவருவது மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்படும்.

தமது இறுதி இலட்சியத்தை அடைவதற்கு வாய்ப்பாக எது நடக்க வேண்டும் என்று புலிகள் எதிர்பார்க்கிறார்களோ அது நடப்பதாகியும் விடும்.

சந்திரிக்காவின் மௌனமும் மஹிந்தவின் இனவாதப் போக்கும் இதற்கே வழிவகுக்கப்போகின்றன.

*- வேந்தன் -*

## வடக்கு - கிழக்கில் திலீபன் நினைவு நாள் அனுஷ்டிப்பு

தியாகங்களில் ஒப்பற்றதும், போற்றத்தக்கதுமான தியாகம் பிறருக்காகத் தம் உயிரையும் உவந்தளிக்கும் தியாகம் ஆகும்.

அத்தகைய ஒரு மாபெரும் தியாகத்தை 18 ஆண்டுகளுக்கு முன் தமிழ் பேசும் மக்களுக்காகச் செய்திருக்கிறார், விடுதலைப் புலிகள் அமைப்பின் லெப்.கேணல் திலீபன்.

மாவீரரோடு மாவீரராக தமிழ்த் தாயகத்தில் விதைக்கப்பட்டுவிட்ட திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தை தமிழரின் தாயகமெங்கும் தமிழ் பேசும் மக்கள் கடந்த 26ஆம் திகதி எழுச்சியுடன் அனுஷ்டித்தனர்.

இந்த எழுச்சி நிகழ்வுகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

விசேடமாக அமைக்கப்பட்ட நினைவு இல்லத்திற்குச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன், தியாகி திலீபன் மற்றும் கேணல் சங்கர் ஆகியோரின் திருஉருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

கிளிநொச்சியில் இடம் பெற்ற நிகழ்வில், கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்திலே முதன்மைச் சுடரினை தமிழீழ மாவீர பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றி வைத்தார். திலீபனின் உருவப் படத்தைத் தாங்கிய வண்ணம் மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர்.

திருமலையில் திலீபனின் நினைவு தினம் சேனையூர் பகுதியில் நினைவுகூரப்பட்டது. சேனையூர் மத்திய கல்லூரி திறந்த வெளியரங்கில் இடம் பெற்ற இந்நிகழ்வின் போது, பொதுச் சுடரைத் திருமலை மாவட்ட புலிகளின் இராணுவத் தளபதிகளில் ஒருவரான குஞ்சன் ஏற்றிவைத்தார். கூடியிருந்த அனைவரும் திலீபனுக்கு மலரஞ்சலி செலுத்தி நினைவு தினத்தை அனுஷ்டித்தனர்.

யாழ்ப்பாணத்தில், நல்லூரில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த பகுதியில் நினைவு தினத்தை எழுச்சியுடன் மக்கள் அனுஷ்டித்தனர்.

மரணித்துப் போய், மண்ணுக்காய் விதைக்கப்பட்ட திலீபனின் தியாகத்தையும், அந்த வடுக்கள் நிரம்பிய சோக தினத்தையும் மக்கள் கண்ணீரோடு நினைவு கூர்ந்தனர்.

## வாசகர் இதயம் பேசுகிறது

நீ தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் எம் மனதைக் கவர்ந்து நிற்கின்றன. அரசியல், இலக்கியம், அறிவியல், சினிமா, சிறுகதை, கவித்துளிகள், சிறுவர் பகுதி என நீ அள்ளி வரும் அத்தனையும் எம்மைக் கொள்ளையிட்டுச் செல்கின்றன. உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை சுடச்சுட எமக்கு நீ வழங்குகிறாய்.

எப்படி நீ வாரந்தோறும் புதிய, புதிய பரிமாணங்களில் மிளிர்ந்து நிற்கிறாய்?

உன் வண்ணங்களில் லயித்திருந்த எமக்கு, உன் வண்ணத்தைக் கலைக்க முயன்ற கயவர்களின் செயல் கோபத்தையும், வேதனையையும் ஒரு சேர அள்ளித் தந்தது.

நீ விளக்கில் சுடர்விடும் தீபமில்லையே சின்னச் சின்ன ஊதல்களுக்கெல்லாம் அணைந்து போக. ஒளி கொடுக்கும் சூரியச் சுடராயிற்றே நீ. எப்படி உன்னை அணைக்க முடியும்.

உனக்கு நான் அனுதாபங்களை வழங்க மாட்டேன். நீ இடிந்து போய் நிற்கவில்லையே. என் அனுதாபத்தை எழுத்தில் வடித்து நான் அனுப்ப.

வாசகர்களின் வாழ்த்துகளோடு நீ மென்மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்க என் இதயங்கனிந்த வாழ்த்துகள்.

இனியவள்,
[illegible],
வவுனியா.

# குஷ்பு கிளப்பிய சர்ச்சை

கற்பு குறித்து நடிகை குஷ்பு தெரிவித்த ஒரு கருத்தை அடுத்து, தமிழ் நாட்டின் பெண்கள் அமைப்புகளும்,சில அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இறுதியில் நடிகை குஷ்பு மன்னிப்புக் கோரினார்.

தமிழ்த் திரையுலகில் 90களின் ஆரம்பத்தில் இருந்து, 90களின் இறுதிவரை மிகப் பிரபல்யமாக இருந்தவர் குஷ்பு.

நடிகை குஷ்பு கடந்த வாரம் 'இந்தியா டுடே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியே பெரும் பிரச்சினையாக வெடிக்கக் காரணமாக இருந்தது.



"கல்யாணத்துக்கு முன் பெண்கள் கன்னித் தன்மையுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து ஆண்கள் விடுபட வேண்டும். திருமணத்துக்கு முன் 'செக்ஸ்' வைத்துக் கொள்ளும் போது, கர்ப்பமாகாமலும், பால்வினை நோய்கள் பரவி விடாமலும் பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.'' என்று அந்த பேட்டியில் குஷ்பு கூறியிருந்தார். குஷ்புவின் இந்தக் கருத்துகளே பெண்கள் அமைப்புகளைச் சீறி எழ வைத்தன.

முன்னர் பணத்துக்காக மட்டுமே நடிப்பவர்கள் விபச்சாரிகள் என்று இயக்குநர் தங்கர்பச்சான் கூறியதாக எழுந்த விவகாரத்தில், அவர் மீது கடும் பாய்ச்சல் நடத்தியவர்கள் நடிகை குஷ்புவும், மனோரமாவும் தான்.

இதனை அடுத்து குஷ்புவுக்கு எதிராக 'பத்தினி குஷ்புவுக்குக் கோயில் கட்டுவோம்' என்று குஷ்புவைக் கேலி செய்யும். போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அவருக்கு எதிராக விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அமைப்புகள் குரல் கொடுத்தன. குஷ்புவின் கடந்த காலம் குறித்த கிளறல்களையும் ஆரம்பித்து வைத்தனர்.

குஷ்பு, மனோரமா செல்லும் இடமெல்லாம் போராட்டம் நடத்தப் படும் என அமைப்புகளும் எச்சரித்தன. அண்மையில் மனோரமா சேலத்தில் ஒரு கோயில் திருவிழாவிற்குச் சென்ற போது, நடிகைகள் ஆபாசமாகவும், கவர்ச்சியாகவும் நடிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனக்கோரி ஒரு அமைப்பினர் அவரிடம் சேலைகள் கொடுக்க முயற்சித்துக் கைதாகினர்.

இவ்வாறான சூடான நிகழ்வுகள் இடம் பெற்று வருகையில்தான் குஷ்பு சர்ச்சையில் சிக்கியுள்ளார். 'இந்தியா டுடே' சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

"பெண்கள் தங்கள் செக்ஸ் விருப்பங்களை வெளியிடுவதில் பெங்களூரை விட சென்னை பின் தங்கியிருந்தது. இப்போது சென்னைப் பெண்களும் செக்ஸ் பற்றிய மனத் தடைகளைக் கடந்து வருகின்றனர். செக்ஸ் பற்றிப் பெண்கள் வெளிப்படையாகப் பேச முடிகிறது.

ஒரு பெண் தனது 'போய் பிரண்ட்' பற்றி உறுதியாக இருக்கும்போது, அதைத் தன் பெற்றோரிடம் சொல்லலாம். தங்களது பெண் 'சீரியஸான' ஒரு உறவை வைத்திருக்கும் போது பெற்றோர் அதை அனுமதிக்க வேண்டும்.

ஒரு பெண் திருமணம் ஆகும் போது, அவள்கன்னித் தன்மை கலையாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களில் இருந்து நமது சமூகம் விடுதலையாக வேண்டும்.

கல்வி கற்ற எந்த ஆண் மகனும் தான் திருமணம் செய்யப் போகும் பெண் கன்னித் தன்மையோடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான். ஆனால், திருமணத்துக்கு முன் 'செக்ஸ்' வைத்துக் கொள்ளும் போது, கர்ப்பமாகாமலும், பால்வினை நோய்கள் பரவி விடாமலும் பெண் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தான் காதலித்த நபரையே திருமணம் செய்து கொண்டேன். நாங்கள் எங்கள் உறவு குறித்து நிச்சயமாக இருந்ததால், திருமணத்துக்கு முன்பே சேர்ந்து வாழ்ந்தோம். இப்போது எங்களுக்கு இரண்டு குழந்தைகள். குழந்தைகள் எங்களுடனேயே தூங்குவதால், எங்களுக்கென்று நாங்கள் தனியாக நேரத்தை ஒதுக்க வேண்டியிருக்கிறது.

மண வாழ்வில் ஈடுபடும் பெண்ணும், ஆணும் ஒருவருக்கொருவர் உடல் ரீதியாக மகிழ்ச்சியளிக்க வேண்டும். ஒருவரை ஒருவர் முழுமையாகத் திருப்தி அடையச் செய்வதுதான் ஆனந்தம். சில தம்பதிகள் 'செக்ஸ்' புத்தகங்கள், படங்களைப் பார்த்து இன்பத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். அதைத் தவறு என்று சொல்ல முடியாது.

பெண்கள் தங்கள் 'செக்ஸ்' விருப்பங்களைப் பேசினால், அவர்களைத் தவறானவர்களாகப் பார்க்கும் ஆண்களின் கண்ணோட்டம் மாற வேண்டும்.''

இவ்வாறு குஷ்பு பேட்டியளித்துள்ளார்.

## விடுதலைச் சிறுத்தைகள் எதிர்ப்பு



குஷ்புவின் கலாசார இழிவுப் பேட்டியைக் கண்டித்து, தி.நகரில் உள்ள தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முன்பாக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. பெண்களை இழிவு படுத்தும் வகையில் பேசிய குஷ்புவை தமிழகத்தை விட்டே வெளியேற்ற வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் கோஷமிட்டனர்.

துடைப்பம், செருப்பு உள்ளிட்டவற்றுடன் பெண்கள் ஏராளமான அளவில் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். "தமிழகத்தை விட்டு ஓடு'' எனக் கோஷமிட்ட போராட்டக்காரர்கள், துடைப்பம், செருப்பு என்பவற்றை நடிகர் சங்க வளாகத்துக்குள் தூக்கி வீசி எறிந்தனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர்.இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து அவர்களைப் பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

இதேவேளை, நடிகை குஷ்பு மீது பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. கற்பு குறித்து நடிகை குஷ்பு தெரிவித்துள்ள கருத்து, தமிழ் சமுதாயத்தை அவமதிப்பதாக உள்ளது என பா.ம.க. மகளிர் அணியைச் சேர்ந்த தீபம் ஜெயக்குமார் சென்னை எழும்பூர் நீதிமன்றில் அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அவர் தனது மனுவில் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் நடிகை குஷ்புவின் கருத்து உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கணவர் சுந்தர் சி மற்றும் குழந்தைகள் அவந்திகா, அனந்திகா ஆகியோருடன் குஷ்பு சிங்கப்பூர் சென்றிருந்தார். அவசர அவசரமாக சென்னைக்குத் திரும்பினார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கிச் சென்று கொண்டிருந்த போது, விமான நிலையத்தில் நின்ற பெண்கள் குஷ்புவை அடையாளம் கண்டு "குஷ்பு, குஷ்பு'' எனக் கூப்பிட அங்கு நின்ற சிலர் குஷ்புவைக் கண்டித்துக் குரல் எழுப்பினர். உடனே குஷ்பு குழந்தைகளுடன் வேகமாகச் சென்று காரில் ஏறிப் பறந்தார்.

இந்த நிலையில் குஷ்பு, நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்துடன் தொலைபேசியில் பேசினார்.தனது பேட்டி பற்றி விளக்கமளித்துத் தனக்கு ஆதரவு தரும் படி கேட்டுக் கொண்டார். ஆனால், இந்த விடயத்தில் நடிகர் சங்கம் தலையிடாது என்றும், தமிழகப் பெண்கள் பற்றிக் கூறியதற்காக வருத்தம் தெரிவிக்குமாறும் விஜயகாந்த் தெரிவித்ததாக சினிமா வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த நடிகை குஷ்பு, பெண்களின் கற்பு பற்றிய தனது கருத்துக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அப்பேட்டியில்,

"பெண்களின் பாலுணர்வு குறித்தான கருத்துக் கணிப்பு ஒன்றுக்காக வார சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டியளித்திருந்தேன்.அதில், பெண்கள் மீதான ஆண்களின் தற்போதைய பார்வை, எண்ணம் குறித்தான எனது கருத்துகளை மட்டுமே தெரிவித்திருந்தேன்.

அதில் தமிழ்ப் பெண்களைப் பற்றியோ, அவர்களது கற்பு குறித்தோ தவறாக நான் எதுவும் குறிப்பிடவில்லை. இழிவுபடுத்தும் வகையில் பேசவும் இல்லை. எனது கருத்துகள் திரிக்கப்பட்டுவிட்டன.

மும்பையிலிருந்து வந்திருந்தாலும், இன்றளவும் நான் ஒரு தமிழ்ப் பெண்ணாகத்தான் வாழ்ந்து வருகிறேன்.

எனக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுவதை அடுத்து,நான் சிங்கப்பூர் ஓடிவிட்டதாக சிலர் பேசுகின்றனர். சிங்கப்பூர் பயணம் 3 மாதத்துக்கு முன்பே திட்டமிடப்பட்ட பயணம். அவ்வாறு நான் பயந்து ஓடியிருந்தால், இப்போது பாதியில் திரும்பி வந்திருக்க மாட்டேன்.

ஆகவே, நான் எவரையும் இழிவுபடுத்திப் பேசவில்லை. நான் பேசியதில் எவருக்காவது மனம் புண்பட்டிருந்தால், அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.''- என்று தெரிவித்துள்ளார்.

இயக்குனர் தங்கர்பச்சானின் விவகாரத்தில், நடிகர் சங்கத்தில் ஆஜரான குஷ்பு அங்கிருந்த நடிக, நடிகையரிடம் மன்னிப்புக் கேட்டார்.

இத்துடன் இந்த விவகாரங்கள் முடியுமா? அல்லது தொடருமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**பீ. கவன்**



பெண்கள் துடைப்பத்துடன் ஆர்ப்பாட்டம்

# பித்தன் பதில்கள்



*செ. வைகுந்தன், வவுனியா.*

**கேள்வி: பித்தா! எம்மிலே சிலருக்கு இருவர் ஒற்றுமையாக இருப்பது பிடிக்குதில்லையே... ஒருவரை மற்றவருடன் கொளுவி சண்டை பிடிக்க வைத்து வேடிக்கை பார்க்கிறார்களே!.. இவர்களைத் திருத்த வழியே இல்லையா?**

பதில்: என்ன செய்வது... நமது சமுதாயத்தில் அப்படியும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். என்னை எடுத்துக்கொள்ளுங்கள்... படிக்கும் காலத்தில் எனது வகுப்பில் சுரேஷ் என்று ஒரு நண்பன் இருந்தான். இவனுக்கு வேலை எப்போதும் என்னையும் - எனது அப்பாவையும் கொளுவி வைத்து அடி வாங்கித் தருவதுதான். அவன் எப்போதும் முதலாம் பிள்ளையாக வருவான். நான் இரண்டாம் பிள்ளை தான். இதனால் எனக்கும் எனது அப்பாவுக்கும் எப்போதும் கொளுவல் வரும்... ஆனால் அவனோ எவ்வளவு சொன்னாலும் திருந்தினபாடாக இல்லை... என்ன செய்வது.. இப்படி எல்லா இடத்திலேயும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்...





*கு. வாசுகி, திருநல்வேலி*

**கேள்வி: பித்தா! உமது பிள்ளைகளுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்கும் பழக்கம் உம்மிடம் இருக்கிறதா... என்ன?**

பதில்: சீ... அப்படியான கெட்ட பழக்கம் என்னிடம் கிடையவே கிடையாது. ஆனால், எனது மனைவி அதில் சுத்தமோசம்.

*வ. தனுஷன், மல்லாவி.*

**கேள்வி: பித்தன் அங்கிள்! எனது அப்பா.. உன்னைவிட சின்னவர்களை ஒருநாளும் அடிக்கக் கூடாது -என்று அடிக்கடி எனக்கு புத்திமதி சொல்கிறார் ஆனால், அவர் மட்டும் எனக்கு நெடுக அடிக்கிறாரே... நானும் அவரை விட சின்னவன் தானே?**



பதில்: அடே சின்னப்பையா.... உனக்கு உனது அப்பா அடிக்கிறாரே... அது மகாதவறு. மாறாக உதைக்க வேணும்... அப்பதான் நீ இப்படியான இடக்கு மடக்கு கேள்வியள் கேட்கமாட்டாய்.

*வ.தணிகாசலம், ஆலமச்சேனை*

**கேள்வி: பித்தா! இனியாவது எமது நாட்டில் 5 வருடங்களுக்கு ஒரு தேர்தல் வருமா?**

பதில்: சாத்தியப்பாடே கிடையாது. ஏனென்றால் தற்போது 3ஆவது பெரிய கட்சியாக ஜே.வி.பி - ஹெல உறுமய என்பன மாற்றம் பெற்று வருகின்றன. எனவே பெரிய கட்சிகளாக உள்ள சுதந்திரக் கட்சியும் - ஐ.தே.க என்பனவற்றில் எந்தக் கட்சிவென்றாலும் ஏதாவது ஒரு 3ஆவது கட்சியுடன் இணைந்துதான் ஆட்சி அமைக்க முடியும். ஆனால், இந்த மூன்றாவது கட்சிகள் கூட்டணியில் இருந்துகொண்டு பெரிய கட்சிகளை விழுங்கப் பார்க்கும்... அதற்கு பெரிய கட்சிகள் இடம்தரா.. இதனால் கூட்டணி உடையும்... அடிக்கடி தேர்தல் வரும்... இல்லையென்று பெரிய கட்சிகள் தனித்து ஆட்சி அமைத்தாலும் பெரும்பான்மை இருக்காது... பிக்கல் பிடுங்கல்தான்... எனவே எப்போ சிங்கள மக்கள் இந்த மூன்றாவது கட்சிகளை ஒதுக்கிவிட்டு... பெரிய கட்சி ஒன்றுக்கு முழு ஆதரவைக் கொடுக்க முன்வருகிறார்களோ அப்போதான் 5 வருடத் தேர்தல் சாத்தியமாகும். ஆனால் அது சாத்தியப்படுமா என்பது பெரிய (?) யே!

*த. கவியானந்தன், புளியங்குளம்.*

**கேள்வி: அன்பின் பித்தா! பெண்களிடம் சீதனம் வாங்கி திருமணம் செய்யும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

பதில்: முன் ஜாக்கிரதை முத்தண்ணாக்கள் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்றால், திருமணத்தின் பின்னால், தான் உழைப்பதை மனைவியின் கையில் கொடுத்து விட்டு 5 க்கும் 10க்கும் அவளை கெஞ்சிக் கொண்டிருப்பதற்கும் தோய்த்து, சமைத்து, அடிமைச்சேவகம் பண்ணுவதற்கும் அட்வான்ஸாக மொத்தமாக முன்னாலேயே கறந்துவிடுகிறார்களே...

*சி. சிறிநாத், கோணாவில்.*

**கேள்வி: ஹாய் பித்துகுட்டி! காதலை அளப்பதற்கு என்று ஒரு கருவி 'அந்நியன்' படத்தில் வந்தது போல் வந்துவிட்டால்... ஏமாற்றும் பெண்களின் நிலைமை எப்படி இருக்கும்?**

பதில்: கண்ணு... இதெல்லாம் படத்தில் பார்ப்பதற்குத்தான் நன்றாக இருக்கும்.. உண்மையிலேயே கண்டு பிடிக்கப்பட்டு விட்டாலும் அது வெளிநாட்டுப் பெண்களுக்கென்றால் சாத்தியப்படும்.. நம்ம பெண்களுக்கு இதெல்லாம் ஜுஜுபி... அந்த இயந்திரத்துக்கே அல்வா கொடுத்து விட்டு... மாற்று வசதிகளில் குதித்து விடுவார்கள்.. நமது பொண்ணுங்களா... கொக்கா...

*சி. நித்தியா, காரைகாம்பிகைக் குளம்*


**கேள்வி: பித்தண்ணா! சுனாமி பொதுக் கட்டமைப்பைக் கூட தரமுடியாத பேரினவாதத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

பதில்: வெறும் மா உருண்டையை தருவதற்கே... இவ்வளவு தாம்... தூம் போடும் பேரினவாதம்... மோதகத்தைத் தருவதென்றால் மட்டும் கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கவா போகிறது... எல்லாம் வேஸ்ட்...

*த. வேதநாயகி, தெஹிவளை*

**கேள்வி: பித்தா! ஒரு மனிதன் தாய்க்கு மகனாக, மனைவிக்கு கணவனாக, பிள்ளைகளுக்கு அப்பாவாக, அலுவலகத்தில் ஊழியனாக என்று எத்தனை முகங்களை மாற்றவேண்டியிருக்கிறதே.. இது பற்றி என்ன நினைக்கிறீர்?**

பதில்: இதுமட்டுமா என்னை எடுத்துக் கொள்ளுங்கள்... காலையில் கிரைண்டராக, மதியத்தில் குக்கராக, பின்னேரத்தில் வாஷிங்மெஷினாக எல்லாம் மாறவேண்டியிருக்கிறதே.. இதுதான் வாழ்க்கை..





*மு. சிவருபன், வவுனிக்குளம்.*

**கேள்வி: அன்பின் பித்தா! முன்பு ஒரு தடவை நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலளித்த போது, நடிகர் விஜயகாந்த் தமிழரின் வீரத்தைப் பற்றி படங்களில் பேசுகிறார் - நேரிலே பேசினால் தடா, பொடா சட்டங்களின் கீழ் சிறைக்குள் போட்டுவிடுவார்கள் என்று சொன்னீர்கள். ஆனால், அண்மையில் அவர் கூறியிருக்கிறாரே பிரபாகரன் என்று வெற்றி பெறுகிறாரோ அன்றுதான் தனது பிறந்த நாளைக் கொண்டாடுவேன் என்று இதற்கு என்ன சொல்கிறீர்?**

பதில்: நடிகர் விஜயகாந்த் தலைவர் பிரபாகரன் மீதும்,இலங்கைத் தமிழ் மக்கள் மீதும் தீவிர அன்பு கொண்டவர்தான். தனது மூத்த மகனுக்கு பிரபாகரன் என்றுதான் பெயர் வைத்திருக்கிறார். இதற்குப் பல வருடங்களுக்கு முன்பே இருந்து அவர் இதே காரணத்திற்காகப் பிறந்தநாளைக் கொண்டாடாமல் இருந்து வருகிறார். ஆனால், இதுவரை காலமும் கமுக்கமாக இருந்தவர் இப்போ அங்கே தடா பொடா சட்டங்கள் வலுவற்றவையாக ஆக்கப் பட்ட பின்புதான் இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கிறார். அவர் இப்போ நடிகர் மட்டுமல்ல, முழுநேர அரசியல்வாதியாகவும் மாறிவிட்டார். வை. கோபால்சாமி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசியதால் பொடா சட்டத்தின் கீழ் சிறையடைக்கப்பட்டார். அது அவரின் செல்வாக்கை அதிகரித்தது. அதேபோன்ற ஒரு நிலை தனக்கும் வந்தால் தனது செல்வாக்கும் அதிகரிக்கும் என்று நினைக்கிறாரோ என்னவோ...



*கெ. வசுதேவன், வவுனியா.*

**கேள்வி: பித்தா! தினமும் எனது மனைவி என்னை போட்டு அடிஅடியென்று அடிக்கிறாள். நானும் வலிதாங்க முடியாமல் ஐயோ அம்மா என்று கத்துகிறேன். இதனைக்கேட்டு அயல்வீட்டுக்காரர்கள் என்னைக் கேவலமாகப் பார்க்கிறார்கள். எனது மனைவி என்னை அடிக்காமல் பண்ண புத்திமதி சொல்லுமேன் பிளீஸ்?**

பதில்: ஐயையோ... அதெல்லாம் முடியாத காரியம். நீர் வேண்டுமென்றால் ஒன்று செய்யும். கொஞ்சம் மிமிக்ரி (வேறு குரலில் பேசும் தகைமை) கற்றுக் கொள்ளும். உமக்கு உமது மனைவி அடிக்கும்போது அவளது போன்ற குரலில் ஐயோ.. அம்மா என்று கத்தும். இதனால் அயல்வீட்டுக்காரர்கள் நீர்தான் உமது மனைவியைப் போட்டு அடிப்பதாக நினைப்பார்கள். மனைவியும் தனது மரியாதை போவதாக நினைத்து உம்மை அடிப்பதை நிறுத்திவிடுவாள்... எப்படி ஐடியா..

*எஸ். ரஞ்சித், புளியங்குளம்.*

**கேள்வி: டியர் பித்தா! பெற்றோரின் பாசம் பெரிதா? அல்லது காதலியின் அன்பு பெரிதா?ஏ பெற்றோருக்காக காதலை விடுவதா அல்லது காதலுக்காக பெற்றோரை விடுவதா?**

பதில்: ஆற அமர யோசித்துப் பார்த்ததில் காதலியின் அன்புதான் பெரியது. ஆனால், காதலுக்காக பெற்றோரை விடுவது கூடாது. ஏனென்றால், ஒருவனுக்கு வாழ்க்கையில் காதல் எத்தனை தடவையும் வரலாம்... ஆனால் பெற்றோர்... அடுத்து உம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கியவர்களை விட்டுவிட்டு கண்டவன் பின்னால் ஓடுவது முறையோ...

*நா. லோஜி, சுதுமலை*

**கேள்வி: அன்புள்ள பித்து! முத்தம் எப்போது கசக்கும்?**

பதில்: ஒரு வாரமாக பல்லு மினுக்காமல் விடும்போது.


*தே. மில்டன், அக்கராயன்*

**கேள்வி: பித்தா ஜோக் ஒன்று சொல்லுமேன் பிளீஸ்?**

பதில்: நள்ளிரவில் வீட்டுக்குள் நுழைந்த திருடனை அந்த வீட்டுப் பெண் அடித்து நொறுக்கி காலை முறித்து விட்டாள்.

தகவல் அறிந்து அவளது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் திருடனைக் கைது செய்தனர். அந்தப் பெண்ணைப் பார்த்த இன்ஸ்பெக்டர் 'எப்படியம்மா இவ்வளவு தைரியம் உனக்கு வந்தது' என்று வினவினார்.

அதற்கு அந்தபெண் சொன்னாள் 'வந்தவனை நான் திருடன் என்று நினைக்கவில்லை. எனது கணவர்தான் வெளியே சென்றுவிட்டு நடுச்சாமத்தில் வீட்டுக்கு வருகிறார் என்று நினைத்துப் போட்டு தாக்கிவிட்டேன்' என்றாள்.





## டனிப்போர்.....

( 16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் இ.தொ.கா விற்கு எத்தனை டிக்கட் கிடைக்கும்? மலையக மக்கள் முன்னணிக்கு எத்தனை டிக்கட் கிடைக்கும்? இதில் யார் காலை யார் வாரி விடுவது? இப்படி இழுபறிநிலையும், போட்டியும் இப்பொழுதே ஆரம்பித்து விட்டன.இந்தப் போட்டியினால் மலையக மக்கள் தலையைப் பிய்த்துக் கொண்டு நிற்கின்றனர்.

இந்த இரு தலைவர்களுக்கிடையிலான போட்டியும், பொறாமையும் மலையகத்தில் இன்று பெரும் சிக்கலைத்தான் ஏற்படுத்தியுள்ளன.

இந்த மலையகத் தலைவர்கள் தமது சொந்த சுய நலன்களுக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும் மலையக வாக்குகளைப் பேரம் பேச ஆரம்பித்து விட்டனர். தேர்தல் சந்தையில் விற்கப்படும் அப்பாவிகளான மலையக மக்கள் கடைசியில் சப்பிப் போட்ட முருங்கைக்காயாக துப்பி வீசப்படுவது தான் மிச்சம்.

இம்முறை மலையக மக்கள் தமது வாக்குகளை விவேகமாகப் பயன்படுத்தினால், நல்ல பலன் கிடைக்கும். மக்களுக்காகத்தான் தலைவர்களேயன்றி, தலைவருக்காக மக்கள் என்ற நிலைமையை மாற்றி அமைத்தால் மட்டுமே விடிவு ஏற்படும்.

## டென்னிஸ் ஆட்டத்தில் ஆபாசம்







டென்னிஸ் ஆடும் வீராங்கனைகள் இப்படியும் விளையாட்டுக் காட்டலாமா? இப்படி டென்னிஸ் ஆடினால் ரசிகர்கள் ஆட்டத்தை ரசிப்பார்களா? அல்லது ஆபாசத்தில் மெய்மறப்பார்களா? இங்கே ஆட்டத்தை விட ஆபாச உடையில் தனது ரசிகர்களின் கவனத்தை தன்பக்கம் இழுக்கும் செரினா வில்லியம்ஸ்.

விட்டேனா பார் என்று இன்னொரு டென்னிஸ் வீராங்கனையான 'பீதனி', செரினாவுக்குச் சவால் விடுகிறார்.

ஆளைப் பார்க்க வேண்டாம் எனது ஆட்டத்தை மட்டும் நீங்கள் பார்த்தால் போதும் என்று கூறுகிறார் இந்திய டென்னிஸ் இளம்புயல் மிர்சா.

# ரோபோ நண்பன்

ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பக்கூடிய 'ரோபோ' நண்பனை ஜப்பானின் கனரக கைத்தொழில் நிறுவனங்களில் ஒன்றான 'மிட்சுபிசி' நிறுவனம் சந்தைப்படுத்தி உள்ளது.

ரோபோ நண்பனின் தோற்றம் உங்களை சில வேளை சங்கடத்தில் ஆழ்த்தலாம். ஆனால், அவனுடன் பழகிப் பாருங்கள் . நிச்சயம் இந்த ரோபோ நண்பன் உங்கள் மனங்களைக் கொள்ளை கொள்வான் என்று கூறுகிறது மிட்சுபிசி நிறுவனம்.

இணைய தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்த 'ரோபோ' நண்பனுக்கு 'வக்கமாறு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"நீங்கள் ஒரு மனிதனுடன் உறவு கொள்ளவதைப்போல இந்த நண்பனுடனும் உறவு கொள்ளமுடியும். மிகக்கடுமையான உழைப்பினால் கிடைத்த அறுவடைதான் இந்த நண்பன் என்று இதைத் தயாரித்த தொழில் நுட்பக் குழுவின் தலைவர் 'கென்லுனிசி' சொல்கிறார்.

பத்துப்பேரை அதனால் அடையாளம் கண்டு கொள்ளமுடியும். அத்துடன், அவர்களை பெயர் சொல்லியும் அழைக்கும். வீட்டின் அங்கத்தவர்கள் வெளியில் இருந்து வரும் போது இனிமையான குரலில் அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி வரவேற்கவும் அதற்குத் தெரியும்.தனது இனிமையான குரலினால் தொலைபேசி அழைப்பு ஒன்றைப் பரிமாறவும் வீட்டுக்கு வந்துள்ள ஈ-மெயிலை வாசிக்கவும் அதனால் முடியும்.

காலை விடிந்ததும் உங்கள் கட்டிலுக்கு அருகில் வந்து உங்களை நித்திரையால் எழுப்பவும், அன்றைய வேலைகளை ஞாபகமூட்டவும் தன்னுடன் இலகுவான உடற்பயிற்சிகளில் ஈடுபட வருமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கவும் கூடிய



தொழில்நுட்பத்திறன் அதற்கு உண்டு.

உங்கள் வீட்டுக்கான பாதுகாப்புக் கடமையையும் அது திறம்படச் செய்யக்கூடியது. ஆனால், இந்த நண்பனின் பெறுமதிதான் மிகக் கூடியது.

அண்மையில் இத்தகைய 10 ரோபோ நண்பர்கள் ஜப்பானின் தலை நகரான டோக்கியோவில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கான மாதாந்த பராமரிப்புச் செலவு 11000/- ரூபாவாகும்.

# மான் ஆட்டம் தங்க மயிலாட்டம்

அந்த நட்சத்திர ஹோட்டல் தமிழ் நாட்டின் அண்ணாசாலையில் அமைந்துள்ளது. அன்று ஞாயிற்றுக்கிழமை ஹோட்டலில் 'இளமை' ஊஞ்சலாடியது. அழகான யுவதிகள், கம்பீரமான இளைஞர்கள், அனைவரும் ஆசைதீர ஆடிப்பாடி மகிழ அங்கே வந்திருந்தார்கள்.



அவருக்கும் ரசிகர் கூட்டம் அதிகம் இருந்தது. அது ரசிகர் கூட்டம் அல்ல; இளமைப் பட்டாளம்.

எல்லோருக்கும் படு உற்சாகம். ஆடல் பாடல்களில் அப்படி ஒருவேகம்.

படங்களைப் பார்த்தாலே புரியுமே!

சிறப்பான இசை நிகழ்ச்சியொன்று அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கங்களின் அழகு அப்படியே தெரியும்படி உடையணிந்த பெண்கள, முழங்கால் தெரிய ஷோட் ஜீன்ஸ் (Short Jeans) அணிந்த கல்லூரிப் பெண்கள், நவநாகரிக உடை உடுத்திய நடுத்தரவயதுப்பெண்கள். இப்படி வண்ணவண்ண நிறங்களில் அழகு வழிந்தோடியது.

'பொப்' பாடல்களைப் பாடிக்கொண்டே இறுக்கமான ஜீன்ஸ் அணிந்து உள்ளே படையெடுத்தனர் இளைஞர்கள். கன்னியரின் கைகளில் 'வைன்' நிரம்பிய கிளாஸ்கள். வைனை மெல்லமெல்ல சுவைத்துக் கொண்டே காற்றில் கலந்துவந்த



இசைக்கேற்ப தமது இடுப்புகளை அசைத்து ஆட ஆரம்பித்தனர்.

முப்பையிலிருந்து வந்திருந்தார். வி.ஜே. ஹுசெய்ன். அவரை நோக்கி வந்த அழகி ஒருத்தி அவரின் அருகே நெருக்கமாக அமர்ந்து பேசியபடி இருந்தார். செல்லமாய் தனது கைவிரல்களால் ஹுசெய்னின் உதடுகளைத் தடவி அந்தச் சூழ்நிலைக்கு மெருகேற்றினார். அந்த இளம் தேவதைகள் ஶ்ரீசெய்ன் எங்கு சென்றாலும் அவரைத் தேடிச்சென்றுவிடுகிறார்களே. அவரிடம் இருக்கும் அந்த இரகசியம்தான் என்னவோ?

இசை கொஞ்சம் கொஞ்சமாக உச்ச ஸ்தாயியில் ஏறிக்கொண்டுபோக அங்கு இடுப்புகளை அசைத்து இளமை இதோ இதோ என்று மௌன அழைப்பு விடுத்துக்கொண்டிருக்க இளைஞர்களும் யுவதிகளும் வேகமாக தமது உடல்களை அசைத்து ஆடத்தொடங்கினர்.

கனடாவில் இருந்தும் ஒரு விருந்தினர் வந்திருந்தார்.

# ஐந்து வயதுச் சிறுவன் 'வான்' ஓட்டிச் சாதனை

கின்னஸ் சாதனையை எட்டிப்பிடிக்க 100.கி.மீ தூரம் தனியாக 'வான்' ஒன்றை ஓட்டி, சாதனைக்கு வயது ஒரு தடையல்ல என்று நிரூபித்துள்ளான் ஐந்து வயதுடைய சிறுவன் ராம்ஜி.

கார் ஓட்டுவதில் அலாதி விருப்பமுடைய ராம்ஜி தனது தந்தையின் முயற்சியினால் திருச்செந்தூரிலிருந்து தூத்துக்குடிவரை 100கி.மீ தூரம் 'வான்' ஒன்றை ஓட்டிச் சென்றுதிரும்பி சாதனை படைத்துள்ளான்.

இந்தச் சாதனை விழாவில் தமிழக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உட்பட பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர். சிறுவன் சென்ற இடமெல்லாம் பொதுமக்கள் அவனை வரவேற்று தங்கள் அன்பை பரிமாறிக்கொண்டனர்.


## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

*மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.*

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஒக்டோபர் 22 – 28 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

ஒக்டோபர் 8 – 9
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

ஒக்டோபர் 10 -15
A.S.N. [illegible]
392/A, [illegible]
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



## Scholarship Up To 80%

Ministry of Education - Singapore

'O' & 'A' Level Candidates are invited to apply !



18TH INTAKE
REGISTRATION IN PROGRESS

*Important points to note*

- ☑ *Job after Graduation*
- ☑ *Permanent Residency (Green Card)*
- ☑ *Part-time work to meet expenses*
- ☑ *Easy Visa Procedure*
- ☑ *Close to Home*

**Universities**
National University of Singapore (**NUS**)
Nanyang Technological University (**NTU**)
Singapore Management University (**SMU**)

**Polytechnics**
Temasek Polytechnic
Republic Polytechnic — Singapore Polytechnic
Ngee Ann Polytechnic — Nanyang Polytechnic

**SINGAPORE EDUCATION SERVICES (PVT) LTD.**
3rd Floor, Confidence Building, No 05, St Anthony's Mawatha, Colombo 03, Sri Lanka.
Tel:94-11- 2564149, 94-11-2564008 Fax:94-11- 2370980 E-Mail: singedu@sltnet.lk
OFFICES IN SINGAPORE, MALAYSIA, MALDIVES & INDIA

Optimum 2

சுடர்ஒளி

ஒக்டோபர் 02 - 08, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சி வெற்றிபெறுமா?

பயங்கரவாத இயக்கப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் இடம்பெறச் செய்வது குறித்து தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

அதேசமயம் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் புலிகளின் தூதுக் குழுவினர் பயணம் செய்வதற்கும் ஒன்றியத்தினால் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் திடீர் முடிவு இலங்கையில் வாழும் தமிழர்களையும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ஆத்திரம் கொள்ள வைத்திருக்கிறது.

சமாதான முயற்சிகளில் இருந்து விலகிச்செல்லும் இலங்கை அரசுமீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டிய இன்றைய நிலையில் தற்போது காரியங்கள் எதிர்மாறாக நடைபெறுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலைமை.

2003 ஜூனில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாத டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உள்வீட்டு ஏற்பாடாக உருவாக்கப்பட்ட இணைத் தலைமைகள் நான்கு. அவற்றில் இந்த ஐரோப்பிய ஒன்றியமும் ஒன்று.

ஏனைய நாடுகள் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே.

இந்தத் தலைமைக்குள் தற்பொழுது இந்தியாவையும் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவையும் இணைத்துக்கொள்ளும்படி நோர்வேக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பொழுது ஆட்சியில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசு புலிகளுக்கு எதிராக பின்னிய சர்வதேச வலைப் பின்னலில் முக்கிய பாத்திரம் தான் இந்த இணைத் தலைமை.

உதவும் நாடுகளின் இணைத் தலைமை என்ற கோதாவில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இந்த நான்கும் அளவுக்கு அதிகமாகதலையை நீட்டித் தம்மை சர்வதேசக் குரலாகக் காட்டுவதற்கு எத்தனித்து வருகின்றன.

ஒன்றின்பின் ஒன்றாக நடைபெறும் சம்பவங்கள் இதனை நிரூபிப்பவையாக அமைகின்றன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையைச்சாட்டியே தற்போது இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. கதிர்காமர் கொலையைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதற்கு எந்த ஓர் ஆதாரமும் இல்லை. புலிகள் இதனை மறுத்தும்விட்டார்கள். தாமாகவே ஒரு முடிவை எடுத்துக்கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் செயற்படுகிறது. **இலங்கை இனப்பிரச்சினையின் யதார்த்த நிலையை ஒன்றியம் புரிந்து கொள்ளாமல் இலங்கை அரசின் தாளத்துக்கு ஆடுகிறது.**

**உண்மையில் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டியது இலங்கை அரசுக்கே. புலிகளுக்கு அல்ல.**

கடந்த மூன்றரை வருடமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் அனைத்தும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பேரினவாதக் கூட்டினால் கிடப்பில் போடப்பட்டுவிட்டன. இந்த நிலையில் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதை விடுத்து புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிப்பது பேரினவாதக் கூட்டுக்கு மேலும் உற்சாகத்தையே கொடுக்கும். மீண்டும் யுத்தம் மூளவே வழிவகுக்கும்.

லக்ஷ்மன் கதிர்காமர் உயிருடன் இருந்த காலத்தில் சர்வதேச அரங்கில் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டார். இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டார். [illegible] காரணமாக இருந்தார்.

இப்போது [illegible] அழுத்தங்கள் எதுவும் [illegible] இல்லை. [illegible] மாற்றம் இல்லை.

# மஹிந்தவின் இரட்டை நாக்கு!

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட இணைத்தலைமைகள் இலங்கை நிலைவரம் குறித்து அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டன.

அந்த அறிக்கையில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மட்டுமே தீர்வு என குறிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைதித்தீர்வை நோக்கி முன்னேறுவதை தடுக்கும் விதத்தில் அறிக்கைகள் விடுவதையோ அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ தவிர்த்துக்கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் அவை வலியுறுத்தியுள்ளன.

இணைத்தலைமை நாடுகளின் இனப்பிரசசினை பற்றிய இந்த இறுக்கமான நிலைப்பாட்டை உள்வாங்கிக்கொண்ட ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது இக்கட்டான நிலையில் இருந்து வருகிறார். இணைத்தலைமை நாடுகளைப் பகைத்துக்கொண்டு நிதி உதவி பெறமுடியாது. அதனால்தான் ஒற்றையாட்சியின்கீழ் சமஷ்டி என்றும் தற்போது கதை அளக்கிறார்.

உனக்கும் பெப்பே, உனது அப்பனுக்கும் பெப்பே என்று ஏமது நாட்டு வழக்கில் சொல்வார்கள். அதைப்போலவே இணைத்தலைமை நாடுகளையும், தமிழ் மக்களையும் ஆசுவாசப்படுத்தி 'பெப்பே' காட்ட மஹிந்த மேற்கொள்ளும் முயற்சிதான் இது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமிழ் மக்களது கோரிக்கைகள் அனைத்தையும் தூக்கி எறிந்து ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் தேர்தல் ஒப்பந்தம் செய்துவிட்டு இப்போது இப்படிச் சொல்கிறீர்களே என்று யாராவது மஹிந்தவிடம் கேட்டால் என்ன பதில் சொல்லுவார் அவர்?

"அது தேர்தல் தந்திரம். அவர்களின் வாக்குகளை வென்றெடுப்பதற்கான ஒரு முயற்சி. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம்"- இப்படித் தான் கூறுவார் அவர்.

அதேசமயம், ஜே.வி.பியினருக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் என்ன சொல்லுவார்?

"தேர்தல் முடிந்து நான் ஜனாதிபதி கதிரையை அலங்கரிக்கும் போது உங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். தடம்புரள மாட்டேன்; பயப்படவேண்டாம்"- என்று அவர்களுக்குச் சொல்லுவார். அவருக்கு இரட்டை நாக்கு.

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்பது போல தமிழ் மக்கள் ஏற்கனவே சூடு கண்டவர்கள். ஆதலால் ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### ரணில் விக்கிரமசிங்க

தமிழ் இனத்தின் காதுக்குப் [illegible] பூட்டும் மஹிந்தவின் [illegible]. தமிழ் மக்கள் சிரித்துக்கொண்டிருக்க, ஐ.தே.கட்சி [illegible] அதன் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் [illegible]

இலங்கையை வலியுறுத்தவும் தவறுவதில்லை. ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன் என்றே சொல்லி வருகிறார். 'சமஷ்டி' என்ற பதத்தை தென்னிலங்கை மேடைகளில் பயன்படுத்த அவர் தயங்குகிறார்.



### ஸ்ரீல.சு.கட்சி - ஐ.தே. கட்சி

ஸ்ரீல.சு. கட்சியின் வேட்பாளர் மஹிந்தவை அன்று கொல்லும் வியாதியாகவும், ஐ.தே. கட்சியின் ரணிலை நின்று கொல்லும் (மெல்லமெல்ல) வியாதியாகவுமே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள்.

தனது சுயலாப அரசியலுக்காக சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளை மஹிந்த ராஜபக்ஷ அணிதிரட்டி தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை வெளிப்படையாகவே கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்.

மறுபுறத்தில் ஐ.தே.கட்சியோ சமஷ்டி, அதிகாரப்பகிர்வு என்றெல்லாம் கதை அவிழ்த்து தமிழ் மக்கள் மீது அன்பைப் பொழிவது போல் காட்டிக்கொண்டு தென்னிலங்கை வாக்காளர்களைச் சமாளிப்பதற்காக தமிழர் விரோதப் போக்கையே அவர்கள் முன்னால் [illegible].

இணைத்தலைமைகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நேர்மையாகச் செயற்படவில்லை என்ற எண்ணம் தமிழ் மக்களின் மனதில் ஆழமாக வேரூன்றி

விட்டது. பிரச்சினையைத் தீர்ப்பதாக காலத்துக்குக் காலம் பல்வேறு கருத்துகளை முன்வைத்து வீணே காலத்தை இழுத்தடிக்கிறார்கள். இவர்கள் ஒருபோதும் பிரச்சினையைத் தீர்த்துவைக்கப்போவதில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு மேலும் இழுத்தடிக்கப்படக்கூடாது.

எம்மை எமது வழியில் செல்லவிடுங்கள் என்பதே தமிழ் மக்கள் சர்வதேசத்துக்கு விடுக்கும் கோரிக்கையாகும்.

### சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள்

நியாயமான தீர்வு ஒன்றை தமிழ் மக்களுக்கு வழங்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மறுப்பதன் மூலம் தமிழ் மக்கள் கோரும் தனிவழி - தனிநாட்டுக் கோரிக்கை நியாயமானது தான் என்பதை சர்வதேச சமூகத்துக்கு சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் புட்டுக்காட்டுகிறார்கள்.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும், உரிமைக் குரலையும், சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் தமது செயற்பாடுகள் மற்றும் பேச்சுகள் மூலம் சர்வதேசத்தின் முன் நியாயப்படுத்தி நிற்கிறார்கள்.

### தனிநாடு

தமிழ் மக்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெவ்வேறு வடிவங்களில் உரிமைப்போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றனர். அவர்கள் இன்று தமது தாயக பூமியில் தமது தனித்துவத்தைப் பேணிவாழும் இனமாக வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழீழப் போராட்டத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட [illegible] இழந்து நிற்கும் இந்த மக்கள் இராணுவ [illegible] ஆக்கிரமிப்பு [illegible] அந்தர வாழ்க்கை நடத்தும் லட்சக்கணக்கான மக்களுடன் இணைந்து தமது

தாயகமண்ணில் மொழி மற்றும் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்து வாழவழிதேடிக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகிவிட்டது. ஆனால், இந்த மக்களின் இலக்கு நோக்கிய பயணத்தை சர்வதேசம் தடுத்து நிற்கிறது.

தமிழ் மக்களுக்கு

### இன்று

* எல்லைகளுடன் கூடிய தனி நிர்வாக பிரதேசம் உண்டு.
* நிர்வாகக் கட்டுமானங்கள் உண்டு.
* முப்படைகள் உண்டு.

சுருங்கக் கூறினால் தமக்கென ஒரு தனி அரசை நிறுவுவதற்கு வேண்டிய சகல கட்டமைப்புகளும் அவர்களிடம் உண்டு.

இவற்றைக் கண்டு சகித்துக்கொள்ளமுடியாத சிங்கள பௌத்த மேலாண்மைவாதம், இந்த நாட்டின் எல்லைகளை பாதுகாத்துக்கொள்ளமுடியாத இராணுவம் இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்று எதிர்கால ஜனாதிபதியாக வருவதற்கு காத்துநிற்கும் மஹிந்தவுக்கு ஆலோசனை கூறுகிறது. அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாக எல்லைகளை பிடுங்கி எடுத்து தென்னிலங்கை நிர்வாகத்துடன் அவற்றை இணைக்க முடியாத இராணுவம் எமக்கு வேண்டாம் என்ற எண்ணக் கருதான் இந்த ஆலோசனையின் பின்னுள்ள சிந்தனையாகும்.

தமது கட்டுப்பாட்டில் உள்ள இந்த எல்லைகளை தமிழர் தாயகத்தின் இராணுவக் கட்டுப்பாட்டு எல்லைகள் வரை விஸ்தரித்து தமிழீழ அரசை அமைப்பதற்கு தமிழ்த் தலைமை தயாராகக் காத்திருக்கிறது. போர் என்றால் போர் என்று சிங்கள தேசத்துக்கு சவால் விடுக்கும் நிலையில் பாய்வதற்குத் தயார் நிலையில் அது காத்திருக்கிறது. ஆனால், சர்வதேசம் அதைத் தடுத்து நிற்கிறது. முட்டுக்கட்டையாகக் குறுக்கிடுகிறது.

அது தமிழ் மக்களைப் பார்த்து என்ன சொல்கிறது? **'பிரிவினை வேண்டாம். அமைதி வழியில் அதிகாரப் பரவலின் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் இணங்கி வாருங்கள்' என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.**

ஆனால் இது சாத்தியமாகுமா? சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு தனிநாடுதான் ஒரேவழி என்பதை காலப்போக்கில் நிச்சயம் புரிந்துகொள்ளும். ஆம், தமிழ் மக்கள் தமது இறுதி இலக்கான தனிநாட்டை அமைப்பதற்கு இப்போது ஒரேயொரு தடையாக உள்ள சர்வதேசத்தின் அழுத்தத்தை அகற்றுவதற்கு இந்த மேலாண்மைவாத சக்திகளின் அடக்குமுறை செயற்பாடுகள் தான் உந்துசக்தியாக அமையப்போகின்றன.

- நேதாஜி -

# முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் சூடுபிடித்து விட்டது. இந்த வருடமே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து, தேர்தல் பிரசாரப் பணிகளை தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஆரம்பித்துவிட்டன.

இந்த இரு கட்சிகளின் பிரசாரப் பணிகளில் ஓர் அங்கமாக, ஏனைய அரசியல் கட்சிகளினதும், தொழிற்சங்கங்களினதும் மற்றும் பொது அமைப்புகளினதும் ஆதரவைப் பெறும் நடவடிக்கை அமைந்துள்ளது. இந்த வகையில் ஜே.வி.பி. யினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் ஆதரவு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிட்டியுள்ளது.

இந்த இரு கட்சிகளினதும் ஆதரவு உட்பட இன்னும் 25 கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த வரிசையில் இன்னும் சில கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இரு பிரதான கட்சிகளும் தீவிரமாய் உள்ளன. இவற்றுள் முஸ்லிம் கட்சிகளும் அடங்குகின்றன. அவற்றுள் ஒன்று தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ். இந்தக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காக இரு பிரதான கட்சிகளின் தூதுவர்களும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுமா?**

இந்தத் தேர்தலில் தமது ஆதரவை எந்தக் கட்சிக்கு வழங்குவது என்ற தீர்மானத்தை எடுக்கும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளது. இதன் முதல் கட்டமாக வன்னியில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் நடத்தியது.

முன்னாள் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் வன்னி மாவட்ட அமைப்பாளருமான நூர்தீன் மசூர் தலைமையில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர்.

இதில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம், தேர்தலில் போட்டியிடும் இரு கட்சிகளையும் சாடினார். ''மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு கட்சிகளினாலும் முஸ்லிம்கள் எந்த நன்மையும் அடையவில்லை. முஸ்லிம்கள் மத்தியில் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி, வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற பின்பு, முஸ்லிம்களின் நலனில் அக்கறை செலுத்த தவறி விடுகின்றனர். இது இரு பிரதான கட்சிகளுக்கும் பொருந்தும். ஆகவே தான், நாம் இந்தத் தேர்தலில் விழிப்புடன் இருக்க வேண்டும். சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.'' என்று அவர் கூறினார்.

''முஸ்லிம்கள் தொடர்பான சரியான கொள்கைகளைக் கொண்டிருக்கும்வேட்பாளருக்கே எமது ஆதரவு கிடைக்கும். இல்லையேல் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் முடிவை எடுக்கும். குறைந்தது ஐந்து லட்சம் வாக்குளை எம்மால் பெற முடியும்'' என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பான முடிவுகளை எடுக்க இரு பிரதான கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்பார்த்து நிற்கிறது முஸ்லிம் காங்கிரஸ். அதில் முஸ்லிம்கள் தொடர்பாக சரியான கொள்கையைக் கொண்டிருக்கும் வேட்பாளருக்கே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு கிடைக்கும். இல்லையேல் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் எனத் தெரிய வருகிறது.



**முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலில் குதிப்பு!**

இதே வேளை முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும் இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவெடுத்துள்ளது. இம்மாதம் 22ஆம் திகதி இந்தக் கூட்டமைப்பு கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இது தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் இன்னும் தெரிவு செய்யப்படாத போதிலும், போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. கூட்டமைப்பின் உயர்சபை மிக விரைவில் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் எனக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட தீர்மானிப்பதற்கு முன் முஸ்லிம்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை வலியுறுத்தும் 24 அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை இரு பிரதான வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் இந்தக் கூட்டமைப்பு சமர்பித்துள்ளது.

''எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் உறுதியளிக்கும் வேட்பாளருக்கு எமது ஆதரவை வழங்குவோம்.'' எனக் கூட்டமைப்புத் தெரிவிக்கிறது.

அந்த மகஜரை வாங்கிப் பார்த்த இரு பிரதான வேட்பாளர்களும், அதை மேலோட்டமாகவே வாசித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கவனத்தில் எடுத்ததாகத்தெரியவில்லை.

இரு பிரதான கட்சிகளும் முஸ்லிம்களின் முக்கிய கோரிக்கைகளைப் பற்றிக் கவலைப்படாது, அவர்களின் வாக்குகளில் மட்டுமே குறியாகி இருக்கின்றன.

**கடந்தகால அரசியல் வரலாறு**

கடந்த கால அரசியல் வரலாற்றை நோக்கினால் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஆட்சியில் அமருவதற்கு முதுகெலும்பாக இருந்தார். அப்போது முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருந்த அரசியல் பலம் காரணமாக முஸ்லிம்கள் பல நன்மைகளை அடைந்தனர்.

அடைய வேண்டியவை அநேகம் இருக்க அடைந்தவை சில என்றாலும் அவை பூரணமானவை என்றே சொல்லவேண்டும்.

அன்று முதல் இன்றுவரை முஸ்லிம்கள் தமது மீதி உரிமைகளை அடைய முடியாமல்தடுமாறுகின்றனர். அப்போது எந்தக் கட்சியின் ஊடாக உரிமைகளைப் பெறப் போராட்டம் நடத்தப்பட்டதோ அந்தக் கட்சி இப்போது சிதறுண்டு. போய்விட்டது.

இதன் காரணமாக பேரம் பேசும் சக்தி குறைந்தது. முஸ்லிம்களுக்குத் தருவதாகக் கூறப்பட்ட அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டன.

முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களின் உரிமைகளை மறுக்கும் பெரும்பான்மை இனத்தின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

பிரதான கட்சிகள் இரண்டில் எதற்கு ஆதரவளித்தாலும் முஸ்லிம்களுக்கு நன்மைகள் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பதை கடந்த காலச் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

தனித்துப் போட்டியிட்டால் 5 லட்சம் வாக்குகளைப் பெறமுடியும் என்கிறது முஸ்லிம் காங்கிரஸ். அதேவேளை எம்மால் 3 லட்சம் வாக்குகளைப் பெறமுடியும் என்கிறது முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு.

இந்த பெரும் சக்தியை சரியான முறையில் பயன்படுத்தினால் நிச்சயம் முஸ்லிம்கள் பயன்பெறலாம். இந்த இரு கட்சிகளும் இணைந்து அல்லது தனித்துப் போட்டியிடலாம் அல்லது முஸ்லிம்களின் உரிமைக்கோரிக்கைகளை முதன்மைப் படுத்தி, பேரம் பேசி பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிக்கலாம்.

இருப்பினும், இதுவரை காலமும் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்று வந்த சிங்கள அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு துரோகமே இழைத்துள்ளனர். இந்தத் தேர்தலிலாவது முஸ்லிம் கட்சிகள் சரியான முடிவை எடுக்குமா?

**எம்.ஐ.முபாறக்**


**National Child Protection Authority**
No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura,
Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915
E-mail: ncpa@childprotection.gov.lk / Website: http://www.childprotection.gov.lk
ILO IPEC


## சர்வதேச தொழிலாளர் சங்கம் சிறுவர்களுக்கான நடவடிக்கைகள்

சிறுவர்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கடத்திச்செல்வதோடு தரகர்கள் பணம் பெறுவதானால் இது சிறுவர் துஷ்பிரயோகம் என அழைக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் சிறுவர் அல்லது சிறுமிகள் கடத்தப்படுவது அவர்களுக்கே தெரியாமல் இருக்கும் இவ்வாறு கடத்திச் செல்பவர்கள் தரகர்கள் என அழைக்கப்படுவர்.



சிறுவர் துஷ்பிரயோக இருவகைப்படும்
1. உள்நாட்டு சிறுவர் துஷ்பிரயோகம்
2. வெளிநாட்டு சிறுவர் துஷ்பிரயோகம்.

உள்நாட்டு சிறுவர் துஷ்பிரயோம்

நாட்டினுள் நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகமாகும்.

* வீட்டுப் பணிப்பெண் வேலைக்காக கொண்டு செல்லுதல்
* கருவாடு வேலைதளத்திற்கு
* வெடி பொருள் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லுதல்
* யுத்த நடவடிக்கைகளுக்கு
* ஒட்டக ஓட்டப்போட்டிக்காக
* சிறுவர் விபச்சாரத்திற்காக



இவ்வனைத்து நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை கடத்துகின்றனர்.

வெளிநாட்டு சிறுவர் துஷ்பிரயோகம் (நாட்டுக்கு நாடு)

* இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு
* நேபாளத்திலிருந்து இந்தியாவுக்கு
* வியட்னாமிலிருந்து கம்போடியாவுக்கு
* பங்களாதேஷிலிருந்து - கிழக்கு நாடுகளுக்கு

இவ்வாறு கடத்தப்படும் சிறுவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கநேரிடும். வெளிநாட்டு சிறுவர் துஷ்பிரயோகத்தில் இந்த சிறுவர்கள் விபச்சாரியாகவோ யுத்த வீரர்களாகவோ அல்லது வீட்டு வேலைக்காரர்களாகவோ கொண்டு சேர்க்கப்படுவர்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கை ஒரு கடலால் சூழப்பட்ட தீவு ஆதலால் வெளிநாடுகளுக்கு சிறுவர்களை கடத்திச் செல்வதானால் விமான நிலைத்தினூடாகவே கொண்டு செல்ல வேண்டுமாதலால் பலத்த சோதனைக் கிடையில் கொண்டு செல்லமுடியாது. இதனால் வெளிநாடுகளுக்கு சிறுவர்களை கடத்திச் செல்வது முடியாததொன்றாக காணப்படுகின்றது. ஆனாலும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு சிறுவர்களை கூட்டிக்கொண்டு வருவது இன்னும் ஓய்ந்து போகவில்லை.

இலங்கையை பொறுத்தவரை தோட்டப் பகுதிகளிலே சிறுவர் துஷ்பிரயோகம் அதிகமாக இடம்பெற்று வருகிறது. ஏழை, படிப்பறிவு இன்மை, சிறுவயதிலே குடும்ப சுமையை ஏற்றல், தந்தை குடிப்பழகத்தில் ஈடுபட்டிருத்தல் ஆகிய காரணங்களால் சிறுவர்கள் வீட்டு வேலைக்கோ அல்லது பிற வேலைகளுக்கோ செல்கிறார்கள்

இந்தியாவின் மும்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் சிறுவர் விபச்சார விடுதிகள் காணப்படுவதோடு அவர்களின் சொந்த நாடு நேபாளம், பங்களாதேஷ் ஆகவும் இருக்கலாம்.

விசேடமாக கிழக்கு நாடுகளில் ஒட்டக ஓட்டப்போட்டியில் (சிறுவர்களை ஒட்டகத்தில் மேல் கட்டி ஒட்டகத்தை ஓடவிடுதல்) சிறுவர்களை பயன்படுத்தல் மிகவும் அபாயகரமான ஒரு செயலாகும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தின் சிறப்பம்சங்கள்.

1. அறியாத இடங்களுக்கு கொண்டு செல்லுதல்.
2. பிரதி பலன் பணம் இல்லாமலும் இருக்கலாம்.
3. கைவிடுதல்
4. கடவுச்சீட்டை பெறுதல்
5. வீட்டு வேலை
6. துஷ்பிரயோகம்.

# த.வி. கூட்டணியின் ஒப்புதலுடன் உருவான சேருவில தொகுதி

பழைய தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் திருச்செல்வத்தின் அமைச்சர் பதவியைக் காப்பாற்ற துணை நின்றவர்களுக்கு- அவர்களில் இன்றும் உயிர் வாழ்பவர்களுக்கு சந்தர்ப்பவாதம் எவ்வளவு அபாயகரமானது என்பதை இந்த சம்பவங்கள் நினைவூட்டக்கூடும்.

தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதில் முனைப்பாக இருந்துவந்துள்ள, சிங்களவர்களையே பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கங்கள் இந்தத்திட்டங்கள் மூலம் கிழக்கிலங்கைத் தமிழர்களுக்கு விளைவித்துள்ள இன்னொரு அக்கிரமத்தை சொல்வது இங்கு அவசியமாகின்றது. இது தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தொடர்பானது.

வகையில் ஏற்பாடு செய்வதில் நியாயம் எதுவும் இல்லை என்று அக்குழு வெளிப்படுத்தி இருந்தது. முழுமாகாணமும் தமிழ்பேசும் மக்களால்- அதாவது தமிழ் - முஸ்லிம் மக்களால் நிரம்பியிருந்தது. திருகோணமலை மாவட்டம்- மட்டக்களப்பு மாவட்டம் என அவை பிரிக்கப்பட்டிருந்தன.

எனவே, இந்த மாகாணத்தை ஏழு தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து 5தமிழர்கள், 4முஸ்லிம்கள் என்று 9 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக்கூடியதர்க தொகுதி நிர்ணய ஆணைக்குழு ஏற்பாடு செய்தது.

திருகோணமலையில் மூதூரும் மற்றும் மட்டக்களப்பும் அவைகளின் கலப்பு இனமக்கள் தொகைக்கு ஏற்ப இரு உறுப்பினர்களைத் தெரிவு- செய்யக்கூடியதாக அமைக்கப்பட்- னர்களும் முஸ்லிம்களுக்கு 4 1/4 வீத உறுப்பினர்களும் என்று கணிப்பீடுகள் காட்டின. நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் படியும் 5 3/ 4 வீதம் என்பதை 6 வீதம் என்று ஆக்கியிருக்க வேண்டும் 4 1/4 வீதம் என்பது 4 வீதமாத இருக்க வேண்டும்.

ஆணைக்குழுவில் தமிழர் நலன்களை தமிழரசுக்கட்சியின் உபதலைவரும் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வன்னிய சிங்கமே கவனித்து வந்தார். முஸ்லிம் தலைவர்கள் அவரை அணுகி தமிழர்கள் வடக்கில் ஏற்கனவே கணிசமான அளவு பிரதிநிதித்துவம் வகிப்பதால் பெருந்தன்மையுடன் கிழக்கில் தங்களின் 4 1/2 என்பதை 5என்பதாக ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்று கேட்டுக்-

தொகுதி நிர்ணய ஆணைக்குழு கருத்தில் எடுத்துக்கொண்டது.

இதற்கான நிலப் பிரதேசம் ஏற்கனவே இருக்கும் மூதூர் பகுதியிலிருந்து வகுக்கப்பட வேண்டியிருந்தது. அச்சமயத்தில் தொகுதி நிர்ணய ஆணைக் குழுவின் முன்னிலையில் தமிழர்களின் நலன்களை தமிழர் விடுதலைக்கூட்டணி கவனித்துக்- கொள்ளும் என்று எதிர்பார்க்கப்- பட்டது.

### துரோகம்

ஆனால்,த.வி.கூட்டணி திருகோணமலைத் தமிழருக்கொதிரான வெட்கித் தலை குனியவேண்டிய துரோகத்தனமான ஒரு காரியத்தை ஆணைக்குழுவுடன் கோழைத் தனமான ஒரு பேரம்பேசுதல் மூலம் நிறைவேற்றியது. சேருவில என்ற ஒரு புதிய தொகுதி உருவாக்கப்படுவதற்கு த.வி.கூ. இணங்கியது. அதற்கு மாற்றீடாக வடமாகாணத்தில் வவுனியா தொகுதி இரண்டாகப் பிரிக்கப் படவேண்டும் என்று கேட்டுக்கொண்டது.



.சோல்பரி பிரபு

இந்தக்கோரிக்கைக்கு ஆணைக்குழு இணங்கியதுடன் வவுனியா தொகுதியிலிருந்து முல்லைத்தீவைப் பிரித்து ஒரு தொகுதியாக்கியது. அதேசமயம் திருகோண மலை தொகுதியையும் பழைய மூதூர் தொகுதியையும் பிரித்து சேருவில என்ற புதிய தொகுதியை உருவாக்கியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரேநோக்கம் ஏற்கனவே தமிழரசுக்கட்சியின் டிக்கெட்டில் வெற்றி பெற்றிருந்த வவுனியா எம்பியையும் அவரால் தோற்கடிக்கப்பட்டிருந்த தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினரையும் (இருவரையும்) நாடாளுமன்ற உறுப்பினர்களாக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இந்த இரண்டு உறுப்பினர்களும் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே த.வி. கூட்டணி நிலைத்து நிற்கமுடியும் என்ற நிலைமை.

தமிழரசுக்கட்சியினால் நீண்டகாலமாக வவுனியா தொகுதியில் வெற்றிபெற முடியவில்லை. 1970ஆம் ஆண்டில் தான் முல்லைத்தீவு பகுதிமக்களின் பலத்த ஆதரவில் பதவியிலிருந்த தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினரை தோற்கடித்து வவுனியாத் தொகுதியைப் பிடிக்கமுடிந்தது. தமிழ் காங்கிரஸுக்கு வவுனியா பிரதேசத்திலேயே அமோக ஆதரவிருந்தது. எனவே இரு பகுதிகளையும் இரு நாடாளுமன்றத் தொகுதிகளாகப் பிரித்துவிட்டால் முல்லைத்தீவு - வவுனியா என்று தமிழ்க் காங்கிரஸுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான தேர்தல் போட்டியைத் தவிர்த்துவிடலாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதியது.

அவர்களின் இந்த கணக்கு சரியாகவே அமைந்தது.

புதிய தொகுதி நிர்ணயத்தின்

கூட்டணியின் இரண்டு பிரதிநிதிகளை வெற்றிபெறச் செய்ததில் இது உண்மையில் ஒரு சாதனை- தான். ஆனால், இந்தப் பேரம் பேசுதலில் திருகோணமலைத் தமிழர்களுக்கு ஏற்படுத்திவிட்ட மனிதப் பிரச்சினை குறித்து அவர்கள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

மூதூர் தமிழ் கிராம மக்கள் முப்பது வருடங்களுக்குமேலாக அனுபவித்து வந்த - தங்கள் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யும் உரிமையை இல்லாமல் செய்துவிட்டோமே என்ற மனச் சாட்சிகூட அவர்களை உறுத்தியதாகத் தெரியவில்லை.

சேருவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி பூகோள ரீதியில் உள்நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஒரு நீண்ட நிலப்பரப்பு. வடமாகாணத்தின் எல்லையிலிருந்து தெற்கில் மட்டக்களப்பின் எல்லையான வெருகல் ஓயா வரை நீண்டுசெல்கின்றது. நிலப்பகுதியில் திருகோணமலை தொகுதியை சுற்றி வளைத்து செல்லும் இது மற்றவகையில் திருகோணமலை மாவட்டம் முழுவதையும் தழுவிநிற்கின்றது. இவ்வாறு எல்லாத் திசைகளிலிருந்தும் திருகோணமலையை ஏனைய




தமிழ்ப்பகுதிகளுடனான தொடர்புகளை துண்டிப்பதாய் உள்ளது.

இரட்டை உறுப்பினர் தொகுதியான மூதூரிலிருந்த எல்லாத் தமிழ்க் கிராமங்களும் புதிய தொகுதியான சேருவில தொகுதியுடன் ஒன்றிணைக்கப்பட்டன. இதனால், குடியேற்றவாசிகளில் சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் சிறுபான்மையோராக்கப்பட்டனர்.மூதூரில் எஞ்சியிருந்த பகுதி முஸ்லிம்களின் ஓர் உறுப்பினர் தொகுதியாகிவிட்டது.

சோல்பரி அரசமைப்பில் சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த விதிகளையும், சிறுபான்மையோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதற்காக வகுக்கப்பட்ட கணிப்பீடுகளையும்



இந்த குடியேற்றத்திட்டங்கள் கேலிக்கூத்தாக்கி தவிடுபொடியாக்கிவிட்டன.

எவ்வாறு மலையக தமிழ் மக்களுக்கு இருந்துவந்த 9 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஏற்பாடு அபகரிக்கப்பட்டு அந்த இடங்களில் சிங்களவர்கள் தெரிவு- செய்யப்படுவதற்கு வசதிகள் செய்யப்பட்டன என்று ஏற்கனவே விவரிக்கப்பட்டுவிட்டது.

இனி குடியேற்றத்திட்டங்கள் கிழக்கிலங்கை தமிழருக்கு இழைத்து விட்ட அநீதிகளைப் பார்ப்போம்.

### சிங்களவர் இல்லாத கிழக்கு மாகாணம்

சோல்பரி அரசமைப்பின் கீழ் 1947 ஆம் ஆண்டு நடத்தப்படவிருந்த முதலாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு தேர்தல் தொகுதிகள் நிர்ண ஆணைக்குழு, பிரிவுக்கவுன்சில் புகழ் சட்டவல்லுனர் எல்.எம்.டி.சில்வா (கே.சி) தலைமையில் கிழக்கு மாகாணத்தில் தரவுகளை சேகரித்துக் கொண்டிருந்த சமயம் அங்கு ஓர் சிங்களவர் கூட பிரசன்னமாய் இருக்கவில்லை என்பதைக் கண்டு பிடித்தது.

அதனால், அங்கு சிங்களவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கும்

டன. ஆணைக்குழுவின் கணிப்பீட்டின்படி இந்தத் தொகுதிகள் ஒவ்வொன்றும் இரண்டாவது உறுப்பினராக ஒரு முஸ்லிம், ஒரு தமிழ் உறுப்பினரைத் தெரிவு செய்யக்கூடியதாயிருக்கும்.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல், ஆணைக்குழு எதிர்பார்த்தபடியே ஐந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 4 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

### குடியேற்றம் மூலம் அம்பாறை உதயம்

1959ஆம் ஆண்டு புதிய தொகுதி நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டது. புதிதாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் புதிய தொகுதிகள் நிர்ணயிக்கப்படவிருந்தன.

பட்டிப்பளை ஆற்றுப் பள்ளத்தாக்கில் (கல்ஓயா) பெரும் எடுப்பில் குடியேற்றங்கள் இடம்பெற்றிருந்தமையால் அரசாங்கம் புதிய இறைவரி மற்றும் நிர்வாக மாவட்டங்களை சிங்களவர்களுக்காக கிழக்கு மாகாணத்தில் உருவாக்கியிருந்தது. அதற்கு அம்பாறை மாவட்டம் என்றும் பெயரிடப்பட்டிருந்தது.

எனவே, கிழக்கு மாகாணத்துக்கு மேலும் இரு- நாடாளுமன்ற ஆசனங்கள் தேவைப்படுவதாக ஆணைக்குழு முடிவுக்கு வந்தது. அம்பாறை மாவட்டத்தை, தனிச் சிங்கள உறுப்பினர் ஒருவரைத் தெரிவு- செய்யக்கூடியதாகவும், மற்றையதை முஸ்லிமகள் தமிழர்கள் இருபிரிவினரும் ஒரு உறுப்பினரைத் தெரிவுசெய்யக்கூடியதாகவும் குழு நிர்ணயித்தது.

### முஸ்லிம்களுக்கு நிந்தவூர்

1959இல் மேற்கொள்ளப்பட்ட புதிய மக்கள் தொகையின்படி தமிழர்களுக்கு 5 3/4 வீத உறுப்பி-

கொண்டார்கள். இதற்கு வன்னிய சிங்கம் இணங்கினார். தமிழரசுக்கட்சியுடன் கலந்துபேசினார். இதன்படி ஒருபுதிய தொகுதி (நிந்தாவூர்) முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்டது. இதனால் தமிழர்களுக்கு 5 முஸ்லிம்களுக்கு 5 என்ற நிலைமை உருவானது

### கிழக்கில் முதலாவது சிங்கள எம்.பி

1960ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் 5தமிழர் களும், 5 முஸ்லிம்களும், ஒரு சிங்களவரும் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவ்வாறாக ஒரு சிங்கள உறுப்பினர் முதல் தடவையாக கிழக்குமாகாணத்தை பிரதி நிதித்து வப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டதானது, அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டங்களுக்கான பின் புலநோக்கங்களை வெள்ளிடைமலையாக எடுத்துக்காட்டியது.

**தமிழில் - ஷபோனா'**

தமிழர் பிரதேசமாகவிருந்த கிழக்கு மாகாணத்தை சிங்களவர் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டம் அடுத்துவந்த தொகுதி நிர்ணயத்தின்போது மேலும் ஒருபடி முன் நோக்கி நகர்த்தப்பட்டது.

1972 இல் கொண்டு வரப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதிய குடியரசு அரசமைப்பின் காரணமாக இந்தத் தொகுதி நிர்ணயம் அவசியமாயிற்று. இதில் இன்னும் ஒரு விசித்திரம் என்னவென்றால் இம்முறை இந்த நடவடிக்கையை தமிழர் விடுதலை கூட்டணியின் (TULF) ஆதரவுடனும் அனுசரணையுடனும் செய்து முடித்தமைதான்.

புதிய குடியரசுத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருந்ததால் தொகுதிகள் புதிதாக நிர்ணயிக்கப்படவிருந்தன.

பட்டிப்பளை ஆற்றுப்பள்ளத்தாக்கு குடியேற்றத்தின் விளைவாக கிழக்கு மாகாணத்தில் ஒரு ஆசனத்தை சிங்களவர்களுக்கு ஒதுக்கிய முன்னைய தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் அடிச்சுவட்டையே இந்தத் தொகுதி

## கிழக்கில் குடியேற்றத் திட்டங்களுக்கு எதிராக நடத்தி வந்த போராட்டங்கள் கேலிக்கூத்து

நிர்ணய ஆணைக்குழுவும் பின்பற்றிச் செயற்பட்டது. இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் தொகுதி நிர்ணய ஆணைக்குழு கண்வைத்தது.

அல்லை, கந்தளாய்,மற்றும் பதுவில் ஆகிய குடியேற்றத்திட்டப்பகுதிகளும் திருகோணமலை மாவட்ட மக்கள் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டன. எனவே, இம் மாவட்டத்தில் சிங்களவர்களுக்கும் ஒரு தொகுதி ஒதுக்கப்படவேண்டிய தேவையை

பின்னர் 1977இல் நடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சியின் உறுப்பினரும்,அவரது தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினரும் முறையே முல்லைத்தீவு, வவுனியா தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு அதிக எதிர்ப்பின்றி முறையாக தெரிவு செய்யப்படார்கள்.சோல்பரி பிரபு

தமிழர் விடுதலைக்

சேருவில உருவாவதற்கு இணங்கிய தன்மூலம் டி.எஸ்.சேனநாயக்க காலம் தொட்டு அரசாங்கங்கள் கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்டுவந்திருந்த சிங்களக் குடியேற்றங்களை தமிழர் விடுதலைக்கூட்டணி மன்னித்தது மட்டுமன்றி அங்கீகரிக்கவும் செய்தது. குடியேற்றத்திட்டங்களுக்கு எதிராக தமிழரசுக்கட்சி வருடக்கணக்கில் நடந்தி வந்த போராட்டங்களும் கேலிக் கூத்தாகிவிட்டது.

(தொடரும்)




வாழ்வின் முன்னேற்றம், இடிபாடுகளில் இருந்து மீளுதல், அழிவில் இருந்து தன்னைசுதா ரித்துக்கொண்டு கட்டி எழுப் புதல் என்பவற்றுக்கு சின்னஞ் சிறிய ஜப்பான்காரர் தான் எமக்கு முன்மாதிரி, படிப்பினை, அறிவு எல்லாம்.

உழைப்புக்கு நேர்த்தி என்று அவர்களை நோக்கித்தான் விரல்



சுட்ட முடியும். எமக்கு அண் மையில் தான் அவர்கள் இருக் கிறார்கள்.

சுனாமி வந்து இவ்வளவு காலமாகியும் இவ்வளவு அழிந்து போயும் இன்னும் எம்மவர்கள் மீளவே இல்லை. அதற்கான யோசனையும் இல்லை. கூடாரம் அடித்து ஏ.ஜி.ஏ. அலுவலகம் முன்பு போய் சட்டி, பானை கொண்டு போய் சாப்பாடு சமைத்துத்தானா எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

எரிந்த நாகசாகியில் இருந்து ஜப்பான் காரன் எப்படி எழுந்தான். எமது கடற்கரை ஓரங்களில் இருந்து ஆணும், பெண்ணும் எப்படி ஓங்கி எழவேண்டும் ஏன் எழுகிறார்களில்லை.

விடுதலைப்புலிகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் எவ்வ ளவு உஷாராக இருக்கின்றார் கள். ரீ.ஆர்.ஓ.வுக்கு ஜனாதிபதி யும் பரிசு கொடுத்திருக்கிறார்; நன்றாக செயலாற்றியதற்காக...

எனது நண்பரொருவர்கிழக்குப் பகுதியில் சுனாமியால் அழிந்து போனவர்களுக்காக முப்பது வீடுகளை கட்டிக்கொடுக்கிறார். வேலை நடந்து கொண்டிருக்கி றது.

ஆனால், "அங்குள்ளவர்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்கி றார்களில்லை. சோம்பேறிகளாக இருக்கிறார்கள். சம்பளம் கொடுத்து வேலை செய்வித்தாலும் வேலை யில் களவு. எமது அழிவை நாம்தான் மீட்டெடுக்கவேண்டும் என்ற ஆதங்கம், அங்கலாய்ப்பு கொஞ்சம் கூட இல்லை.

நாங்கள் ஏதோ தொண்டு நிறுவனம் போலவும், செய்து தான் தரட்டுமே என்பது போல வும் அவர்கள் நடந்துகொள்கி றார்கள். அத்தோடு களவும் எடுக்கிறார்கள். உஷார் இல்லாத சோம்பேறிகளாக இருக்கிறார் கள்" என்று கவலைப்பட்டார்.

தனக்கு அங்கு வேலை செய்வதே வெறுத்துவிட்டது என்கிறார். இத் தனைக்கும் நண்பர்கள் ஒன்று சேர்ந்து உதவி செய்கிறார்கள்.

கொழும்பில் இருந்து வாரா வாரம் போக வேண்டும்.

இனியொரு பூகம்பமோ, சுனாமியோ வந்தால் தேசம் என்னாவது?

முதலில் எமது சோம்பல்களை உதறிவிட்டு எம்மை நாம் உயிராக்கவேண்டும்.

அடுத்தது சுனாமி நிதிகளை சுருட்டி விழுங்கியவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும் சாபம் உண்டாவதாக.

***

தேர்தல் காலங்களில் பத்திரிகை யாளர்கள் தான் பாவம். எல் லோரின்ரையும் எல்லாவற்றிற்கும் போகவேண்டும். எழுதவேண் டும்.

ஓடி ஓடிச் செய்தி சேகரிக்க வேண்டும். இங்கு ஊடகவிய லாளர் எல்லோரையும் தான் சொல்கிறேன்.

பாதுகாப்புத் தொடர்பான கெடுபிடிகள் அதிகம். ஒரு நெருப்புப் பெட்டியையும் ஜனாதிபதி வேட்பாளர்களின் கூட்டத்துக்கொண்டு போக விடுகிறார்களில்லை. வெற்றி லைச் சரையை துழாவுகிறார் கள். அவ்வளவு பயம் உயி ருக்கு. மன்னன் மக்களோடு இருந்த காலம் போய்விட்டது.

மக்களைக் கண்டு அஞ்சுகிறார் கள்; உயிர்போய் விடுமோ என்று.

வீட்டில் ஊடகவியலாளரின் மனைவிமார்தான் பெரும்பாவம். நெருப்பை மடியிலும், நெஞ்சிலும் கட்டிக்கொண்டு அல்லாடுகிறார் கள். காலையில் போகும் கண வனுக்காக, உயிர் பாதுகாப்புக் காக தெய்வங்களை பிரார்த்திப் பது ஒவ்வொரு செய்தியாளன் வீட்டிலும் தினக்கடமையாகி விட்டது.

போகிறவர் உயிரோடு மீளவேண்டும் என்பதற்காக,

இரவில் அவசர செய்தி வேலைகளின் போது மனிசி கோல் பண்ணி "எங்கே இருக்கிறீர் கள்" என்று கேட்கும் பொழுது எரிச்சல்தான் வரும். "உவள் யார்" இந்த நேரத்தில் என்று. ஆனால், பொறுமையாய் எங்கே இருக்கிறீர்கள் என்று பதில் சொல்லுங்கள்.

ஏனெனில், உங்கள் உயிரின் மீதும் பிள்ளைகளின் வாழ்வின் மீதும் அதீத அக்கறை கொண்ட வள் மனைவியை விட வேறு யாருளர்.

***

டொமினிக் ஜீவா ஒரு கிழ மையாகவே 'கோல்' பண்ணி தனக்கு பரிசளிப்பு விழா வாருங் கள், வாருங்கள் என்று அன்போடு அழைத்தார். தன்னோடு வர வேண்டும் என்று கட்டளை.

என்ன பரிசளிப்பு அல்லது விருதளிப்பு என்று ஜீவாவுக்கும் தெரியாது. ஏனெனில் 'சாகித்திய ரத்ன' விருதுக்கு அறிவிக்கப்பட் டிருக்கிறார் ஜீவா; சிலவேளை அதுதானோ என்று ஐமிச்சம்.

விகாரமகா தேவி அரங்கிற்கு செல்லும் வரைக்கும் என்ன வென்றே தெரியாது எனக்கு.

மானா மக்கீன் என்னை எழுத்துத் துறையில் அறிவிப்புத் துறையில் ஆர்வப்படுத்தி, ஆர் வப்படுத்தி வந்தவர். இப்பொழுது இலங்கையை விட்டு இந்தியா, மலேசியா என்று நூல் வெளியீ டுகள், விழாக்கள் என பிசியாகி விட்டார். இலங்கையில் உள்ள இலக்கியக்காரர்கள், அரசியல் காரரில் நம்பிக்கை இழந்துவிட்டார்.



விகாரமகாதேவி பூங்காவின் அரங்குக்கு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு பிரதமர் வருகைக்காக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

நாட்டியக் காரரையும், ஊடகவியலாளர்களையும், நாலைந்து பேரையும் தவிர வேறுயாரும் உள்நுழைய அனுமதிக்கப்பட வில்லை.

நாட்டியக்காரர்களோ ஆயிரத்துக்கும் மேல். அந்த நாட்டியத்தைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். அந்தளவு அழகு, பிரமாண்டம்.

மல்லிகை ஜீவாவும், மானா மக்கீனும் தங்களது வாழ்க்கையை தமிழுக்கு அர்ப்பணித்ததற்காக 'தேச நேத்ரு' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். தகும்; பெறுமதி.

'தேச நேத்ரு' என்றால் என்ன என்று 'மானா'விடம் கேட்டேன். 'தேசத்தின் கண்கள்' என்று விளக்கம் சொன்னார்.

எமது தேசத்தின் கண்கள் இரண்டு பேருக்கு பிரதமர் விருது வழங்கி கௌரவித்திருக்கிறார்.

ஜீவாவிற்கு 'சாகித்திய ரத்ன' விருதும் இந்த மாதமே கிடைத்திருக்கிறது. இரண்டு விருது களுக்கு சொந்தக்காரர் ஜீவா. நாற்பது ஆண்டுகால உழைப் பிற்கு கிடைத்த சன்மானம் அது ஜீவாவிற்கு.

மனமார்ந்த வாழ்த்துக்கள் அன்புள்ள மானாவுக்கும், ஜீவாவுக்கும். அடுத்தநாள் ஜீவாவுக்கு விருது கிடைத்ததை ஓர் ஊடக வியலாளரிடம் தெரிவித்தேன். "ஜீவா என்ன மகிந்தவின் ஆளா" என்று திடீரென்று கேட்டார். ஐயோ ஆண்டவனே நான் அதிர்ந்து போனேன். இத்தனை வருடம் ஊடகங்களில் இருக்கிறார் அவருக்கு ஜீவாவையும் தெரியாது மகிந்தவையும் தெரியாது.

***

அண்மையில் ஓவியர் புஷ்பாவோடு கதைத்துக்கொண் டிருக்கும்போது ஒரு விடயத்தை சொன்னார்.

ஏன் ஓவியர்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசில்கள் வழங்கப் படுவதில்லை. உண்மைதான். ஒரு நூலின் அழகு, செழுமை, கவர்ச்சி எல்லாம் 'லே அவுட்' செய்யும் ஓவியர்களின் கைவண்ணம் தானே. அவர் களையும் இலங்கை அரசு கௌரவப்படுத்தவேண்டும். அது கட்டாயமானதும் கூட.

அவர்களுக்கான அங்கீகாரமும் வழங்கப்படவேண்டும். ஓவியர்கள் மதிக்கப்படவேண்டும் என்பதே எனது விருப்பமும்.

ஓவியர் புஷ்பா பல்துறைக் கலைஞன். ஒரு நல்ல கவிஞன். 'குறிஞ்சி இளந்தென்றல்' எனும் புனை பெயரில் நல்ல கவிதை களை எழுதி வந்தவர்.



இப்பொழுது 'கனிவுமதி' என்று பெயர் மாற்றம் செய்திருக்கி றார். அவரின் கவிதைகளும் ஓவியங்களும் என்னை மிகவும் கவர்ந்தவை. 'சுவடுகள்' எழுத்தோவியத்தை, பார்த்துக்கொண்டிருக்கும்போதே வரைந்து தந்தார். மனதால் நன்றி 'புஷ்பா' உங்களுக்கு.

இந்த வாரம் அவரின் கவிதை ஒன்று அவரினது ஓவியத்துடன்,

எந்த வேஷம் போட்டாலும்
கச்சிதமாய் பொருந்தி விடும்
எனக்கு

அரிதாரம் பூசி
மேடையில் வேஷம் கட்டி
சனங்களை சந்தோஷப்படுத்தி
ஆடிக்கொண்டிருக்கிறேன்.

அரிதாரம் பூசாத
சுயமுகத்தை காட்ட
எத்தனித்த போது
திரையை மூடிவிட்டார்கள்.

- குறிஞ்சி இளந்தென்றல்
(இப்போது கனிவுமதி)

'சுயம்'
தொகுப்பு 'அப்புறுமென்ன'
இன்னும்வரும்

---

# படைகளைக் கலைத்துவிட்டனர்....!

அரசியல் சர்ச்சைகளில் தொடர்ந்து சிக்கிவரும் ஜே.வி.பி யினர் இப்போது புதிதாக ஒரு சர்ச்சையில் சிக்கியுள்ளனர். அதுதான் பிரதமரின் தேர்தல் பிரசார மேடையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க ஆற்றிய உரை.

எல்லைகளைப் பாதுகாக்கத் தவறினால் பாதுகாப்புப் படை களைக் கலைத்துவிடவேண்டும் என்று அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

கடந்த 20ஆம் திகதி கொழும்பு நகரசபை முன்றலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட் டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே சோமவன்ஸ அமரசிங்க மேற்கண்ட கருத்து களைத் தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கில் உள்ள படையினர் தங்கள் கடமை களைச் சரிவரச்செய்வதில்லை. இவர்கள் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க முடியாவிட்டால், இவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" - என அவர் கூறியிருந்தார்.

சோமவன்ஸவின் இந்தக் கூற்று அங்கிருந்த இராணுவத்தினரை மட்டுமன்றி நாடுபூராகவும் உள்ள முப்படையினரையும் சினம் கொள்ளச் செய்துள்ளது.

தனது தவறை ஒத்துக்கொண்டு சோமவன்ஸ படையினரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுது வலுப்பெற்று வருகிறது.

ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களின் ஆதரவில் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக தனது சுயகௌரவத்தை பிரதமர் விட்டுக்கொடுக்கலாமா? என்று ஐ.தே.க. கேட்கிறது.

ஓய்வுபெற்ற படை உயர் அதிகாரிகளும் சோமவன்ஸவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளனர்.

ஓய்வுபெற்ற இராணுவ உயர் அதிகாரிகளான ஜெனரல் டெனிஸ் பெரேரா, ஜெனரல் எஸ்.சி.ரணதுங்க, ஜெனரல் எச். வணசிங்க மற்றும் ஓய்வுபெற்ற விமானப் படைத்தளபதி ஹரி குணதிலக ஆகியோர் கடந்த 26ஆம் திகதி கொழும்பு ரேணுகா ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர். அதில் சோமவன்ஸவின் கூற்றுக்கு படையினர் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பியினர் 1980ஆண்டு நடத்திய கலவரத்தை மீண்டும் இந்தநாட்டில் அரங்கேற்ற முற்படு கின்றனர். அதற்காகவே படை யினரை வீட்டுக்கு அனுப்ப முயற்சிக்கின்றனர்.



1980ஆம் ஆண்டு ஜே.வி.பி. கலவரத்தின் போது படைகளை விட்டுச் செல்லுமாறு படையினருக்கு ஜே.வி.பி அறிவித்திருந்தது. விலக மறுத்தவர்களின் சில குடும்பங்கள் கொல்லப்பட்டன.

வெற்றிபெறும் முன்பே இராணுவத்தைப் பகிரங்கமாக விமர்சிக்கின்ற ஒரு கட்சியுடன் இணைந்துள்ள வேட்பாளரை ஆதரித்தால், அவர் வெற்றிபெற்ற பின் படையினருக்கு எதிராக பாதகமான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படலாம் என படையினர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது சோமவன்ஸவின் உரை.

ஜே.வி.பியினர் ஏற்கனவே ஒரு தடவை அரசின் காலைவாரி விட்டார்கள். அவர்கள் மீண்டும் இணைந்தால் அரசுக்குத் தலை யிடியாகவே இருப்பார்கள் என்று கூறியே சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பலர் ஜே.வி.பி யுடனான கூட்டை எதிர்த்தனர். ஆனால், ஜே.வி.பியினர் இப்போதே தமது விளையாட் டைக் காண்பிக்கத் தொடங்கி விட்டனர்.

ஜே.வி.பியினர் பற்றி நன்றாக பிரதமர் அறிந்திருந்தும் தான் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத் தன்தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்டார். அவரை அந்த ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என அந்த அமைச் சர்கள் கூறுகின்றனர். ஜே.வி.பி யினர் சொல்வது போல் இராணு வத்தைக் கலைத்துவிட்டால் முழு நாட்டையும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதா என்று கேட்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர்.

-எம்.ஐ.முபாறக்-

## உண்மை சம்பவம்




காய்ந்து போன இரத்தத் திட்டுகளும், பிய்ந்து போன ஒற்றைச் செருப்பும், அறுந்து கிடக்கும் அரைநாண் கயிறும் அந்த பயங்கரத்துக்கு உயிரற்ற சாட்சிகளாகச் சிதறிக் கிடக்கின்றன. உடம்பெங்கும் இரத்தமும், சதையும் திட்டுத்திட்டாகப் பரவிக்கிடக்க, ''எனக்கு எதுவும் இல்லையா , தம்பி எப்படி இருக்கிறான்? ''என்று வலி நிரம்பிய குரலில் கேட்கும் எரனேஷ்; அந்தக் கொடூரத்தின் உயிர் சாட்சியாக மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் படுத்திருக்கிறான்.

நாய்கள் என்னும் நாலுகால் பயங்கரவாதிகளால் எத்தனை மூர்க்கமாக செயற்படமுடியும் என்பதற்கு அந்த ஏழு வயதுப் பாலகன் கிங்ஸ்லியின் மரணம் சாட்சி சொல்கிறது. சுமார் பத்து நாய்கள் சுற்றி நின்று கடித்துக் குதறி, குடலை உருவி மண்டை ஓட்டைப் பிடுங்கி எடுத்து.... ஐயோ அந்தச் சிறுவன் கிங்ஸ்லியை நினைத்தால் நடுங்கித் துடிக்கிறது இதயம்.

தமிழ் நாட்டின் முத்து கிராமத்தில் வசிக்கும் ரொபேட்டுக்கு எரனேஷ், டானியல் ராஜ் என்ற பதினொரு வயது மகனும், டென்னிஸ் கிங்ஸ்லி என்ற ஏழு வயது மகனுமாக இரண்டு பிள்ளைகள்.

தந்தை ரொபேட், முத்து கிராமத்தில் மண்ணெண்ணெய் அடுப்பு திருத்தும் கடை வைத்திருக்கிறார். இந்தக் கிராமத்தில் இருக்கும் பள்ளியில் எரனேஷ் ஆறாம் வகுப்புப் படிக்க, அதே பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்தவன் கிங்ஸ்லி.

கூலி வேலை செய்யும் மக்கள் அதிகமாக வாழும் இந்தக் கிராமத்தில் அனேக வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை. அருகில் இருக்கும் திறந்த வெளியைத்தான் கழிப்பிடமாகப் பயன்படுத்துகிறார்கள்.

கடந்த மாதம் 26ஆம் திகதி, மாலை ஐந்துமணி. டியூஷனுக்குப் போகுமாறு கிங்ஸ்லியிடம் அவனது அம்மா அனிட்டா மேரி சொல்கிறாள். ''வயித்துக்குள் வலிக்குதம்மா'' என்று சொல்லிவிட்டு முள் பற்றைக்கு ஓடியிருக்கிறான் அவன். வெகுநேரம் ஆகியும் கிங்ஸ்லி திரும்பவில்லை. தம்பியைப் 'பாத்திட்டு வாடா' - என்று தனது மூத்த மகன் எரனேஷை அனுப்பியிருக்கிறார் தாய் மேரி. இப்போது தனியார் மருத்துமனையொன்றில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் எரனேஷ் அந்த முள்பற்றை பயங்காத்தை விவரித்தான்.

''தம்பியைக் காணேல்லையே என்று பாத்திட்டு வாறதுக்காக பற்றைக்குப் போனேன். அங்கே நாய்கள் கூட்டமாகச் சேர்ந்து எதையோ கடிச்சு இழுத்துக்கொண்டு இருந்தன. நான் பழைய துணியைத்தான் அவை கடித்து இழுப்பதாக முதலில் நினைச்சேன். பிறகு பாத்தால் அது என் தம்பி. நாய்களை விரட்டி விடலாம் என்று நினைத்து பக்கத்தில் போகும்போதே எல்லா நாய்களும் தம்பியை விட்டிட்டு என்னைக் கடிக்க துவங்கின. எல்லா நாய்களும் சுத்தி நின்று கடிச்சுக் குதறின. நான் அம்மா அம்மா எண்டு சத்தம்போட்டுக் கத்தினேன்.

என்னுடைய சத்தம் கேட்டு தூரத்தில் விறகு வெட்டிக்கொண்டிருந்த பக்கத்து வீட்டு அக்கா கையில் அரிவாளோட வந்துவிரட்டினதும் நாய்கள் விலகி ஓடிவிட்டன. பிறகு நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது.'' - இப்படி காயத்தின் வலியோடு பேசுகிற இவனுக்குத் தன் தம்பி கிங்ஸ்லி இறந்து போன விடயம் தெரியாது.

எரனேஷின் உடல் முழுக்க நெஞ்சை பதற வைக்கும் படுகாயங்கள். இடது காலின் தொடைப்பகுதி சிறிய இடைவெளி கூட இல்லாமல் குதறப்பட்டுள்ளது. மண்டை ஓட்டின் சதைப்பகுதி வெளியே வந்துவிட்டதால் கட்டுப் போடப்பட்டுள்ளது. இத்தனை வேதனைகளையும் சுமந்து கொண்டு, என் தம்பி எப்படி இருக்கிறான் என்று கேட்கிறான் இவன். முள் பற்றையில், நாய்கள் கடித்துக் குதறிய அந்த இடத்திலேயே கிங்ஸ்லியின் உயிர் பிரிந்துவிட்டது என்பதை அவனிடம் எப்படிச் சொல்வது.

குடல்வெளியே உருவப்பட்டு, தலைப்பகுதி குதறப்பட்டு, பிஞ்சு உடம்பை இரத்தக் களரியாக்கி நாய்கள் நடத்திய மரணத் தாக்குதலில் பலியான கிங்ஸ்லியின் உடலைப் பார்த்து டாக்டர்களே அலறி விட்டார்கள்.

''கிங் ஸ்லி ஏழு வயதுச் சிறுவன் என்பதால் அவனது உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் எதிர்த்துப் போராடும் திறன் போன்றவை மிகக் குறைவாக இருக்கும். அதனால்தான் நாய்களின் விஷம் அவனை உடனடியாகத் தாக்கிவிட்டது. இப்போது சிகிச்சையில் இருக்கும் எரனேஷுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றாலும், இவனுக்கும் நாய்களின் விஷம் உடம்பு முழுவதும் பரவிவிட்டது. எரனேஷை சராசரி மனிதனாக மாற்ற கொஞ்சகாலம் பிடிக்கும்'' - என்கிறார் எரனேஷுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர் ரஜனிகாந்த்.

ஒரு பிள்ளையை மண்ணுக்குள் புதைத்துவிட்டு, மறுபிள்ளையை மருத்துவமனைக்குள் அனுமதித்துவிட்டு கதறித்துடிக்கும் தாய் அனிட்டாமேரி எதுவும் பேசுகிற மனோநிலையில் இல்லை.

நாய்களிடம் சிக்கிக்கொண்ட எரனேஷ் காப்பாற்றுமாறு சத்தமிட்டபோது, ஓடிச்சென்று நாய்களை விரட்டிய வெங்கடேஸ்வரி என்ற பெண் சொல்கிறார்.

''பத்து நாய்கள் வரையில் எரனேஷை கடிச்சு குதறிக் கொண்டிருக்க என்னிடம் கையில் இருந்த அரிவாளால் அவற்றை விரட்டினேன். அவை ஓடிவிட்டன. அப்போது எரனேஷின் அம்மாவும் வந்துவிட்டா. நிலத்தில் மூச்சுப் பேச்சு இல்லாமல் விழுந்துகிடந்த கிங்ஸ்லியை அவதூக்க, நான் எரனேஷைத் தூக்கி வைத்திருந்தேன். கிங்ஸ்லி அந்த இடத்திலேயே செத்துக்கிடந்தான். எரனேஷை மட்டும் காப்பாத்த முடிஞ்சது'' என்று சொல்கிறார் அவர்.

சீத்த முள்ளுப் பற்றை என்று அந்தக் கிராம மக்களால் சொல்லப்படும் அந்த பற்றைக்குள் நுழையவே பயமாக இருக்கிறது. உள்ளே நுழைந்து சிறிது தூரம் போனதும் மண்ணில் திட்டுத் திட்டாகஇரத்தம்படிந்திருக்கிறது. ஒற்றைச் செருப்பு, அரைநாண் கயிறு - இவையெல்லாம் கிங்ஸ்லியின் உயிர் அடங்கிய அந்தப் பயங்ர நிமிடங்களையும், நாய்களோடு அந்தப் பிஞ்சு நடத்திய போராட்டத்தையும் மௌனமாகச் சொல்கின்றன.

கிங்ஸ்லியின் கொடூர மரணம் கருர் மக்களை நடுங்க வைத்திருக்கிறது. அந்த ஏழைக் குடும்பம் உயிர் பிழைத்திருக்கும் எரனேஷுக்கு முறையான சிகிச்சை அளிக்க வசதியில்லாமல் துடிக்கிறது. இது வாழ்க்கையின் ஒரு பக்கம்.




## விளம்பர வினோதம்



அலுவலகத்துக்கோ அல்லது வேறு எங்கேயாவதோ நீங்கள் பயணம் செய்யும்போது பல்வேறு விளம்பரப் பலகைகள் உங்கள் கண்களுக்கு விருந்தளிக்கும்.அல்லது தொலைக் காட்சியிலோ பத்திரிகைகளிலோ காட்சி தரும் விளம்பரங்கள் உங்களைக் கவர்ந்து இழுக்கும். இந்த விளம்பரங்களின் பின்னணியில் ஓர் அபாயம் ஒளிந்திருப்பது உங்கள் ஒருவருக்கும் தெரியாது.

இதுவரை ஆராய்ச்சியாளர்களுக்கே புலப்படாமல் இருந்த இந்த விடயம், இப்போதுமூளை இயல் ஆராய்ச்சியின் உயர் தர முடிவுகளை வெளியிடும் நியுரோன் என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

நாம் காணும் விளம்பரங்களில் எமது மனம் முழுமையாக ஈடுபடாவிட்டாலும் கூட, எமது மூளை அவற்றைப் பார்த்து சில விடயங்களைப் பதிவு செய்து கொள்கிறது.

இந்த ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்ட நவீன விளம்பர அரக்கர்கள் இதை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடிவெடுத்துவிட்டனர்.

முதன்முதலாக உலகில் பெரும் சந்தைப்படுத்தல் போட்டிக்கு ,இலக்கான குளிர்பானங்களான கொக்கா கோலா, பெப்சி கோலா விளம்பரப் போட்டியின் போது விளம்பர விற்பன்னர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக்கிக் கொண்டனர்.

நம்மை அறியாமலே நமது மூளையின் இன்பப் பகுதிகள் சில காட்சிகளைப் பார்த்தும் தூண்டப்படுகின் றன.இதை மூளை தன்னகத்தே பதிவு செய்து கொள்கிறது. இந்தக் கண்டுபிடிப்பு, விளம்பரங்களுக்கும் வெகுவாகப் பொருந்துகின்றது. இதனால் விளம்பர விற்பன்னர்கள் ஏக குஷியில் இருக்கிறார்கள். ஒரு விளம்பரப் பொருளை பார்த்தவுடன் மூளையில் அது பதிவாகி அதை வாங்கிவிட மனம் துடிக்கிறது. பணம் காலியாகிறது.

வண்ணத்தையும், வாசனையையும் கூட மூளை ஏற்கிறது.ஸ்ட்ரோபரியை சிவப்பு வண்ணத்துடன், அதற்குரிய வாசனையுடன் காட்டினால் மூளைப் பகுதிகள் பளிச்சிடுகின்றன. ஆனால்; அதே ஸ்ட்ரோபரியை நீல நிறத்துடன் காண்பிக்கும் போது மூளைப்பகுதிகள் மங்கலாகி விடுகின்றன.

இவையெல்லாம் அந்த ஆராய்ச்சியின் முடிவுகள்.

ஐஸ் கட்டிகளை பியர் கிளாஸ்களில் போடும் பெண்மணியைக் காட்டும் விளம்பரங்கள், செக்ஸ் உணர்வுக்கு பியர் தேவை என்ற நிலையை ஏற்படுத்தி விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பிரிட்டனிலிருந்து இப்போது கனடா வரை பரவியுள்ள இந்த நியுரோ சந்தைப்படுத்தல் முறையை தடை செய்யவேண்டும் என்று பலமான குரல் அமெரிக்காவில் கேட்கிறது.

ஆனால், விளம்பரங்களை எவ்வாறு தடை செய்ய முடியும் என்று நெஞ்சை நிமிர்த்திக் கேட்கின்றனர் விளம்பரத்துறை சார்ந்தோர்.

அபாயம், தொற்றுக் கிருமி போன்ற வார்த்தைகள் மூளையில் Amygdala -அமிக்டலா என்ற பகுதியில் பதிவாகியதும், பெரும் பயத்தை மனதில் ஏற்படுத்துகின்றன.அவை போன்ற சாதாரண வார்த்தைகள் இல்லாத விளம்பரங்களை மூளை மிகக் கவனமாகப் பதிவு செய்து கொள்கிறது. அதே சமயம் 'அண்ணன், தங்கை' போன்ற வார்த்தைகளை அது கண்டு கொள்வதில்லை. ஆகவே நியுரோ சந்தைப்படுத்தல் நிபுணர்கள் நம்மைப் பிடித்து தமது வலையில் மாட்டிவிடக் கூடிய வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து விளம்பரங்களில் சேர்த் துக் கொள்ள ஆரம் பித்துள்ளனர்.

1974இல் அமெரிக்காவில் 'பொம் கோன்' விளம்பரம் ஒன்று தடை செய்யப்பட்டது.




விளம்பரக் கலையில் என்ன விஞ்ஞானம் என்று அப்போது 'ஜோக்' அடித்தவர்களே இப்போது இது என்ன மூளை சத்திர சிகிச்சைத் துறையாக இருக்கிறதே என்று கண்களை அகல விரித்து வியக்கின்றனர்.

ஆகவே, விளம்பரங்களைக் கண்டு, அங்கு பிரயோகிக்கப் பட்டுள்ள வார்த்தைகளைக் கண்டு மயங்கி பொருட்களை வாங்குவது புத்திசாலித்தனம் அல்ல, வாங்குமுன் ஒவ்வொரு பொருளையும் பற்றி நன்கு ஆராய்ந்த பின்னரே வாங்க வேண்டும். ஏனெனில், எமது மூளையே எம்மைத் தப்பாக வழிநடத்த அனுமதிக்கக் கூடாது. விளம்பரங்களை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காது அறி வியல் அடிப்படையில் அணுகும் முறையே நியுரோ சந்தைப்படுத்தல் முறையிலிருந்து நம்மைக் காக்கும் கவசமாக இருக்கும்.



# கலக்கல்

வதனி



இந்தப் படத்தை நன்றாகப் பாருங்கள். இயேசு நாதரின் படம் என்று குழந்தை கூட சொல்லி விடும்.

ஆனால், இந்த இயேசுவின் உருவம் எவ்வாறு வரையப் பட்டுள்ளது என்று கூர்ந்து பாருங்கள். அவரது சீடர்கள், அவரது போதனையைக் கேட்க வந்தவர்கள் என்று எல்லோருடைய உருவத்தையும் கொண்டு உருவாக்கி இருக்கிறாங்களே...! வித்தியாசமாக இல்லை...?

## உலகம் போற போக்கு

பெல்ஜியத்தில் சிறைக்கைதிகள் தங்கள் மனைவிமாருடன் மாதத்துக்கு ஒரு முறை அஜால் குஜால் பண்ணலாம் என்று அனுமதி வழங்கப்படுகிறது. இப்போ அதற்காக இரண்டு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆனால், அதற்கு இது போதுமானதாக இல்லை எனக் கூறி தற்போது இந்த நேரத்தை மேலும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டு வருகிறதாம்.

பெல்ஜியம் பல்கலைக்கழக மாணவரான இனாலான் ஹவாரா என்பவர் கைதிகளின் செக்ஸ் வாழ்க்கை பற்றி ஆராய்ச்சி செய்தார். அந்த ஆராய்ச்சியின் படியே இவர், 'அதற்காக வழங்கப்படும் நேரம் போதுமானதாக இல்லை. எனவே, நேரத்தைக் கூட்டுங்கள்' என்று கோரிக்கை விடுத்திருக்கிறார். இதனை பெல்ஜியம் அரசும் ஏற்றுக் கொண்டு இது பற்றி பரிசீலித்து வருகிறதாம்.

இதிலிருந்து கிடைக்கும் நீதி:- இதுவும் அங்கே கிடைக்கிறதென்றால்... இனிமேல் நாமெல்லாம் ஏன் வெளியே இருப்பான்.

## காதிலே கேட்டவை

ஓமந்தை பஸ் நிலையத்தில் பயணி ஒருவரும் பஸ் நடத்துனரும் பேசிக் கொண்டது...



பயணி...''கொண்டக்டரண்ணே! இந்த பஸ் கன நேரமா இதே இடத்தில நிக்குதே... எப்பண்ணே ஓமந்தைக்கு வெளிக்கிடும்?

பஸ் நடத்துனர்...''அடப்பாவி... நேத்து இரவு வந்து நிறை மப்பில ஏறினியே... அப்ப நித்திரையாகி... இப்பதான் முழிச்சியா...படுபாவி..பஸ் ஓமந்தைக்கு வந்து 3 மணித்தியாலமாச்சு...இறங்கி ஓடு..''



கண்ணிமைகளில் மைபூசி தம்மைத் தாமே அழகு படுத்துபவர்களை பார்த்திருக்கிறோம். இங்கே, கண்ணுக்குள் மைபூசி அழகு படுத்துகிறார் ஒருவர். இம்மாம் பெரிய கண்ணும்... இவ்வளவு சிறிய மனிதரும் எப்படிச் சாத்தியப்படும் என்கிறீர்களா...? சும்மா... கணினியில் உல்டா பண்ணி எடுத்த படமே ஒழிய...இது உண்மையல்ல...

வெள்ளவத்தையில் இருவர் பேசிக் கொண்டது...



ஒருவர்:- ''உங்கட மனைவிக்குத் தொடர்ந்து இடுப்பு நோவு இருக்கென்டு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனீங்களே..! இப்ப எப்படி சுகமாகி விட்டுதோ?

மற்றவர்:-''ஓ...அது அண்டைக்கே சுகமாகிவிட்டுது. டாக்டர் பாத்திட்டு'வயசாகிக் கொண்டு வருகுது தானே! இனி இப்பிடிச் சின்னச் சின்ன நோயுள் வரத்தான் பாக்கும்'. என்டு சொன்னது தான் தாமதம்...துடிச்சிக் கொண்டு எழுந்திட்டாள்.''

அடடா பையன் இப்படி ஒரு பொது இடத்திலே இந்த வேலையைச் செய்கிறானே!இவனுக்கு வெட்கமாக இல்லையா?



இப்படி நீங்கள் நினைப்பீர் கள்.இது நியாயம் தான். ஆனால், இது நீங்கள் நினைப்பது போல் அல்ல. பீச்சியடிக்கும் தண்ணீர்க் குழாய் ஒன்றின் மேலே இந்தக் குறும்புப் பையன் கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருக் கிறான். அவ்வளவு தான்.

## பெரிய சுறா சின்னச் சுறாவிடம்

''மகனே..! அந்த மனிதனைப் பிடித்து அப்படியே விழுங்கலாம், தப்பில்லை. ஆனால், அவன் தனது முதுகிலே சுமந்திருக்கும் அந்த சிலிண்டரையும் சேர்த்து விழுங்கிவிடாதே. காஸ் பிரச்சினை ஏற்பட்டு நீ கஷ்டப்பட வேண்டி வந்து விடும்.கவனம்.''





அம்மா கேட்டார் மகனிடம், ''ஏண்டா கண்ணு...! யார் முத்தம் கேட்டாலும் உடனே கொடுக்கிறாயே! பக்கத்து வீட்டு மாலா அன்ரி முத்தம் கேட்டால் கொடுக்கவே மாட்டேன் என்கிறாயே ஏன்டா...?'' அந்த 3 வயதுச் சிறுவன் சொன்னான் ''ம்ஹூம் நான் அவவுக்கு முத்தம் கொடுக்க மாட்டேன். ஏனென்றால், அவ அப்பாவுக்கு செருப்பைக் கழட்டி அடிச்ச மாதிரி எனக்கும் அடிப்பா...''

# ஜனாதிபதித் தேர்தல் வே(ர)ட்டுகள்

ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க அரசியலில் பல்வேறு தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட



லால் காந்த

கூட்டமேடையில் தோன்றி உரையாற்றிக்கொண்டிருந்த ஜே.வி.பியின் முன்னாள் அமைச்சர் லால்காந்தவுக்கு பின்கதவால் வெளியேறவேண்டிய கசப்பான அனுபவம் ஒன்று சமீபத்தில் ஏற்பட்டுள்ளது. பலவந்தமாக மேடையிலிருந்து இறக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டார்.

இந்தக் கூட்டத்தை அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா பதுளைமாவட்டத்தில் ஒழுங்கு செய்திருந்தார். கூட்டத்தில் பங்குபற்றுமாறு முன்னாள் அமைச்சர் லால்காந்தவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

லால்காந்த கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, பொதுக் கட்டமைப்பைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார். "நாம் (ஜே.வி.பி) அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோம் என விடுத்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் இந்த அமைப்பை அமுல் நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா முன்நின்று செயற்பட்டார்'' - என அவர் அப்போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தை அமுல் நடத்துமாறு பல பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதியைத் தூண்டிவந்தனர் எனவும், அதனால், அவரது அரசாங்கம் பலவீனமடைய நேரிட்டது என்றும் குறிப்பிட்டார்.

அவர் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஹாலி எல மத்திய குழுவின் செயலாளர், ஜனாதிபதி பற்றியும், ஸ்ரீ.ல.சு. கட்சிபற்றியும் குறிப்பிட்டு பேசியவற்றை லால்காந்த வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டுமென வற்புறுத்தினர்.

இந்தத் தகவல் மேடையில் இருந்த லால்காந்தவுக்கு அனுப்பப்பட்டபோதும், அவர் தமது பேச்சின் குறிப்பிட்ட பகுதியை வாபஸ்பெற மறுத்துவிட்டார். நெருக்கடி ஆரம்பித்தது.

ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஹாலி எல மத்தியகுழுவின் செயலாளர் மேடைக்குச் சென்றார். லால்காந்தா மீது சொல்லம்புகளைத் தொடுக்க ஆரம்பித்தார். "இது ஸ்ரீ.ல.சு. கட்சி அமைப்பாளர்களுக்கான கூட்டம். இதில் கலந்துகொள்வதற்கு என்ன துணிவுடன் வந்தீர்கள். வந்தது மட்டுமன்றி கட்சியை மட்டுமல்ல, அதன் தலைவரையும் தாக்கி உரையாற்றுகிறீர்கள்'' - என ஆவேசமாகக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழப்பத்தைத் தொடர்ந்து ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஏனைய அங்கத்தவர்கள் மேடையைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். லால்காந்த மேடையின் பின்புறத்தால் வெளியேறிச் சென்றுவிட்டார்.

**ஹெல உறுமயவுக்குள் குழப்பம்**

இதுமட்டுமல்ல இப்போது மஹிந்த ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கூட்டணியின் காரணமாக ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் பாரிய வெடிப்பு ஏற்பட்டுவிட்டது.

கட்சியின் ஒருபகுதியினர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். ஜாதிகஹெல உறுமயவின் செல்வாக்கு மிக்க அங்கத்தவர்களான வண. கொலன்னாவ ஸ்ரீ. சுமங்கள தேரரும், வண. உடுவே தம்மலோக தேரரும் அவர்களது ஆதரவாளர்களுடன் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முன்வந்துள்ளனர்.

தவிர, முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை பலமாகக் கண்டித்து வந்தவரும், ஜே.வி.பியின் ஆதரவு பெற்ற தேசிய தேசப்பற்று இயக்கத்தின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவருமாகிய வண. எலேகுணவன்சவும் மஹிந்த - ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய பிரசாரங்களுக்கு ஆதரவு அளிப்பதில்லை என முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

"தொண்டமான் ஜே.வி.பியுடன் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்திவந்தார். அந்த ஒப்பந்தம்



நிமால் ஸ்ரீபால டி சில்வா

செய்யப்பட்ட பின்னர் பிரதமருடன் தானும் ஒரு தேர்தல் உடன்பாட்டுக்கு வருவதாக வாக்குறுதி அளித்தார். இப்போது பிரதமரின் காலை வாரிவிட்டிருக்கிறார்.''இப்படி மஹிந்தவின் பிரதான ஆலோசகரான அவரது தம்பி பஸில் ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருக்கிறாராம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரணிலுக்கான தனது ஆதரவு பற்றி விரைவில் அறிவிக்கும்போது, பிரதமருக்கு அது மேலும் ஒரு சவாலாக விளங்கப் போகிறது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 180

சொற்சிலம்பம் 180 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஒக்டோபர் 09ஆம் திகதி ஆகும். விடைகள் ஒக்டோபர் 15ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 23ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.178க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு−14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 178

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சு | 2 வா | 3 ச | ம் | ■ | 4 க | 5 மு | கு |
| 6 பா | க் | கி | ■ | 7 ப | த் | து | ■ |
| 8 வ | கு | ப் | 9 பு | ■ | 10 த | கு | 11 தி |
| ம் | ■ | 12 பு | த் | 13 தி | ரி | ■ | ரா |
| ■ | 14 மா | ■ | 15 த | ரை | ■ | 16 க | வி |
| 17 ஆ | த | 18 வ | ன் | ■ | 19 கு | ட் | ட |
| 20 கு | வ | ளை | ■ | 21 ப | ண் | ட | ம் |
| 22 தி | ன் | ■ | 23 வே | ண் | டு | ம் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 176

1. சுரேஷ் குமார்
   61/18, மில் வீதி
   கொக்குவில் .
2. எஸ். ஜீவா
   விக்டோரியா கோட்
   54− 6/3 சென் லோறன்ஸ் ரோட், வெள்ளவத்தை.
   கொழும்பு−06
3. P. பியரட்ன
   48 மொரகொல
   புவக்பிடிய.

### பாராட்டுப் பெறுவோர்

1. கே. சாமினி
   54/5 கடல்காட்சி வீதி
   திருகோணமலை
2. திருமதி தேவிகா மகேந்திரராஜா
   12/1, 1ஆம் குறுக்குத் தெரு
   சிலாபம்.
3. எஸ். மோகன்தாஸ்
   கடல்மீன்
   ரயர்வேக்ஸ்
   முறிகண்டி.
4. திருமதி சு. ரஞ்சனி
   மே/பா.நா. சுந்தரலிங்கம்
   8ஆம் வட்டாரம்
   புதுக்குடியிருப்பு
   முல்லைத்தீவு.
5. ஏ. எச்.ஏ. அப்துல்லா
   த.பெ. இல. 04
   தர்கா.
6. எஸ். ஜோர்ஜ்
   60/10 ரத்னம் ரோட்,
   கொழும்பு−13.
7. திருமதி பாலசரஸ்வதி தங்கவேலு
   U. 3/3, அண்டர்சன் தொடர் மாடி,
   கொழும்பு − 05
8. வ. துரைராஜா
   22−3/1 மூர் வீதி
   வெள்ளவத்தை.

## சொற்சிலம்பம் போட்டி இல.180

**இடமிருந்து வலம்**

1. பதிப்பித்தல் நடைபெறுவது இங்கே.
4. எப்போதும்
6. பசுவில் பால் சுரப்பது இங்கே/ குழந்தையைத் தாலாட்டுப் பாடி தாய் தூங்க வைப்பதும் இங்கேதான்.
7. ஒரு கிழமை/ ஒரு கோளும் கூட.
8. ஆறும் கடலும் சந்திக்கும் இடம்.
11. எண்ணு/ நினைத்து கொள்
12. தடிமன் வந்தால் வரும்
14. கைப்பற்றுதல்/ கட்டுப்பாட்டில்கொண்டுவருதல் — என்பதைக் குறிக்கும்.
16. குளிர்மை
17. அடுப்படிக் கருவி
18. பூமி
19. கூட்டல் குறி.
20. கால்
21. வணங்குதல்/ துதி செய்தல்.
22. மேடு

**மேலிருந்து கீழ்**

1. ஒருவரை மற்றவருக்கு பழக்கம் செய்வது
2. எல்லாவற்றையும் ஒன்றாக நோக்கும் இயல்பு.
3. கடுமையானது
4. நூறு/ ஒரு ரூபாயில் நூறு
5. மமதையின் பிறப்பிடம் இந்த எண்ணம்தான்.
7. வதந்தி/ கட்டுக்கதை
9. உயிரின் ஆரம்பம்
10. மணம்
13. மறைத்து வைத்துத் தாக்குவது இதனால்
15. உணவுக் கால்வாயில் நடக்கும் தொழிற்பாடு
16. நெருக்கல், அடையாளம்
17. கோட்டை மதிலைச் சூழ இருக்கும் நீர்க்கிடங்கு
18. இளைய சகோதரன்
19. பிணம்/ பிரேத

## சொற்சிலம்பம் போட்டி இல. 180


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | | ■ | 12 | | ■ | 13 |
| | ■ | 14 | 15 | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | | ■ | 20 | | | ■ | |
| 21 | | | | ■ | 22 | | |

# நடப்பு உலக சாம்பியன் அவுஸ்திரேலியா மீண்டும் திரும்புமா பழைய நிலைக்கு!

ஆஷஸ் டெஸ்ட் தொடர் தோல்வி அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியைப் பாடாய்படுத்தி வருகிறது. ஒருபுறம் ஒட்டு மொத்த அணியையும் மாற்ற வேண்டும் என்ற முன்னாள் வீரர்களின் கோரிக்கைகள்; மறுபுறம், தலைவர் ரிக்கி பொண்ரிங் பதவியைப் பறிக்க வேண்டும், பயிற்சியாளர் புக்கானனை நீக்க வேண்டும் என்ற வலியுறுத்தல்கள். இப்படி நாளுக்கொரு பிரச்சினைகள் முளைத்த வண்ணம் உள்ளன. இது போதாதென்று தற்போது புதிதாக வந்துள்ள தகவல் அவுஸ்திரேலிய அணியின் மானத்தை வாங்குவதாக உள்ளது. இதைப் பற்றி இப்போது பார்ப்போம்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ளபல இணையத்தளங்கள் முக்கியமான ஒவ்வொரு தொடரின் போதும் 'பந்தயம்' நடத்தும். இது முகவர்கள், நடன அழகிகள் (தாரணம் கான் போல) போன்றவர்களால் நடத்தப்படும் 'கிரிக்கெட் சூதாட்டம்' என நினைத்துவிட வேண்டாம். சர்வ தேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) அங்கீகாரம் பெற்றவை. போட்டியில் எந்த அணி ஜெயிக்கும் என நாம் நினைக்கிறோமோ, அந்த அணியின் மீது பணம் கட்டலாம். இப்படி ஒரு அங்கீகாரம் பெற்ற 'பந்தயம்' தற்போது சுப்பர்சீரிஸ் தொடர் குறித்து நடந்து வருகிறது.

அவுஸ்திரேலிய - உலக லெவன் அணிகள் மோதும் சுப்பர் சீரிஸ் தொடரில் மூன்று ஒரு நாள் மற்றும் ஆறு நாள் கொண்ட டெஸ்ட் ஆட்டம் ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. உலக லெவன் அணியில் ஆஷஸ், வெற்றிக்கு முக்கிய காரணமான இங்கிலாந்தின் அன்ட்ரு பிளின்டொவ் இடம் பெற்றுள்ளார். இவரைத் தவிர, மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர நாயகன் பிறைன் லாரா, இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் போன்ற நட்சத்திர வீரர்கள் பலர் உள்ளனர். இப்படி பலம் மிக்க அணியை, ஆஷஸ் தோல்விக்குப் பிறகு அவுஸ்திரேலியாவால் ஜெயிக்க முடியாது என ரசிகர்கள் நினைத்து விட்டார்களோ என்னவோ...!



ஏனெனில், 'பந்தயம்' ஆரம்பித்து மூன்று வாரங்கள் ஆன போதிலும், அவுஸ்திரேலியா மீது வெறும் ஆயிரம் ரூபாய்க்கும் (இந்திய மதிப்புப்படி) குறைவாகவே 'பந்தயம்' கட்டியுள்ளார்களாம். உலக லெவன் அணி ஜெயிக்கும் என ரு.4 லட்சத்திற்கும் அதிகமாக பந்தயம் கட்டியுள்ளனர். இது போகப் போக இன்னும் அதிகமாகும் என 'பந்தயம்' நடத்துபவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்படிப்பட்ட பந்தயத்தில், அவுஸ்திரேலிய அணி மீது இவ்வளவு குறைவாகப் பணம் கட்டுவது இதுவே முதல் முறை எனவும் இவர்கள் கூறுகின்றனர்.


ஒரு தொடரில் பெற்ற தோல்விக்கே அவுஸ்திரேலியாவின் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதே... இதிலிருந்து மீளுவது எப்படி? மீண்டும் உலக சாம்பியனாக, வீழ்த்த முடியாத அணியாக வலம் வருவது எப்போது? இதற்கெல்லாம் அவுஸ்திரேலியத்துடுப்பாட்டக்காரர்களும், பந்து வீச்சாளர்களுமாக அனைத்து வீரர்களும் ஒன்று சேர்ந்து விரைவில் பதில் அளிப்பார்களா?

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பிரிட்டனில் குடிபுகும் காரணம்!

பிரிட்டன் குடியுரிமை வாங்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. முகமது அக்ரம் என்ற டெஸ்ட் வீரர் பிரிட்டனில் குடியுரிமை வாங்கி நிரந்தரமாகி விட்டார். உள்ளூர் போட்டிகளில் விளையாடி காலத்தை ஓட்டுகிறார். ஹான் அட்னன், முகமது ஜலீல்... இப்படி தெருவோர கிரிக்கெட் ஆடியவர்கள்கூட லண்டனில் குடியேறிவிட்டார்கள்.

ஆசை யாரை விட்டது? முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களான சக்லைன் முஷ்டாக், முஷ்டாக் அகமது இருவரும் ஆயத்தமாகி விட்டனர். இருவரையும் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் ஏறக்குறைய கைகழுவி விட்டது. ஆடிய கால்கள் சும்மா இருக்குமா? உடனே விமானம் பிடித்து லண்டனில் இறங்கி விட்டனர். அங்கு பிராந்தியக் கிரிக்கெட் போட்டிகளில் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

சஸெக்ஸ் அணியில் அகமதுவும், ஸர்ரே அணியில் சக்லைனும் சுழற்று கிறார்கள். பாகிஸ்தான் அணியில் வாய்ப்புக் கிடைப்பது இனிக் குதிரைக் கொம்பு என்று நினைத்தார்களோ, என்னவோ...பிரிட்டிஷ் குடியுரிமை கேட்டு விண்ணப்பித்துமுள்ளார்கள் இருவரும். கிடைத்தால்... எஞ்சிய காலத்தை அங்கேயே ஓட்டி விடலாம் என்று நினைப்பார்கள் போலும்.



# இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களை பாராட்டும் ரொனி, எலிசபெத்!



ஆஷஸ் தொடரை ஜெயித்தாலும் ஜெயித்தார்கள்...இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களைக்கையில்பிடிக்கமுடியவில்லை. போட்டி முடிந்து என்னவோ நிறைய நாள் ஆகிவிட்டது.ஆனாலும், கொண்டாட்டத்துக்கு மட்டும் குறைவில்லை. தினம் தினம் விருந்துதான். இது தொடர்பாக உற்சாகத்தின் விளிம்பில் இருந்த கெவின் பீற்றர்சன் சுவாரஸ்யத் தகவல்களைப் பகிர்ந்துக் கொண்டார்.

நினைவில் இல்லை. ஒவ்வொரு வீரரையும் தனித் தனியாக கை குலுக்கி வாழ்த்தினார் பிளேயர்." அடுத்த நாள் வீடியோவில் பார்த்தப் பிறகு தான் நிகழ்ச்சி நடந்ததே நினைவுக்கு வந்தது" என்கிறார் கெவின் பீற்றர்சன். "மூன்று மாதமாக இரவு விருந்துப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை. கவனம் எல்லாம் ஆஷஸ் வெற்றி மீது மட்டுமே. நினைத்ததை சாதிச்சாச்சு. இப்போ, மனம் போன போக்கில் குடித்துக் கொண்டாடுகிறோம். இது தப்பா?"என்றும் கேள்வி கேட்கிறார் பீற்றசன் வெகு உற்சாகமாக..


ஆஷஸ் கிண்ணத்தை ஜெயித்துசில நாட்கள் கழித்து வீரர்களைப் பாராட்டுவதற்காக அழைத்தாராம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர். டவுனி நகரில் உள்ள பிரதமரின் இல்லத்துக்கு வீரர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். முன்தினம் இரவெல்லாம், தூக்கமில்லாமல் குடித்து ஆட்டம் போட்டதால் பிரதமரின் பாராட்டு நிகழ்ச்சியில் நிறைய வீரர்களுக்கு ஆரவாரம் அதிகம். பிரதமர் இல்லத்தில் நடந்ததே

இங்கிலாந்து வீரர்களை ராணி எலிசபெத் நிறையவே பாராட்டியிருக்கிறார். ஒவ்வொரு வீரர்களின் ஆட்டம் பற்றியும், கிரிக்கெட் விமர்சகர் அளவுக்கு விவரித்து - வர்ணித்து கடிதமும் அனுப்பினாராம்!

# தேன்நிலாவா? டேனிலா வா?

பெயரிலேயே 'லா' வைத்திருக்கிறார் டேனிலா ஹண்டுலோவா.மரியா...மரியா.. என்று கதறிக் கொண்டிருந்த ஊடகங்களின் கவனத்தை, வலை வீசி இழுத்திருக்கிறார். ஸ்லோவாகியாவில் இருந்து வந்திருக்கும் இந்த சூப்பர் லோவுக்கு வயது 22.

(கலப்பு இரட்டையர்) சம்பியன் கிண்ணம் ஜெயித்த பின்னர் தான், ஊடகங்கள் இவர் பக்கம் கழுத்தைத் திருப்பியிருக்கின்றன. கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக டென்னிஸ் ஆடிக் கொண்டிருக்கிறார். இந்த இளம் புயலுக்கு (புயல் வேண்டாம்... தென்றல் என்று அழைக்கலாமா?) டென்னிஸ் மட்டுமல்ல, அதைத் தாண்டியும் நிறைய விருப்பம் இருக்கிறதாம்.



டென்னிஸ் தர வரிசையில், 2002ஆம் ஆண்டு 8வது இடம் பிடித்த இவர், இப்போது 19ஆவது இடத்தில் உள்ளார்.ஏன் தரவரிசைப் பட்டியலில் குறைஞ்சிடுச்சி?என்று வருத்தப் பட்டால், "பொண்ணுக்கு ஆர்வம், டென்னிஸ் தவிரவும் நிறைய விஷயங்களுக்குத் தாவுகிறது" என்கிறார்கள் கூட ஆடுபவர்கள். பனியில் சறுக்குவது, நீச்சல், ஸ்கேட்டிங்...இதெல்லாம் ரொம்ப இஷ்டமாம்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம், தண்ணியில் மிதப்பாராம் (அட! நீச்சல் குளம் தாங்க!!) விதவிதமாய் போட்டோ எடுத்துக் கொள்வதும் ஆர்வமாம். அவரது இணையத் தளத்துக்குச் சென்று பார்த்தால், மூச்சு முட்டு மளவுக்கு ஏராளமாக..ரக ரகமாய் போஸ் கொடுக்கிறார்!

முதல் முறையாக மகேஷுடன் ஜோடி சேர்ந்திருக்கிறார் டேனிலா.

"மகேஷ் ரொம்ப ஸ்பெஷல். நிறைய டெக்னிக் அவரிடம் படித்துக் கொண்டேன்" -என்கிறார்.

2002, விம்பிள்டன் கலப்பு இரட்டையரில் அவுஸ்திரேலிய டெனிஸ் வீரரான கெவின் உல்யெட்டுடன் ஜோடி சேர்ந்து ஆடினார். இறுதி ஆட்டத்தில் மகேஷ் பூபதியிடம் சம்பியன் கிண்ணத்தைப் பறி கொடுத்தார். இப்போது அதே மகேஷ் பூபதியுடன் ஜோடி சேர்ந்து ஆடுகிறார்.

இப்போதுதானே அறிமுகமாகிறார் டே'நிலா'. இனிப் பாருங்கள்... விதம் விதமாக அவரது புகைப்படங்கள் செய்தி ஊடகங்களில் கொட்டோகொட்டென்று கொட்டப் போகிறது.

# காங்கிரஸ் கூட்டணியில் பிளவை ஏற்படுத்தும் பீகார் தேர்தல்கள்

இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசின் பங்காளிக் கட்சிகள் அடுத்த மாதம் நடக்கவுள்ள பீகார் மாநில தேர்தல்களில் ஒன்றுக்கொன்று எதிராகப் போட்டியிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் மற்றும் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பரஸ்வானின் லோக் ஜன்ஷக்தி ஆகிய இரு கட்சிகளும் பீகார் மாநிலத்தில் பரமவைரிகளாக இருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகவும் பின்தங்கிய, கல்வி அறிவு குறைந்த மக்கள் தொகை மிகுந்த மாநிலம் பீகார். சாதிவேறுபாடுகள் ஆழமாக வேருன்றிய ஒரு மாநிலமும் இது ஆகும். 1990முதல் 15 ஆண்டுகள் அங்கு ஆட்சிநடத்திவரும் யாதவ் குலத்தவரான லல்லுவின் கட்சி மாநில முன்னேற்றத்தை முன்னிட்டு எதுவும் செய்வதில்லை என பரவலான குற்றச்சாட்டு உள்ளது. கோடி கோடியாக ஊழல் செய்ததாகவும் அவரது கட்சி மீது புகார் உள்ளது. இத்தகைய ஒரு ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாகவே 1996இல் லல்லு பதவிவிலகி தனது இடத்தில் மனைவியை உட்காரவைக்கவும் நேரிட்டது. மாநிலத்தின் பல அமைச்சர்கள்



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

மீது பிணையில் வெளிவர முடியாத கைது உத்தரவுகளும் உள்ளன. இவர்கள் தலைமறைவாக உள்ளனர். இதனால் இவர்களது பெயரைவாக்காளர் இடாப்பிலிருந்து அகற்றவும் வேட்புமனுத் தாக்கல் செய்யவரும்போது இவர்களை கைதுசெய்யவும் நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன. இத்தனைக்கு மத்தியிலும் லல்லுவின் கட்சி மீண்டும் தேர்தலில் வென்று ஆட்சி அமைக்கும் நிலையிலுள்ளது. காரணம் தாழ்ந்த சாதியினருக்கு லல்லுவை விட்டால் வேறு கதியில்லை.

பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பி. மற்றும் ஜனதா தலிக் கூட்டணி உயர்சாதி இந்துக்களின் வாக்குகளில் தங்கியுள்ளன. ஜோர்ஜ் பெர்னாண்டஸின் ஜனதா தளத்துக்கு ஓரளவு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் ஆதரவு உண்டு. காங்கிரஸ் கட்சியின் நிலையோ பெரும் சங்கடமாகும். லல்லு - பாஸ்வான் மோதலில் இடையில் அகப்பட்டுத் தவிப்பது காங்கிரஸே. இவர்கள் இருவரையும் இணைக்க முயன்றும் முடியாமல் போகவே காங்கிரஸ் லல்லுவுடன் மட்டும் கூட்டணி வைத்துள்ளது. பாஸ்வான் மற்றொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான தலித்களின் செல்வாக்கைப்பெற்ற தலைவராவார். இவர் இப்போது மத்திய காங்கிரஸ் அரசில் நிலக்கரி அமைச்சராக உள்ளபோதும் பீகாரில் அதே காங்கிரஸின் எதிர்க்கூட்டணியிலுள்ளார். தாழ்ந்த சாதி வாக்குகள் லல்லு - பாஸ்வான் என இரண்டாகப் பிரிவதால் பி.ஜே.பி - ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூட்டணிக்கு வெற்றிவாய்ப்புக் கிடைக்கலாம்.


எனினும், லல்லு தேர்தல் வெற்றியை தனதாக்குவதில் சமர்த்தர். கடந்த 15 ஆண்டுகளாக லல்லு ஆட்சி இந்த முடிவுக்கு வருகிறது என பி.ஜே.பி. கூறினாலும் அது முடிவுக்கு வரவே இல்லை.

கடந்த ஏப்ரலில் தான் பீகாரில் தேர்தல்கள் நடந்தன. எனினும் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தனித்துப்போட்டியிட்டு கணிசமான இடங்களை வென்ற பாஸ்வானின் ஆதரவின்றி பி.ஜே.பியோ, லல்லுவோ ஆட்சி அமைக்கமுடியாது போனது.

கடைசியில் பாஸ்வானின் கட்சியை இரண்டாக உடைப்பதில் பி.ஜே.பி. வெற்றிகண்டது. இதனால் ஆத்திரமுற்று லல்லு, பாஸ்வான் இருவரும் சட்டசபையை கலைக்கும் முடிவுக்கு வந்தனர். இந்தச் சம்பவத்தால் பாஸ்வான் பி.ஜே.பி. அணியில் சேர்வது இயலாத காரியம். எனினும் லல்லுவுடன் உள்ள நீண்டகால விரோதம் காரணமாக அந்த அணிக்கும் அவரால் செல்லமுடியாது. காங்கிரஸூம் பாஸ்வானும் எதிரெதிர் அணிகளில் போட்டியிடுவதால் மத்திய அரசில் சிக்கல்கள் ஏற்படலாம்.

பாஸ்வான் காங்கிரஸ் அணியை விட்டு விலகினால் 4எம்.பிக்களின் ஆதரவை மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு இழக்கும். இதனால் மன்மோகன் அரசுக்கு உடனடிப் பாதிப்பு ஏதும் ஏற்படாது.

எனினும் தமிழகத்தில் தேர்தல் வரவுள்ள நிலையில் பாட்டாளி மக்கள் கட்சி காங்கிரஸ் அணியிலிருந்து வெளியேறலாம் என்ற ஊகங்கள் இருப்பதால் மேலும் 6 எம்.பிக்களின் ஆதரவை மன்மோகன் இழக்கலாம்.



பிரசாத் யாதவ்

இவ்வாறான நிலையில் நீண்டகால ஆபத்து ஒன்று மன்மோகன் சிங் அரசுக்கு இருக்கவே செய்கிறது.

**எஸ். சுதேந்திரஜித்**

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம். டி.வி நிகழ்ச்சி | எம். டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம். டி.வி நிகழ்ச்சி | எம். டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | சிறுவர் நிகழ்ச்சி | சமையல் |
| 10.00 | உங்கள் சொய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 11.00 | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | இப்படிக்கு நீங்கள் | வர்த்தக உலகம் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | சக்தி மேட்னி | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் எண்ட் மேட்னி | |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | மதுர |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி—மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | நினைவுகள் | ருத்ர வீணை | சூப்பர் சீன் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | பாடல்கள் 6.15 [illegible] | இசைத்தென்றல் | அறிவு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | எஸ்.எம்.எஸ் ஷோ | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | றாஜ றாஜேஸ்வரி | இளைய கானம் |

**த**மிழர் தாயகத்தைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்ற முழக்கத்துடன்

இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான இறுக்கமான

மாவட்ட ஆயர் வண. இராயப்பு யோசப், மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், திருகோணமலை தமிழ் மக்கள்

இருந்தும், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தும் பல நூற்றுக்கணக்கானோர் புலிகளால் வழங்கப்படும்

பெரும்பாலானோர் இப்பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். தவிர வவுனியா, மணலாறு ஆகிய இடங்களிலும்

# மன்னாரில் பேரெழுச்சி!

மன்னாரில் பெரும் எழுச்சியுடன் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வு தொடர்ச்சியாகத் தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுவரும் தமிழ்த் தேசிய எழுச்சியின் தொடரான நிகழ்வாகவே கருதமுடிகிறது.

சூழலுக்கு மத்தியில் இந் நிகழ்வு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

எழுச்சி நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகின.

பொதுச்சுடரை மாவீரர் அன்சாத்தின் தந்தையாரும்,




யாழ்ப்பாணத்தில் பொங்கு தமிழாகவும் இவ் எழுச்சி தொடர்கிறது. ஒக்டோபர் 27 இல் வவுனியாவிலும் தமிழ்த் தேசிய எழுச்சி ஒன்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மன்னார் எழுச்சி நிகழ்வு பலத்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடும் காவலுக்கு மத்தியில் பெரும் எழுச்சியுடன் இடம்பெற்றது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் குழுமிய

துணைப்படை மாவீரர் செபஸ்தியனின் துணைவியாரும் ஏற்றினர். தமிழீழத் தேசியக்கொடியை விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதியின் தந்தையார் மனுவல் பேதுரு ஏற்றிவைத்தார். எழுசசிச் சுடர்கள் ஏற்றப்பட்டபின்னர் அகவணக்கம் இடம்பெற்றது.

தலைமையுரையை சி.சௌந்தரநாயகமும்,



ஆயிரக்கணக்கான மக்கள் தமது உரிமைக்காக உரத்துக் கோஷமிட்டனர். நிகழ்வு இடம்பெற்ற பொதுமைதானத்தைச் சுற்றியுள்ள வீதிகள் எங்கும்

வரவேற்புரையை சற்குணநாதனும் நிகழ்த்தினர். தொடர்ந்து விசேட அதிதிகள் உரையாற்றினார்கள். எழுச்சி நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 18நாடாளுமன்ற



[illegible]

எழுச்சிகள், மன்னார்

பேரவைத் தலைவரான பெ. சந்தரசேகரன் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கடந்த ஜூலை மாதம் வவுனியாவில் இடம்பெற்ற தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழர் உரிமைப்பிரகடனத்துக்கு ஆதரவாகப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வு வவுனியாப் பிரகடனத்துக்கு ஆதரவாக மாவட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் எழுச்சி நிகழ்வின் தொடராகவே இடம்பெற்றுள்ளது.

நீண்டதொரு ஆயுதப்போராட்டத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் பல நெருக்கடிகளைக் கடந்து பல சவால்களையும் முறியடித்து வெற்றி கொண்டே வருகிறது.

2002 பெப்ரவரியில் செய்துகொண்ட போர் நிறுத்தத்தின் பின்னர் வந்த சமாதானக் காலம் தமிழ்த் தேசியத் துக்குப் பெரும் சவாலாக எழுந்து நிற்கிறது. இக் காலத்தில் தமிழ்த் தேசியத் தின் முன் மலையாக எழுந்த சவால்களை எல்லாம் தமிழ்மக்கள் முறியடித்தே வந்திருக்கி றார்கள். இப்போது ஒரு முக்கிய மையப் புள்ளியை வந்தடைந்துள்ளார்கள். அடுத்தகட்டம் என்னஎன்பது குறித்து சிந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வேளையில்தான் வவுனியாவில் தமிழ்த் தேசியப்பிரகடனம் இடம்பெற்றுள்ளது. அது ஒரு முக்கிய திருப்பமாகவும் அமைந்தது.


கட்டியெழுப்பப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியத்தை தொடர்ந்து உறுதியுடன் காப்பாற்றிக் கொள்ள தமிழ்த் தேசம் தயார் என்ற செய்தியைத்தான் வவுனியா எழுச்சிமாநாடு கூறியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வும் இன்னொரு மைல்கல்லாக இருக்கப்போகிறது.

மன்னார் மற்றும் யாழில் இடம்பெறும் நிகழ்வுகள் ஒரு வித்தியாசமான சூழலில் இடம்பெறுகின்றன. புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வெளியேறிய பின்னர் இராணுவப் பிரசன்னம் நிறைந்த பகுதிகளில் இவ் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு எழுச்சியின் வடிவமாகவும் இனிப் பொறுமைகாக்க முடியாது என்ற நிலையினையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றுவரும் சமவேளையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்




துணைப்படைக்கான ஆயுதப்பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். இன்னொரு போர் ஏற்பட்டால் ஒரு முடிவு காண்பதென மக்கள் குதித்துள்ளமை இலங்கை அரச



பாதுகாப்புத் தரப்பினரை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற இடங்களில் பல ஆயிரக்கணக்கானோர் இவ்வாறு புலிகளின் தற்பாதுகாப்பு பயிற்சிகளையும், துணைப்படைக்கான ஆயுதப்பயிற்சியையும் பெற்றுள்ளனர். அதேபோல் யாழ். வடமராட்சியில் கடற்புலிகளால் பல நூற்றுக்கணக்கானோருக்கு துணைப்படைக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் யாழ். இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தும்



மக்களுக்கான ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.


தமிழ் மக்கள் ஒரு முக்கிய கட்டத்துக்குள் வந்துவிட்ட நிலையில் அடுத்தகட்டம் என்ன? என்று சிந்தித்துவரும் நிலையில் இரு முனைகளில் தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கைகளை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். ஒன்று தமிழ்தேசிய எழுச்சி மாநாடுகள் மூலமாகவும் அடுத்தது ஒன்றிணைந்த ஆயுதப்பயிற்சிகள் மூலமாகவும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகள் அதில் மூழ்கி ஆட்சியைப்பிடிக்கத் தமிழ்தேசியப்போராட்டத்தை விலைபேசி வரும் நிலையில் தமிழ் மக்கள் ஒருபெரும் எழுச்சியை உருவாக்கி வருகிறார்கள். இவர்கள் தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும் தமது ஒற்றுமையைச் சொல்லியுள்ளார்கள். அதாவது போரென்றாலும் சரி, சமாதானம் என்றாலும் சரி ஒரே தலைமையில் ஒன்றுபட்டு நிற்கிறோம். எதையும் எதிர்கொள்ளத் தயார் என்பதுதான் அது.

ஷோபா

# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி



# பனிப்போர்

ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும் மலையகத் தலைமைகள் மத்தியில் இப்பொழுதே பனிப்போர் ஆரம்பித்துவிட்டது.

மலையக மக்களின் கருத்துக்கணிப்பின் அடிப்படையில் மலையக வாக்காளர்களுள் 70 வீதமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு என்பது இப்பொழுதே வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்து விட்டது.

மலையகத்தின் நாயகர்கள் என்று கூறிக் கொள்ளும் ஆறுமுகன் தொண்டமானும், பெரியசாமி சந்திரசேகரனும் இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு தலைவர்களுமே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இரகசியமாகவும், உத்தியோகப் பூர்வமாகவும் பேச்சுகளை நடத்துகின்றனர். மலையக மக்களின் அடிப்படை உரிமை, அரசியல் உரிமை எனக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாக இந்தத் தலைவர்கள் கூறுகின்றனர்.

தமது கோரிக்கைகள் இரு பக்கத்திலுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.இதனால் இரண்டு தலைவர்களுமே யாரை ஆதரிப்பது என்று தீர்மானிக்க முடியாமல் மதில் மேல் பூனை போன்று காலத்தைக் கடத்தி விட்டார்கள்.

இந்த இரண்டு தலைவர்களுமே தாம் முன்வைத்த கோரிக்கைகளும், நிபந்தனைகளும் என்ன என்பதை இதுவரை வெளிப்படையாகக் கூறவில்லை.

இரு பிரதான கட்சிகளும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்ட பின் தமது முடிவை எடுக்கலாம் எனக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவிட்டது.அதில் இந்த மலையகத் தலைவர்களின் கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது இந்தத் தலைவர்களுக்கே வெளிச்சம். அப்படியே ஸ்ரீ.ல.சு. கட்சியின்தேர்தல் விஞ்ஞாபனமும் அமையும்.

இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகிய இரண்டும் என்றுமே ஒன்றுபட முடியாதவை. அப்படியே ஒன்று பட்டாலும் தண்ணீரையும், எண்ணெயையும் ஒரே போத்தலில் ஊற்றிக் காட்டுவதற்கு ஒப்பானதே. போத்தலில் இருந்து வெளியே கொட்டப்பட்டாலோ அல்லது போத்தல் உடைந்தாலோ இவை இரண்டும் தனித்தனியாகப் பிரிந்து போய்விடும்.

கடந்த காலங்களில் ஆறுமுகனும், சந்திரசேகரனும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து அமைச்சரவைக்குள் புகுந்தனர்.

ஆனால், அங்கு போய் நீயா, நானா, விட்டேனா பார் என்று முஷ்டியைக் முறுக்கிக் கொண்டு,கீரியும், பாம்புமாக மாறியவர்கள்.

இப்படியான நிலைமையைத் தான் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

ஆறுமுகனும், சந்திரசேகரனும் ரணிலை ஆதரித்தாலும், ரணிலிடமிருந்து கிடைக்கும் கேக் துண்டில் யாருக்குப் பெரிய துண்டு கிடைக்கும்? யாருக்கு ருசியான துண்டு கிடைக்கும்? யாருக்கு முதலில் கிடைக்கும்? இப்படி ஆதங்கம் ஏற்பட்டுள்ளது.



இப்பொழுது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு யாருக்கு என்பதை விட, தொடர்ந்து வரப் போகும் நாடாளுமன்றத் தேர்தலும் இந்த இரு தலைவர்களின் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் அமைந்துள்ளன.

மத்திய மாகாணம்,ஊவா மாகாணம்,சப்பிரகமுவ

(17 ஆம் பக்கம் பார்க்க)

# சொல்லாதே இது இரகசியம்!

அந்த அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், தான் ஓய்வு பெற்றுவிட்டதாகக் காட்டிக்கொள்ளமாட்டாராம். பாடசாலைக்குச் சென்று வந்த அதே கெட்டப்புடன்தான் வெளியே கிளம்புவாராம்.

இப்பொழுது அவருடைய டியூட்டி பத்திரிகை வாசித்தல், கெஸட் பார்ப்பது. ஒருநாள் அவருடைய கண்ணில், 1,600 மலையகத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க இணக்கம் என்று வெளிவந்த செய்திபட்டு விட்டதாம்.

தான் படிப்பித்த காலத்தில் இருந்த தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலைத் தூசிதட்டி எடுத்தாராம். 45 வயது வரையிலான தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த அதிபருக்கும் வாய்ப்பாகிப்போய்விட்டதாம்.

இறங்கி விட்டராம் தனது பணியில். ''நான் எப்போதுமே ஆளும் கட்சிஆள். அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எல்லோரும் எனக்குத் தெரிந்தவர்கள். தான் கூறினால் 'நோ டோக்' என்னுடன் வாருங்கள்'' என்று கூட்டிச் சென்றாராம்.

குறிப்பிட்ட அதிபரோ கற்புக்கரசன். அந்த விடயத்தில் மிகவும் நேர்மையானவர். எதிரிகள் கூட சான்றிதழ் வழங்குவார்கள்.

ஆனால், அதிபர் கூட்டிச்சென்று மாகாண சபை உறுப்பினருக்கு அறிமுகப்படுத்திய சில லேடி தொண்டர்கள் இப்போது வாந்தி எடுக்கின்றனராம். வேலைக்கு நியமனம் கிடைக்கவில்லை. பதவியும் இல்லை. ஆனால், அந்த மாகாண சபை உறுப்பினரோ மிகவும் தயால சிந்தனையுடன் சிலருக்கு 'அம்மா' என்ற பதவி உயர்வை மட்டும் கொடுத்துவிட்டாராம்.

இதுதான் இப்போது இரத்தினக்கல் விளையும் பூமியில் அடிக்கும் துர்நாற்றம். வேலியே பயிரை மேய்கிறது. எப்படி இருக்கு கதை?



# டேஸ்ட்கடை தணிகாசலம்

# உழைக்கமட்டும் தானா? உரிமை இல்லையாம்

தணிகாசலம் அண்ணன் அலுவலகத்தில் இருந்து திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது அப்பாவு தலைவரும் மாரிமுத்துவும் எதிரே வந்துகொண்டிருந்தனர்.

''வணக்கம் அண்ணே!''

''வணக்கம் தலைவரே! என்ன தலைவரும் காரியதரிசியுமா எங்கே போயிட்டுவாரீங்க?''

''பெரிய தொரையைப் பார்த்து கொஞ்சம் பிரச்சினைகள் பத்திப் பேசப்போனோம். ஆனால் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.''

''என்ன தலைவரே ரொம்ப டல்லா சொல்றீங்க. விசயம் என்ன சொல்லுங்க''

''அண்ணே! நம்ப மேல்கணக்கு ஏகாம்பரம் இருக்கார் இல்ல, அவரோட மகனும், இன்னும் சில பையன்களும் சேர்ந்து மூணாம் நம்பர் மலையில் தரிசாக் கிடந்த நிலத்தை துப்பரவு செய்தார்களாம். அதனால் ஏகாம்பரத்துக்கும், அந்த பையன்களோட அப்பாமாருக்கும் வேலை நிப்பாட்டிப் புட்டாங்களாம்.''


''என்ன அப்படிச் சொல்லிப்புட்டீங்க, தேயிலைச் செடிகளையோ, அல்லது றப்பர் மரங்களையோ. வெட்டி இவுங்க சேதப்படுத்தினாங்களா?''

''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லைங்க. பத்து,இருபது வருடங்களுக்குமேல் தரிசாக ஒதுக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த இடம் அண்ணே!''

''தலைவரே அது எனக்கு நல்லாவே தெரியும். போன மாதம் கூட பக்கத்து மலையில் கொழுந்து பறிக்கச்சென்ற பெண்களை இந்தக்காட்டில் இருந்து வந்த குரங்குகள் கடித்துக் குதறிவிட்டன. இன்னும் கூட ஏழுபேர் ஆஸ்பத்திரியில் இருக்காங்க.''

''ஆமாங்க அண்ணே! தோட்டத்துக்காணி இப்படி காடா இருப்பதால் தானே குரங்கு, குளவி, பாம்பு எல்லாம் மண்டிக்கிடக்கு. நம்ப சனங்களுக்கு ஆபத்தா இருக்கு. அதனாலதான் இந்தத் தம்பிமார் அந்தக் காட்டை வெட்டி நெருப்பு வைத்துத் துப்புரவு செய்து இருக்காங்க.''

'என்னடா இது கொடுமையா இருக்கு? தோட்ட நிர்வாகம் செய்ய வேண்டிய வேலையை இந்தத் தம்பிமார் செய்து இருக்காங்க. அதுக்கு சம்பளம் கொடுக்காவிட்டாலும் சந்தோசப் படலாம். தண்டனை இல்லையா கொடுத்து இருக்காங்க.''



''உண்மை தாங்க அண்ணே காடாகக் கிடந்த தரிசு நிலத்தை துப்புரவு செய்யப்போய், தோட்டத்து நிலத்தை பலாத்காரமாகப் பிடித்து விவசாயம் செய்யப்போகின்றார்கள் என்று பொலிஸிலும் முறைப்பாடு செய்து பிள்ளைகளுடைய அப்பாமாருக்கும் வேலை நிறுத்திவிட்டாங்க''

''தலைவரே, நீங்க ஒன்றும் இதில் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை. நம்ப பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கம்பளையில் நடந்த ஒரு கூட்டத்தில் இதைப்பத்தி சொல்லி இருக்காரே''

''அப்படி என்னங்க அண்ணே! பிரதமர் சொல்லி இருக்காரு?''

''அதாவது நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்தால் தோட்டப்புறங்களில் தரிசாகக் கிடக்கும் காணிகளை எல்லாம் சுவீகரித்து விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய பகிர்ந்தளிப்பேன், என்று பகிரங்கமாகக் கூறி இருக்காரே!''

''அங்கே தாங்க அண்ணே நாமலும் பிழைவிடுறம். அவரு சொன்னது கிராமப்புற விவசாயிகளுக்கு மட்டும்தான். தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்குவேன் என்று சொல்லவில்லையே!''

''அதுவும் சரிதான். காலம்காலமாக இந்த தோட்டத்து தேயிலைக்கும் றப்பருக்கும் உரமாகிப் போனவர்கள் நம்ப பாட்டன், பூட்டன்தான். ஆனால், அந்தக் காணியில ஒரு அங்குலம் கூட நமக்கு சொந்தம் இல்லையே.''

''தம்பி இந்தத் தோட்டத்து துரைமாரும், மந்திரிமாரும் நாம உழைக்க மட்டும்தான் வந்தவுங்க அதில உரிமை கொண்டாட முடியாது என்பதே அவர்களின் முடிவு.''

''என்னங்க அண்ணே! அப்படி சொல்லிப் புட்டீங்க, நீங்கமட்டும் ஒரு வார்த்தை சொல்லுங்க. படித்து விட்டு வேலை வெட்டி இல்லாம இருக்கிற எல்லா இளைஞர்களையும் ஒன்னாத்திரட்டி நாளைக்கே இன்னும் காடாக்கிடக்கிற தரிசு நிலங்களை எல்லாம் துப்புரவு செய்து விவசாயம் செய்யச் சொல்லிப் புடுவேன்.''

''அடிசக்கை, இப்படி உங்களுக்கு எல்லாம் ரோஷம் வரவேண்டும் என்றுதான் அப்படிச் சொன்னேன். இது வெறும் பேச்சாக மட்டும் இருக்கக் கூடாது. செயலில் காட்டவேண்டும். யாரும் கேட்டால் பிரதமர்தான் கூறினார் என்று பேப்பரைக் காட்டுவோம்.'' என்று கூறி இளைஞர்களை தைரியப்படுத்தி

அவர் ஒரு சிறந்த நாவலாசிரியர். பிரபல நாடகாசிரியர். இலக்கிய விமர்சகர். நோபல் பரிசு பெற்ற இலக்கிய கர்த்தா.

அவர் ஒரு அரசியற் சிந்தனையாளர். மனிதத்துவவாதி. மாக்சியவாதி.

அவர் ஒரு தத்துவாசிரியர். தத்துவத்தில் வித்தகர். பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குரு.

# மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.



# விடுதலை

# மனிதத்துவம்

## சாத்தர் பற்றிய ஓர் அறிமுகம்

அவர்தான் ஜோன் போல் சாத்தர் (Jean Paul Satre 1905 - 1980). அரை நூற்றாண்டுக்கு மேலாக ஐரோப்பிய கருத்துலகை ஆட்டிப் படைத்தவர். பெரும் சிந்தனைப் புயல்களுக்கு மையமாக நின்றவர். தனித்து நின்று, கம்யூனிச உலகத்துடன் கருத்துப் போர் தொடுத்தவர். இருப்பு என்னும் பேரியக்கத்தில் தனி மனித இருப்பிற்கு முதன்மை கொடுத்தவர். தனிமனிதனின் இருப்பும், அவனது வாழ்வனுபவமுமே, பேருண்மைக்குப் பொருளையும், அர்த்தத்தையும் கொடுப்பதாகச் சொன்னவர். சமூக வரலாற்றுக் காவியத்தில் தனிமனிதனின் அடையாளத்தைப் பொறித்துவிட முனைந்தவர்.

சாத்தரின் படைப்புலகம் பெரிது. எழுத்துக் கலையை ஓர் உன்னத சமூகப் பணியாக வரித்து அவர் ஓய்வில்லாமல் எழுதிக் குவித்தார். தத்துவமாக, நாவலாக, நாடகமாக, வாழ்க்கை வரலாறாக, சுயசரிதமாக, கட்டுரையாக செறிந்து கிடக்கும் சாத்தரின் பரந்த சிந்தனையுலகைச் சுருக்கி எழுதுவது சிரமம். மிகவும் கனமான, பூடகமான, சிக்கலான மொழியில் அவர் எழுதினார். அர்த்த பரிமாணங்களின் எல்லைக் கோட்டிற்கு அப்பால் வார்த்தைகளை நெகிழ்த்திச் சென்று சொற்சிலம்பாடுவதில் அவர் ஒரு விற்பன்னர். இலக் கியத்திலும் தத்துவத்தைப் புகுத்தினார். கருத்துகளின் குறியீடுகளாகக் கதாபாத்திரங்களைப் படைத்தார். விவாத மேடைகளாக நாடகங்களை எழுதினார். உரையாடல்களில் தத்துவ விசாரணைகளை எழுப்பினார். இருப்பிய சிந்தனையின் கலை வடிவங்களாக அவர் இலக்கியத்தைச் சிருஷ்டித்தார்.

மனிதத்துவத்தின் மையத்தில் நின்றபடி சாத்தர் தன்னை ஓர் இருப்பியவாதியாக இனம் காட்டிக்கொண்டபோதும், அவரது உலகப் பார்வையில் பல சிந்தனை உலகங்கள் சங்கமித்து நின்றன. காலத்துக்குக் காலம் வெவ்வேறு தத்துவ தரிசனங்களால் அவர் ஆகர்ஷிக்கப்பட்டார். இதனால், காலத்திற்கு காலம், அவரது உலகப் பார்வை மாற்றம் கண்டது. அத்தோடு அவர் வாழ்ந்த காலமும், இடமும், புறநிலைச் சூழலும், அந்தக் காலத்தில் கட்டவிழ்ந்த வரலாற்று நிகழ்வுகளும் அவரது சிந்தனை யோட்டத்தில் திருப்பங்களை நிகழ்த்தின.

சாத்தரை சரிவரப் புரிந்து கொள்வதாயின் சாத்தரை ஆட்கொண்டு நின்ற சிந்தனை உலகங்களைத் தெரிந்து கொள்வது அவசியம். சாத்தரின் சிக்கலான மொழி நடையையும், அவரது ஆழமான தத்துவப் பார்வையையும் கிரகித்துக் கொள்வதற்கு இது முக்கியம். சாத்தரை ஈர்த்த சிந்தனை உலகங்கள் என்ற வரிசையில், ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் (Husserl's Phenomenological Philosophy), கைடேகரின் இருப்பியம் (Heidegger's Existentialism), ஹேகலின் இயங்கியல் (Hegel's Dialectics), பிராய்டின் மனப்பகுப்பியல் (Freud's Phychoanalysis) மாக்சின் வரலாற்றுப் பொருளியல் (Marx's Historical Materi-alism) ஆகியனவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஹுசேளின் சிந்தனைகள் சாத்தரின் ஆரம்பகால எழுத்துகளை ஆக்கிரமித்து நிற்கின்றன. ஹுசேள் ஒரு ஜெர்மானியத் தத்துவாசிரியர். அவரது தத்துவம் மனித புலனானுபவத்தைக் கூர்மையாக விசாரணை செய்கிறது. புலன்களின் வெளிச்சத்தில் புலனாகும் இந்த உலகத்தின் தோற்றப்பாட்டை மிகவும் நுண்ணியமாக ஆராய விழைகிறது. பட்டுணர்வின் பண்புகளை விளக்க முனைகிறது.

எனது அகவுலகம் வாயிலாகவே நான் புறவுலகத்தை பட்டுணர்ந்து கொள்கிறேன். எனது அகமானது ஒரு திட்ப நுட்பமான அளவுகோல் அல்ல. அது ஒரு களங்கப்பட்ட கண்ணாடி. கடிவாளம் பூட்டிய குதிரை. அது பழமையில் கட்டுண்டு கிடக்கிறது. முட நம்பிக்கைகளில் மூழ்கிப் போயிருக்கிறது. ஏற்கனவே திணிக்கப்பட்ட எண்ணற்ற அனுமானங்களில் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இந்த மாசுபடிந்த மனதினால் புற உலகின் மெய்யுண்மையைக் கண்டுகொள்ள முடியாது. மனமானது முதலில் தூய்மை பெறவேண்டும். பழமை, பொய்மை என்ற தளைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். அனுமானங்களிலிருந்து விடுபட வேண்டும். தூய்மையான பிரக்ஞை மூலமே துல்லியமான பார்வை சாத்தியமாகும். அந்தக் களங்கற்ற வெளிச்சத்தில்தான் தீட்சண்யமான அறிவைப் பெறலாம். வெறும் தோற்றப்பாட்டின் பின்புலத்திலுள்ள மெய்யுண்மையைக் கண்டுகொள்ளலாம்.

பட்டுணர்வைக் கூர்படுத்தும் நுட்பமான ஆய்வுமுறையாக ஹுசேளின் தத்துவம் அமைகிறது. கருத்துருவங்கள், கற்பிதங்களிலிருந்து மனதைச் சுத்திகரித்து, அந்தக் களங்கமற்ற கண்ணாடியில் காட்சிதரும் மெய்யுலகை, அப்படியே விவரித்துக் கூறும் புதுமையான உத்தி ஒன்றை அவர் விளக்கிக் காட்டுகிறார்.

ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் இருப்பியல்வாதிகள் பலரைக் கவர்ந்து கொண்டது. மனிதானுபவத்தை, மனிதவுணர்வுகளை ஆழமாக விவரித்துக் கூற இந்தப் பார்வை ஒரு சிறந்த வழிமுறையாக விளங்கிற்கு. ஹுசேளின் சிந்தனை, சாத்தரின் ஆரம்பகால எழுத்துகளை ஆக்கிரமித்து நிற்கிறது.



01

குமட்டல் (Nausea) என்ற சாத்தரின் முதலாவது நாவலும், இருத்தலும், இல்லாமையும் (Being and Notingness) என்ற அவரது ஆரம்பகால தத்துவ நாலும் ஹுசேளின் தரிசனத்தைத் தழுவி நிற்கும் படைப்புகள்.

Nausea ஒரு பரிசோதனை நாவல். நனவோடை உத்தியில் எழுதப்பட்டது. உணர்வு நிலைகளை படிமங்களில் சித்திரித்துக் காட்ட முனையும் ஒரு வித்தியாசமான படைப்பு.

கதாநாயகன் ஒரு தனியன். வாழ்வோட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்பவன். வேரற்ற, பற்றற்ற, உறவற்ற மனிதன். வாழ்வை அபத்தமாகக் காண்பவன். மற்றவர்களை வெறுப்பவன். தனது மனக் குகையின் அந்தரங்க மாளிகையில் வாழ்பவன். முன்பின் தெரியாத அந்தப் பட்டினத்திற்கு வருகிறான். ஒரு பிரபுவின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுவதற்கு. எதிலும் மனம் இருப்புக் கொள்ளவில்லை. மனவுளைச்சலில் அலைகிறான். பட்டினத்துப் பூங்கா அவனுக்குத் தஞ்சம் கொடுக்கிறது. பிரமாண்டமான ஒரு விருட்சத்தின் முன்பு அமர்ந்து கொள்கிறான். அதிலிருந்தபடி சிந்தனையில் ஆழ்ந்து போகிறான். அவனது மனம் உலகத்தை அசைபோடுகிறது. அகமும், புறமும் புணர்ந்து கொள்கிறது. அந்தப் புலனானுபவத்தில் திடீரென அவனுக்கு ஒரு புத்துணர்வு பிறக்கிறது.

என்றுமில்லாதபடி மனம் விழித்துக் கொள்கிறது. மனத்திரை விலகிக் கொள்கிறது. பொருட்களில் ஒட்டியிருந்த வார்த்தைகள் கழன்று விழுகின்றன. பூச்சுக்கள் அழிந்து போகின்றன. குறியீடுகள் அர்த்தமிழந்து செத்துப் போகின்றன. மனமானது இயற்கை மீது போர்த்திருந்த ஆடைகள் அவிழ்ந்து விழ, பொருட்கள் பொருளிழந்து விடுகின்றன. அந்தப் பெரு மரமும், அதன் பருத்த முறுக்கேறிய வேர்களும், நிலத்தின் மேல் படுத்திருக்கும் அந்தப் புற்தரையும், பூச்செடிகளும், பூங்காவின் கதவுகளும், ஆங்காங்கே குந்தியிருக்கும் ஆசனங்களும், எல்லாமே தத்தம் தனித்துவத்தை இழந்து மறைந்து போக, வெறும் தோற்றப்பாடு மட்டுமே தெரிகிறது. திடீரென, இருப்பானது தனது நிர்வாண தோற்றத்தில் அவனுக்கு காட்சி கொடுத்தது. எங்கும், எல்லாம் அவனைச் சூழ அடையாள மற்ற உருவங்களாக, பொருண்மத் திரள்களாக, பிண்டங்களாக, பூதாகரத் தோற்றம் கொண்டது. இந்தத் திடீர் வெளிப்பாட்டினால் சாத்தரின் கதாநாயகன் கலங்கிப் போகிறான். இருப்பின் மெய்த்தோற்றம் அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. அருவருப்பை ஏற்படுத்தியது. குடல் புரண்டு குமட்டியது. இருப்பின் தரிசனம் அவனுக்கு அங்கலாய்ப்பை ஏற்படுத்துகிறது. அதற்கும் அவனுக்கும் என்ன உறவு? அந்த உறவில் என்ன அர்த்தம்? அவனால் ஒன்றும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"இந்த உலகில் இருப்புக் கொள்வதெல்லாம் காரண மெதுவுமின்றித் தோன்றுகிறது. பலவீனத்துடன் நிலைத்து நிற்க முனைகிறது. தற்செயலாகச் செத்துப் போகிறது. ஏன், எதற்காக, இந்த உலகம் தோற்றம் கொண்டது? இருப்பிற்குப் பதிலாக இல்லாமை இருந்திருக்கலாம் அல்லவா? எதையுமே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" அவன் சிந்திக்கிறான். இருப்பு அபத்தமாகத் தோன்றுகிறது.

இறுதியில் தனது வரலாற்று ஆய்வைக் கைவிட்டு அந்தப் பட்டினத்திலிருந்து வெளியேறுகிறான். புகையிரத நிலையத்தில் தனது எதிர்காலம் பற்றி கவலை கொள்கிறான். அபத்தமான வாழ்க்கையில் அர்த்தம் காண்பது எப்படி எனச் சிந்திக்கிறான்.

சிருஷ்டிப்புக் கலைதான் உன்னதமானது. கலைஞனாக வாழ்வதில்தான் அர்த்தமிருக்கிறது. படைப்புத் தொழிலில் ஒருவன் தனது இருப்பின் அடையாளத்தை நிலை நிறுத்துகிறான். தனது வாழ்வனுபவத்தை மற்றவர்களுக்கு உணர்த்திவிடுகிறான். இறந்த பின்னரும் தனது சுவட்டை இந்த உலகத்தில் விட்டுச் செல்கிறான். ஒரு நாவல் எழுதவேண்டுமென கதாநாயகன் உறுதி செய்து கொள்வதுடன் தனது நாவலை முடிக்கிறார் சாத்தர்.

'குமட்டல்' என்ற இந்த நாவல் சாத்தரை பிரஞ்சு இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தியது. கலைவடிவத்தில் தத்துவத்தை விளக்கும் பரிசோதனை முயற்சியாக அவர் இந்த நாவலை எழுதினார். கமுவின் 'அந்நியனுக்கும்' சாத்தரின் 'குமட்டலுக்கும்' சில ஒருமைப்பாடுகளைக் காணலாம். ஆனால் அடிப்படையில் வேறுபாடுகள் உண்டு. இரு கதாநாயகர்களும் வாழ்க்கையில் விரக்தி கொண்ட அபத்த மனிதர்கள். கமுவின் கதாநாயகனுக்கு மரணத்தின் வாயிலில் ஞானோதயம் பிறக்கிறது. வாழ்வின் அர்த்தத்தை அவன் உணர்ந்து கொள்கிறான். ஆனால் சாத்தரின் கதாநாயகனுக்கு இருத்தல் அசிங்கமாகத் தெரிகிறது. இருத்தலின் வெளிப்பாடு அருவருப்பைத் தோற்றுவிக்கிறது. வாழ்வு அபத்தமாக இருப்பினும் எழுத்தில் அர்த்தத்தைக் காணலாம் என்ற முடிவுக்கு வருகிறான். இருப்பு பற்றிய ஓர் எதிர்மறையான சித்திரிப்பை இங்கு சாத்தர் தருகிறார். ஆனால், நாவலின் மையக்கருத்து வேறு. மனித மொழிக்கும், அந்த மொழியால் மனிதன் உருவகப்படுத்த முனையும் மெய்யுலகத்திற்கும் மத்தியில் பெரிய விரிசல் உண்டு. சொற்களால், கருத்துருவங்களால் மனிதன் கட்டியெழுப்பும் உலகம் வேறு, மெய்யுலகம் வேறு. வார்த்தைகளுக்கு அப்பாலான தூய்மையான பிரக்ஞையில் இருத்தலின் மெய்மையைக் கண்டு கொள்ளலாம். ஹுசேளிடம் உள்வாங்கிய இந்தத் தத்துவமே நாவல் வடிவம் எடுத்திருக்கிறது.

பிந்திய ஒரு காலகட்டத்தில், அதாவது 26 ஆண்டுகளுக்குப் பின்னர், சாத்தர் தனது முதலாவது நாவலை கடுமையாக விமர்சித்திருக்கிறார். "உலகம் பற்றிய அன்றைய பார்வையில் எனக்குத் தெளிவு இருக்கவில்லை. இன்று மெய்யுலகின் உண்மை நிலையை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. குழந்தைகள் பசியினால் மடிந்து போவதை நான் கண்டிருக்கிறேன். செத்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் அவலத்திற்கு எனது நாவல் ஈடாக முடியாது" என்று அவர் எழுதியிருக்கிறார்.

1943ஆம் ஆண்டு பாரிஸ் நகரை ஜெர்மானியர் ஆக்கிரமித்திருந்த காலத்தில், இருத்தலும், இல்லாமையும் (Being and Notingness) என்ற சாத்தரின் பிரபல தத்துவ நூல் வெளியாகியது. ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட, கனமான தத்துவப் படைப்பு மனித பிரக்ஞையின் பல்வேறு உணர்வுநிலைகளை மிகவும் நுணுக்கமாக அலசிப் பார்க்கிறது. ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவத்தைத் தழுவி நின்றபோதும், சாத்தரின் இருப்பியக் கருத்துக்கள் இந்த நூலில்தான் அறிமுகம் செய்யப்படுகின்றன.

(தொடரும்)




## ஐரோப்பிய ஒன்றியத்தின் கலிலியோ செய்மதி




அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் பெயர் நாசா. அதுபோல ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆராய்ச்சி மையம் 'ஈசா' என்ற பெயரில் இயங்கிவருகிறது. இந்த மையம் செய்மதி ஒன்றைத் தயாரிக்கும் பணிகளில் இப்போது தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

இந்தச் செய்மதி அதி உயர்ந்த தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இது அமெரிக்காவின் குளோபல் பொசிஷன் சிஸ்டம் (GPS) செய்மதிக்கு போட்டியாகத் தயாரிக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'கலிலியோ' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் செய்மதி உலகின் எந்தப் பகுதியில் நடக்கும் சம்பவங்களையும் படம் எடுக்கக்கூடிய வல்லமை உடையது. இதற்குரிய விசேட அம்சம் என்னவெனில், இது 30 செய்மதிகளின் இணையமாகச் செயற்படக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டு வருவதே. வலைப் பின்னல் அமைப்பில் இந்தச் செய்மதிகள் இணைக்கப்பட இருக்கின்றன.



இன்னும் இரண்டை வருடங்களில் 'கலிலியோ' தனது விண்வெளிப் பயணத்தை ஆரம்பிக்கக் கூடியதாக விஞ்ஞானிகள் தயாரிப்பு வேலை களில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC)




1863ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுவிஸ் பிரஜையும் வர்த்தகருமான ஜீன் ஹென்றி டுனன்ட் (Jean Henry Dunant) வேறு நான்கு சுவிஸ் பிரஜைகளுடன் இணைந்து குழுஒன்றை அமைத்தார். காலப்போக்கில் இந்தக் குழுவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என அழைக்கப்பட்டது.

அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் சுவிஸ் அரசாங்கம் ஜெனீவாவில் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தியது. இந்த மாநாட்டில் 16 நாடுகள் கலந்துகொண்டன. சர்வதேச செஞ்சிலுவையை அமைப்பதற்கு அவை இணங்கின. 1864ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி 12 நாடுகளின் பிரதிநிதிகள் ஜெனிவா பிரகடனத்தில் கையொப்பமிட்டனர்.



காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளித்தல், வைத்தியத்துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆஸ்பத்திரிகளுக்கு பாதுகாப்பு வழங்குதல் போன்றவற்றுக்கான சட்டங்கள் பற்றி இந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில்தான் செஞ்சிலுவை அமைப்பின் வெள்ளைக் கொடியும் அதில் காணப்படும் சிவப்பு நிறத்தாலான (+) சிலுவைச் சின்னமும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1870களில் ஒட்டமான் சாம்ராச்சியம் (Ottaman Empire) இந்தச் சின்னத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து சிவப்பு நிறமுடைய பிறையை செஞ்சிலுவைச்சங்கத்தின் சின்னமாகப் பாவிக்கப்போவதாக அறிவித்தது.

இப்போது இரு சின்னங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

டுனன்ட் (Duna nt), செஞ்சிலுவைச் சங்கத்தின் பிதாமகனாகக் கருதப்படுகிறார். 1901 ஆம் ஆண்டு இவருக்கு முதலாவது நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1919 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாடு ஒன்றில்பிரான்ஸ், இத்தாலி,ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் செஞ்சிலுவை அமைப்புகள் இணைந்து செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டமைப்பை அமைத்துக் கொண்டன.

செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டமைப்பு 1986 ஆம் ஆண்டு தனது பெயரை சர்வதேச செஞ்சிலுவை இயக்கம் (International Movement of the Red Cross) என மாற்றிக் கொண்டது. இப்போது இந்த இயக்கத்தில் உலகம் முழுவதும் 115 மில்லியன் தொண்டர்கள் பணியாற்றுகிறார்கள்.

## சார் புஷ்கா பீரங்கி



மாஸ்கோவில் உள்ள கிரெம்ளினில் வைக்கப்பட்டுள்ள சாம்ராஜ்ஜிய பீரங்கியே இது. 1851இல் தயாரிக்கப்பட்ட இந்தப் பீரங்கி இப்போது அருங்காட்சிப் பொருளாக அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இது போன்ற பிரமாண்டமான பீரங்கி இதுவரை தயாரிக்கப்படவில்லை என சாதனைகள் பதியப்படும் 'கின்னஸ்' புத்தகம் குறிப்பிடுகின்றது.

## பறவைகளைப் பாய்ந்து கொல்லும் சிலந்தி



பறவைகளையே உண்ணக்கூடிய சிலந்தி இனம் ஒன்று அமேசன் காட்டுப் பகுதியிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இனச் சிலந்தியின் வலை மிகக் கடினமானது. அதனால் சிலந்தியைப் பிடித்து உண்ணும் ஆசையில் வரும் பறவைகள் இந்த வலையில் சிக்கிக் கொள்ளும் போது அதை அறுத்துக் கொண்டு பறக்க முடியாமல் போய் விடுகிறது.

வலையின் பின்னால் மறைந்திருக்கும் சிலந்தி, பறவை ஒன்று அதில் சிக்கிக் கொள்ளும் போது,அதைக் கொட்டிவிடும். அப்போது விஷம் பரவி பறவை இறந்துவிடும்.

சிலந்தியின் விஷம்கொடிய நச்சுத் தன்மையைக் கொண்டு இருப்பதால்,அது பறவைகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் மரணத்தை உண்டாக்கக்கூடியளவு சக்தி வாய்ந்தது.

இந்தச் சிலந்திகளில் இரண்டு வகை உண்டு.

1. மரங்களில் வாழும் சிலந்திகள்
2. நிலத்தில் வாழும் சிலந்திகள்

நிலத்தில் வாழும் சிலந்திகள் தவளைகள், பாம்புகள், எலிகள் மற்றும் சிறிய ஜந்துக்களைக் கண்டதும், அவற்றின் மீது பாய்ந்து விஷத்தைக் கொட்டிவிடுகின்றன.அவை இறந்ததும் அவற்றைத் தமக்கு இரையாக்கிக் கொள்ளும்.




## சூரியசக்தி கார்

சூரியசக்தியால் இயங்கக் கூடிய காரொன்றை துருக்கியில் உள்ள மாணவர்கள் சிலர் சேர்ந்து தயாரித்து பாவனைக்கு விட்டுள்ளனர். இது போன்ற பதினைந்து கார்கள் இவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளன. மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் இது ஓடக்கூடியது. துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில் அமைந்துள்ள இஸ்தான்புல் பூங்காவில் பார்வையாளர்களுக்கு இந்தக் கார் ஓட்டிக் காட்டப்பட்டது. பெற்றோல், டீசலின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில் இந்தக் கார் பாவனைக்கு வந்து விட்டால் அனைவரும் அப்பாடா என்று நிம்மதி அடையலாம் அல்லவா?




## புதிய தொலைக்காட்சிக் கணினி

விரைவில் சந்தைக்கு விடப்பட இருக்கும் இந்த 20 அங்குல மொனிட்டரை (Monitor) கொண்ட இந்தக் கணினியை யப்பானின் ஹித்தாச்சி நிறுவனம் தயாரித்துள்ளது. தொலைக்காட்சி வசதியும் இந்தக் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விலை 2600 டொலர்களாகும்.



# பல்சுவை கதம்பம்

## சுனாமியும் இல்லை, கொளுத்தும் வெயிலும் இல்லை



ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் செயற்கைக் கடற்கரை ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்காக சீனாவில் இருந்து 1000 தொன் வெள்ளை மணலை இறக்குமதி செய்து 75 ஆயிரம் சதுர அடியில் இந்த செயற்கைக் கடற்கரை உருவாக்கப்பட்டுள்ளது.

அங்கு அழகிய இளம் பெண்கள் ஓய்வாகப் பொழுதைக் கழிப்பதைக் காட்டுகின்றது இந்தப் படம். சுனாமியும் இல்லை, கொளுத்தும் வெயிலும் இல்லை. செயற்கைக் கடற்கரை இதமாக - சுகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள் இந்தப் பேரழகிகள்.

## உடலுக்கும் உள்ளத்துக்கும் சிறந்த உணவு தாம்பத்திய உறவு

தாம்பத்திய உறவு, தம்பதியினருக்கிடையே உடல் பசியை தணித்துக் கொள்வதற்கான மார்க்கம் மட்டுமல்ல, உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் வாழ்க்கையின் அவசிய தேவையும் கூட. அதற்கான ஐந்து காரணிகள் இங்கே தரப்பட்டுள்ளன. தருபவர் பிரபல இந்திய பாலியல் வைத்திய நிபுணரும், ஆலோசகருமான டாக்டர் பொன்ஸ்லி. தாம்பத்திய உறவில் திருப்தி அடைவதற்கு நீங்கள் உடற்பயிற்சி செய்யவேண்டும் என்று பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் படித்திருப்பீர்கள். ஆனால் இந்த இரகசிய உறவு உங்கள் உடலையும், உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு உதவுகிறது என எவராவது சொல்லக் கேட்டிருக்கிறீர்களா?



*உங்கள் உடலில் உள்ள இரத்தத்தில் பிராணவாயுவின் அளவை அதிகரிக்க இது உதவுகிறது. இவ்வாறு அதிகரிக்கும் போது நீங்கள் துடிப்பாகவும், இளமை உணர்வுடனும் இருப்பதை உணர்வீர்கள். அடுத்து நீங்கள் வெளியேற்றும் ஆழமானதும், பலமானதுமான பேச்சு உங்களுக்கு 'பிராணாயாமத்தை'ப் போன்ற ஒரு மூச்சுப் பயிற்சியே. அப்போது இருதயம் பலமாகத் துடிப்பதனால் உங்கள் உடம்பு தொடர்ச்சியான குருதி ஓட்டத்தைப் பெற்றுக்கொள்கிறது. உடலில் உள்ள அனைத்து அங்கங்களும், தசை நார்களும் புதியஇரத்தத்தைப் பெற்றுக்கொள்வதனால் நீங்கள் புத்துணர்ச்சி அடைகிறீர்கள்.

* உங்கள் சருமம் பளபளப்பு அடைகிறது. இரத்த ஓட்டத்தின் அதிகரிப்புக் காரணமாக உங்கள் சருமத்தில் ஒரு கவர்ச்சி - மினுக்கம் ஏற்படுகின்றது.

* இவ்வாறு உறவு கொள்ளும்போது கணவனுக்கும், மனைவிக்கும் உடல் வியர்க்கிறது. இவ்வாறு வியர்க்கும்போது அந்த வியர்வையினால் உடலில் உள்ள நச்சுத் தன்மைகள் வெளியேற்றப் படுகின்றன.

* உடம்பில் உள்ள கலோரிகள் அழிக்கப்படுவதுடன் அடிவயிறு, பின்புறம், தொடைகள், கைகள் ஆகியவற்றின் தசைநார்கள் பதப்படுத்தப்படுகின்றன.

தாம்பத்திய உறவும் அன்பும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. இது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட ஒன்று. ஒருவரின் மனநிலை எந்த அளவுக்கு சரியாக உள்ளதோ அந்த அளவுக்கு அவரால் தாம்பத்திய உறவின்போது இன்பம் பெறமுடியும். இதனால் கணவன் - மனைவிக்கு இடையிலான அன்பும் அந்நியோன்யமும் அதிகரிப்பது மட்டுமன்றி வாழ்க்கையும் என்றும் வசந்தமாகவே அமைந்துவிடுகின்றது.

## இதுவே எனக்குப் போதும்



ஹொங்கொங்கில் அண்மையில் விநோதமான போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதிக பணிஸ் உண்ணும் போட்டியே அது. இந்தப் போட்டியில் 83 இளைஞர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு பணிஸ் சாப்பிட்டனர்.

கொபாயசி என்ற இந்த இளைஞன் 100 பணிஸ்களை 12 நிமிடத்தில் சாப்பிட்டு முதல் இடத்தைக் கைப்பற்றினான். அவனுக்கு ருபா இரண்டரை லட்சம் பரிசு வழங்கப்பட்டது.

## மறைந்தும் மறையாத பாதி மலர்



மறைந்தும் மறையாத பாதி மலராக, விடிந்தும் விடியாத காலைப்பொழுதாக இப்போதும் லட்சக்கணக்கான அபிமானிகள், ஆதரவாளர்களின் உள்ளங்களில் பவனிவருகிறார் இளவரசி டயானா.

அவரது நினைவுநாள் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கானோர் கென்சிங்டன் மாளிகைக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி அவரை நினைவு கூர்ந்தனர்.

இளவரசர்களான வில்லியமும், ஹரியும் அமைதியாக தனிப்பட்ட முறையில் தாயாரை நினைவு கூர்ந்தனர். இளவரசர் சார்ள்ஸ் தனது புதிய மனைவியான கமிலா பாக்கருடன் ஸ்கொட்லாந்தில் உள்ள பல்மோரல் தோட்டத்தில் விடுமுறையில் உல்லாசமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்.

தனது தாயாரைப் போல சமூக சேவையில் நாட்டம் கொண்டுள்ள இளவரசர் ஹரி, வறுமைமிக்க நாடான லெசோத்தோ (தென் ஆபிரிக்கா) வில் தாய் - தந்தையற்ற குழந்தைகளுக்குச் சேவை செய்வதில் எட்டு வாரங்களைச் செலவிட்டார்.

## இதற்கும் அழகு என்ற பெயர்



[redacted] உள்ள ஆடை அலங்கார மாடல் அ[redacted] தயாரித்து அறிமுகப்படுத்தி உள்ள நாகரிக உ[redacted]டகளை அணிந்துள்ள அழகிகள் இருவருடன் கமெராவுக்கு 'போஸ்' கொடுக்கிறார்.

# சொந்தங்களைத் தேடி

முதியோர் இல்லத்தின் வாசலில் பேருந்து வந்து நின்றது. நடத்துநர் இதுதான் 'யோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம்' என்று கூறியதும், ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும், அவளது மகனும் இறங்கினார்கள்.

வாசல் கேற்றுக்கு அவர்கள் வந்ததும், காவலாளி கேள்விக் குறியுடன் அவர்களை நோக்கினான்.

"இரத்தினம்மா என்ற முதாட்டியைப் பார்க்கனும்."

"நீங்க யாரு...?" காவலாளி பதில் கேள்வி கேட்டான்.

"நான் கமலா.. அவவோட மகள்... இவன் என்னுடைய மகன்... இரத்தினம்மா இவனுக்குப் பாட்டி..."

"நீங்க எல்லாம் இருந்து கொண்டு, அநாதரவான முதியோர்களைப் பராமரிக்கிற முதியோர் இல்லத்திற்கு ஏன் விட்டீங்க...?" என்று கேட்டபடி கேற்றைத் திறந்தான்.

"முன்னுக்கு அலுவலகம் இருக்கு... அங்க போய்க் கேளுங்கோ... குட்டிப் பாட்டின்னா சொல்லுவாங்க..."

கமலாவும், மகன் ரவியும் அந்த இல்லத்தில் காலடி எடுத்து வைத்தபோது, புத்துணர்வு ஏற்பட்டது. கிளிநொச்சி நகரிலிருந்து நீண்ட தூரம் காட்டுக்குள்ளாக வந்தபின், அவர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தார்கள். சுற்றி அடைக்கப்பட்டிருந்த அந்த முதியோர் இல்ல வளாகத்துள் காலடி எடுத்து வைத்தபோது, இவ்வளவு அழகான ஒரு சோலையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எங்கும் பச்சைப் பசேல் என்று பசுமையாகக் காட்சியளித்தது. வாசலிலிருந்து திருவடி நிலையத்திற்குச் செல்லும் இருமருங்கிலும் பூமரங்கள் சுகந்தமாய் வரவேற்றன. வளாகம் எங்கும் பயன் தரும் தென்னை மரங்கள் புதிய பாளைகளைத் தள்ளியபடி வரவேற்றன. பலா,மா, தோடை, திராட்சை என பயன் தரு மரங்கள். அவற்றிடையே குளிர்மையாய் குலைதள்ளியிருந்த வாழைகள்!

சுவாமிகளின் திருவடி நிலையம் சிறியதாக இருந்தாலும், எளிமையாகவும், எமது கலாசாரத்தைப் பேணுவதாகவும் அமைந்திருந்தது. அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர், அவர்களை வரவேற்று அன்போடு விசாரித்தார்.

"இரத்தினம்மா என்ற முதாட்டி..."

"இங்கே எல்லோரும் முதியவர்கள் தான்..." என்று சிரித்தார்.

"இரத்தினம்மா இங்கே இருப்பதாக உங்களுக்கு எப்படி தெரியவந்தது?"

"அது ஒரு சுவையான கதை... எங்கட அம்மாவைத் தேடி நாங்கள் பல இடங்கள் அலைந்தோம்...வானொலியிலும் சொந்தங்களைத் தேடி நிகழ்வில் விசாரித்தோம்...பலன் கிடைக்கவில்லை..."

"அப்புறம்...?"

"பாட்டி செத்துப் போயிட்டா என்ற முடிவுக்கே வந்துவிட்டோம்..." என்று விசும்பினான் ரவி.

"பாட்டி இப்ப எங்கே இருக்கிறா?" அவனுக்குப் பாட்டியைக் காண வேண்டும் என்ற தவிப்பு.

"பாட்டி விடுதியில இருக்கிறா...அவ இப்போது எங்கட பாட்டி" என்று கண் சிமிட்டினாள் விசிதர் தர்மகலா. அவன் அழுது விடுவான் போலிருந்தது.

"குட்டிப் பாட்டியை நாங்கள் விடமாட்டோம்..."

"ம்..இந்த காலத்தில் பெத்த பிள்ளைகளையே நம்ப முடியலே...இறக்கை முளைச்சதும் உதறிட்டுப் பறந்து போயிடுறாங்க... சின்னப் பிள்ளையாக இருந்த காலம் தொட்டு வளர்த்து, தம்மை உருவாக்க அவங்க பட்ட கஷ்டங்களையெல்லாம் மறந்திடுறாங்க" என்று சிரித்தார் நிர்வாக உத்தியோகத்தர்.

"அநாதரவானவங்க இங்கே இருக்கிற மாதிரி கொழும்பில வசதி படைத்தவங்க கூட, வயோதிபப் பெற்றோரைத் தனியார் முதியோர்இல்லங்களில் விட்டுடுறாங்க... வெளிநாட்டுக்காரரும் அப்படித்தான்...காசை அனுப்பினா கடமை முடிஞ்சிடுமா?...முதியவர்களது மனம் படும் பாட்டைப் பற்றி சிந்திக்கிறதில்லை.... வயோதிபத்தில் அவங்களைப் பார்க்கிறது கடமை என்பதை மறந்திடுறீங்க" என்று கணக்காளர் மகேஸ்வரி கூறினார்.

பதில் சொல்ல முடியாமல் தவித்தாலும், தன்னைச் சுதாகரித்துக்கொண்டு கமலா தொடர்ந்தார்.

"இந்த இல்லத்திற்குப் பொறுப்பான ஐயா பத்திரிகையில் பேட்டி கொடுத்திருந்தார்... அது கூட எங்களுக்குப் பார்க்கக் கிடைக்கவில்லை. போன சனிக்கிழமை சுவாமிகளின் ஆயிலியதினம்... எமது அடுத்த வீட்டில் பிரார்த்தனை நடத்தினாங்க. எங்களையும் அழைச்சிருந்தாங்க... பிரார்த்தனை முடிஞ்சதும் பிரசாதம் தந்தனுப்பினாங்க... வீட்டுக்கு வந்து பிரசாதத்தைச் சாப்பிட்டோம். பிரசாதம் சுற்றி வந்த பேப்பரிலதான் இல்லத்தலைவர் கந்தசாமி ஐயாவுடைய பேட்டி பிரசுரமாயிருந்தது. அதிலே முதியோர்களின் படங்கள் இருந்தன. அதிலே பாட்டியின் படமுமிருந்ததை இவன்தான் கண்டான். எங்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி..."

"அதுசரி பாட்டியை ஏன் அநாதரவாக விட்டீங்க...? பெத்தவங்களை இறுதிவரை பார்ப்பது எல்லோரினதும் கடமையல்லவா?" தர்மகலா அவர்களை நோக்கினாள். பதில் சொல்லமுடியாத சங்கடத்துடன் கமலா தலை குனிந்தாள். "எல்லாம் இந்தக் கொடிய யுத்தத்தினாலையும் இடம்பெயர் வினா... ...ர்..." நெடுமூச் செ...

...க்கலா ...டது. ...போது ...வயது ...இர ...ந்த ...ல் ...

... தூக்கிக்க... யிலே அப்பாவுக்கு ... பாட்டியும் கையைக் காலை அடிச்சா, "என்னை விட்டுட்டுப் போங்கோ..." என்று அழுதா. நடக்கிறது என்னெண்டு அவவுக்குச் சரியாக விளங்கவில்லை. "ரவியை மட்டும் என்னோட விட்டுட்டுப் போங்கோ..." என்று அழுதா. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. ஊரே ஓடேக்கை நான் எப்படி பாட்டியோட நிக்கேலும்...? நாங்கள் யோசிச்சுக்கொண்டிருக்கிறபோது, ஒரு நாளும் 'செல்'வராத எங்கட ஊருக்குள்ள செல்விழுந்தது. எங்கட வீட்டையும் தாண்டிப் போய் காது பிளக்கிற மாதிரி வெடிச்சுது... ஒரே பரபரப்பு ... நெஞ்சு படபடத்தது.

"இனியும் நிண்டு மினைக்கடேலாது... போவம்..." என்றார் அப்பா. அம்மாவுக்கு என்ன செய்வதெண்டே தெரியவில்லை. 'செல்' வெடிச்சதும் பாட்டியும் பயந்துபோனா. "ரவி... குட்டியா என்னையும் கூட்டிக்கொண்டு போங்கோடா..." முத்தத்தில் இருந்தபடியே கூப்பிட்டா... நானும் திரும்பி ஓடிப்போய் பாட்டியின்ர கைகளைப் பிடித்துக்கொண்டு அழுதன்.


இதுக்கிடையில், இன்னொடு செல்லும் கூவிக்கொண்டு வரவே, எல்லோரும் நிலத்தில் விழுந்து படுத்தம். மேலால போன 'செல்' நாலாவது வீட்டில விழுந்து, சின்ன மாமாவும், பெரிய மச்சாளும் அதிலேயே துடிதுடிச்சுச் செத்துப் போனதாக அறிந்ததும் எல்லாரும் நல்லாப் பயந்திட்டம். இனியும் நிண்டு மினைக்கடேலாது எண்டு அப்பா சத்தம் போட்டார். எனக்கும் ஒரே பயமாக இருந்தது.. அண்டைக்குத்தான் செல் ம்ரணபயத்தை ஏற்படுத்திக் கலங்க வைச்சு... ஒண்டும் செய்யேலாமல் பாட்டியை விட்டுட்டு வெளிக்கிட்டம். பாட்டி தவண்டு தவண்டு வாறதைத் திரும்பிப் பார்க்க முடியாமல் கனத்த நெஞ்சோட தெற்கு நோக்கி நடந்தம். வாழ்க்கையில் மறக்க முடியாத ஒருநாள்.

வழியெல்லாம் சனம்... சன்னதிகோயில் தேர்த் திருவிழாவில் கூட, இவ்வளவு நெரிசலைக் கண்டதில்லை... உச்சிலம்மன் கோயிலிலையிருந்து பக்கத்தில் இருக்கிற வெல்லன் பிள்ளையார் கோயிலடிக்கு வாறதுக்கே ஒரு மணித்தியாலம் எடுத்தது.. நாவரண்டது... தண்ணி குடிக்கிறதிலையும் நெருக்கடி.... ஒருநாளும் நான் இவ்வளவு தூரம் நடக்கவில்லை... நல்லாகக் களைச்சுப்போனன்... கையில, பைவேற... சுமக்கேலாமல் ...ந்துகொண்டு கிளாலிக் ...ரைக்கு வரவே, ஒருநாள் ...டிச்சுது.. கிளாலியில கொக்குத் ...வம் இருந்தம் ... அங்கேயும் செல் வந்து விழுந்து நாலைஞ்சு பேரைச் சாகடிச்சுது. நான் நல்லாப் பயந்து போனன். எங்கட கண்ணுக்கு முன்னாலேயே உடல் சிதறி ஒரு நொடியிலை சாவைத் தழுவினவையைப் பார்க்க உள்ளம் கொதித்தது. ஏன் இந்தக் கொடுமை? நாங்கள் என்ன பாவம் செய்தம்? தப்பி ஓடக்கூடவிடாமல் துரத்திச் சுடுவானேன்? இதற்கிடையிலே 'கிபிர்' குண்டு வீச்சு விமானம் பறந்துவந்தது. எல்லோருமே ஐயோ என அவலக்குரலெடுத்து அழுதபடி விழுந்துபடுத்தம்.

அடுத்த நாள் தான் வள்ளம் கிடைச்சுது.

கிளாலிக் கடல் பயணம் பயங்கரமான அனுபவம். வள்ளத்திலையும் ஆட்கள் கூடுதலாக இருந்தம். நடுக்கடலில் வள்ளங்களை நோக்கிச் 'செல்' வந்தது... எப்படியோ தப்பிப் பிழைச்சு வன்னிக்கு வந்து சேர்ந்தம்.

வழியெல்லாம் எனக்குப் பாட்டியின்ர நினைப்புத்தான். பாட்டிக்கு என்னில் எவ்வளவு பாசம். எல்லாரையும் விட, என்னிலதான் வாரப்பாடு... 'குட்டியா... குட்டியா' எண்டு தூக்கிக் கொஞ்சுவா. நான் ஒவ்வொரு நாளும் பாட்டியோட தான் படுப்பன்... படிச்சு முடிச்சு படுக்கேக்க, நல்ல கதையெல்லாம் சொல்லுவா... பாட்டியின்ர கதையளை வாய் பிளந்தபடி கேட்பன்... பேய் வரும்... முனி வரும்.. பிசாசு வரும்... கடைசியில எல்லாத்தையும் விரட்டினதாக கதை அளப்பா... வளர்ந்த பிறகு, நானும் கதை எழுத வேணும்... என்று ஆசை வரும். பாட்டி சொல்லுற கதையளில கன தெய்வங்கள் வரும்... வைரவர், வீரபத்திரர், காளி, ஐயனார், முனியப்பர், துர்க்கை... சிவபெருமான் வந்து சுப முடிவைக் கொண்டு வருவார்.



மு. சந்திரகாந்தா

எனக்குக் கனநாளாக ஒரு சந்தேகம். இறைவன் ஒருவன் என்றுதானே எங்கட சமயமும் சொல்லுது. பிறகேன், நூற்றெட்டுத் தெய்வ வடிவங்களை வச்சு வழிபடுகினம்? எல்லாம் வெறும் பம்மாத்தோ எண்டு தோன்றும். பாட்டியிடம் என்ர சந்தேகத்தைப் பற்றிக் கேட்பன். 'குட்டியா தெய்வக் குற்றம் சும்மா விடாது... சாமிங்களோட பகிடி விடாதை' என்று வெருட்டுவா. எனக்குச் சிரிப்பு வரும். பழி வாங்கிற கடவுளெண்டா அந்தக் கடவுள் எங்களுக்குத் தேவையில்லை.. எண்டு நினைப்பன். கடவுளுக்கு நேர்த்தி வைக்கிறதில் பாட்டியைக் கேட்டுத்தான். எனக்கு காய்ச்சல், தலையிடி வந்தாலும் எல்லாக் கோயிலுக்கும் நேர்த்தி வைப்பா. கிராய்ப் பிள்ளையாருக்கு நேர்த்தி வைச்சிட்டு, வெற்றியாட்டுப் பிள்ளையாருக்கும் நேர்த்தி வைப்பா. இரண்டும் பிள்ளையார் தானே... பிறகேன் என்று கேட்பன்... "போடா உனக்குத் தெரியாது' என்டு ஏசுவா.

இப்ப கூட, இருக்கிற கடவுள் காணாது என்று ஆஞ்சநேயரைக் கும்பிடினம்... 'சாயி... சாயி' என்று மாயினம்... எனக்கு ஒண்டுமாய் விளங்கேலை... அன்பே சிவம் என்கிறது தான் சரியோ? இல்லாட்டி இறைவன் என்று யாரும் இல்லை என்று பொதுவுடமைக்காரர் சொல்லுவதுதான் சரியோ? கடவுள் என்கிறது வியாபாரமாகிப் போச்சு... கடவுளுக்கும் லஞ்சம் குடுத்துச் சமாளிக்கினம்... பாட்டிக்கு நான் சொன்னாலும் விளங்காது. பாவம், முந்தானையில முடிஞ்சு வைச்சு கோயிலுக்குப் போகிறபோது, கற்பூரத்திற்கும், ஐஸ் பழத்திற்கும் புறம்பாகக் காசு தருவா. அப்பா அம்மாவை சரியான நப்பி... ஒன்டும் தந்துவிடாயினம்... ஒன்றுக்கும் காசு தராயினம்.. தாங்களா ஏதும் வாங்கித் தந்தாச்சரி... பாட்டி தாற காசிலை நான் இரண்டு ஐஸ்பழம் குடிப்பன்... கற்பூரம் கனபேர் கொளுத்தினம் தானே..?

பாட்டியை விட்டு விட்டு வந்ததிலை எல்லோருக்கும் கவலைதான். திரும்பி ஊர் போகக் கிடைச்சால், எலும்பு என்டாலும் எடுத்து அந்தியேட்டி செய்யவேணும்... அம்மா ஒருநாள் சொன்னவ. கிட்டடியிலதான் பாட்டியை வன்னியில கண்டதெண்டு ஆரோ சொன்னவ... அதுக்குப் பிறகுதான், தேட வெளிக்கிட்டனாங்கள்... அதிலையும் களைச்சு பாட்டியின்ர கதை முடிஞ்சுதெண்டு இருந்தம்... அப்பதான் சுவீப் அடிச்ச மாதிரி இந்தப் பேப்பர்... ஒரு மாதிரி கஷ்டப்பட்டு வந்திட்டம்... இங்க இவை இன்னும் பாட்டியைக் காட்டுகினமில்லை... புதினம் விசாரிக்கினம்.

****

ரவியின் மனக்கணினி ஒரு நொடியில், முருகன், மயிலில் உலகைச் சுற்றி வந்தது போல் பாட்டியின் நினைவுகளை அசைமீட்டு வந்தது.

இல்ல உபசரிப்பாளர் ஜாமினி தேசிக்காய்த் தண்ணீர் கொண்டு வந்து பரிமாறினாள். களைத்து வந்தவர்களுக்குத் தேவாமிர்தம் போலிருந்தது.

"வாங்கோ, பாட்டியைப் பார்ப்பம்..."

பாட்டியைக் காண விடுதிக்குப் போய், கொண்டிருந்தபோது கமலா "கந்தசாமி ஐயா எங்கே...?" என்டு கேட்டாள்.

"ஐயா எங்களை விட்டுப் போய் ஆறு மாதமாச்சு... அவருடைய நினைவைச் சுமந்து கொண்டு இந்த இல்லமும், வளாகமும், எழிலையும், வருவாயையும் வழங்கிக் கொண்டிருக்கும். பெரும் காடாக இருந்த ஐந் தேக்கர் பூமியை இன்று பொன் விளையும் பூமியாக்கிவிட்டு, இந்த மண்ணுக்கே உரமாயிட்டார். அவர் இறந்தாலும் அவரது பெயர் என்றென்றும் வாழும்."

கதவடியிலும், ஜன்னல் வழியாகவும் பல புதிய முகங்கள் அவர்களை ஆவலோடும், ஏக்கத்தோடும் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பூந்தோட்டத்தின் அருகே வாங்கில் அமர்ந்துகொண்டு ஒருவர் பத்திரிகைச் செய்திகளை உரத்து வாசித்துக்கொண்டிருந்தார்.

"திடீர் குண்டு வீச்சில் உருத்திரபுரத்தில் நால்வர் பலி" அவர் வாசிப்பதை இன்னும் சில முதியவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

விடுதியின் பராமரிப்பாளர் அவர்களைக் குட்டிப்பாட்டியிடம் அழைத்துச் சென்றார்.

பாட்டியைக் கண்டதும் மகளும், பேரனும் விம்மத் தொடங்கி விட்டார்கள். பாட்டியின் கண்கள் பனித்தாலும், ஏதோ ஒரு வைராக்கியத்துடன் கல்லாக அமர்ந்திருந்தார்.

இதற்கிடையில், குட்டிப்பாட்டியின் உறவினர்கள் வந்ததை, அங்கு வந்த இல்லச் செயலாளரும் அறிந்து பெண்கள்

( 25 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப் புனல்

## மரணம்

மாய உலகினில்
பொய்யான மேனிக்கு
மெய்யாக
நிச்சயிக்கப்பட்ட
இறுதி நிகழ்வு

யாழினி
மட்டக்களப்பு

## வா தோழி

அன்பே...
உன்னை முதன்முதல்
பார்த்த போது,
உன் கண்கள்
உன் காதலை
எனக்கு
சொல்லியது...

உதட்டின்
உதவி இல்லாமலே
இருவரும்
காதலர்களானோம்.

காதல் சிலரை
புனிதனாக்கி விடும்.
சிலரின் பொழுதைப்
போக்கிவிடும்.
சிலரை புதைகுழிக்குள்
தள்ளி விடும்.

எம் காதல் அப்படியல்ல
தோழியே வா...
கண்களால் இணைந்த நாம்
கடைசி வரை...
பிரியாமல் வாழ்வோம்
தோல்விகளற்ற ஓர்
தேசத்தில்.

த.நிரஞ்சன்,
யாழ்ப்பாணம்

## மூச்சுக் காற்று

உடலையும்
உயிரையும்
பிணைத்து வைத்திருக்கும்
உத்தரவாதமற்ற
உருவற்ற நிலை!

கே.கனேஷ்,
முள்ளியவளை.

## எழுச்சியே வீழ்ச்சியல்ல

கலங்காதே தாயே!
சத்தியத்தைக்
காத்ததால் தான்
அரிச்சந்திரன்,
வேதனைகள் பல
அடைந்தும்
வரலாற்றில் தடம்
பதித்தான்.
பத்திரிகை தர்மமதை
தெரியாத
மூடர்கள்
எத்தனை குண்டுகள்
எறிந்தாலும்,
அவை உன்
வெற்றித் தூண்களே
தவிர
அழிவாயுதங்களல்ல.

வி.கலா
யாழ்.பல்கலைக்கழகம்

## சந்தேகம்

வாலிபம் இருக்கும் போதே
வாழ்க்கையைத்
தொலைக்க வைக்கும்
அணுகுண்டு.

த.மேரிரதி
யாழ்.பல்கலைக்கழகம்

## நிம்மதியைக் கெடுக்கும் காரணிகள்

பிடிகொடுக்காத
செயற்பாடுகளும்,
விட்டுக் கொடுக்காத
மனப்போக்கும்,
ஒப்பந்தத்தை மீறும்
நடவடிக்கைகளும்,
சட்டத்தை மதிக்காத
தன்னாதிக்கமும்,
மனித நேயமற்ற
அணுகு முறைகளும்,

விலைவாசியைக் குறைக்காத
நிர்வாகமும்,
செய்திஊடகங்களைச்
சிதைக்கும்
காடைத்தனமும்,
செய்தியாளர்களை அச்சுறுத்தும்
அநாகரிகமும்,
ஆரோக்கியமான,
அமைதி நிலையை,
சமாதான சக வாழ்வை
உண்டு பண்ண உதவாது.

கவிக்குயிலன்,
சேனையூர் - 06.

## கவிதையுடன் சேர்ந்த தாடி

உன்னைப் பார்த்த பின்
கவிதை தானாக வளருதடி.
ஆனால் -
உன்னைப் பிரிந்த பின்
கவிதையுடன் சேர்ந்து
தாடியும் வளருதடி!

ஜே. லதன்
உடையார்கட்டு

## பிரிவு

உன் பார்வையை,
நீ பேசிய வார்த்தையை
மறக்க முடியவில்லை
அர்த்தம் புரியாமலே
அவை புதைந்துகிடக்கின்றன.
அதற்குள்ளே - நீ
என்னை விட்டு பிரிந்துவிட்டாயே?
விடைகாணா வினாக்களாய்,
உன் நினைவுகளுடன்...
தவிக்கின்றேன்.

எஸ். துர்க்கா
அராலி.

## ஊறுகிறதே!

அவளுக்கும்
எங்கள் வீட்டு
கிணற்றிற்கும்
என்ன தொடர்பு,
இறைக்க இறைக்க
ஊறுகிறதே
அவள் நினைவைப் போல்.

சி.ஜெயபாபு,
கிளிநொச்சி.

## பொறாமை

பத்திரிகை
பாவை என்னை
யுத்தக் காமர்கள்
கைக்குண்டால்
சிதற முனைப்பு...

என் பேனா
உதட்டின்
புன்னகை உதறல்களை
இவர்களால்
தாங்கிக் கொள்ள
முடியவில்லை...

என் அழகு
கருத்து உடலை
அழிக்க முனைகிறார்கள்...

காதல் மொழி பேசி என்னைக்
கவர்ந்திழுக்க முடியாதவர்கள்,
கைக்குண்டு வீசி என்னை
கற்பழிக்க முனைந்தார்கள்
பைத்தியக்காரர்கள்...

என் சேலை உரித்து
சிதைக்க நினைத்தவர்கள்
பாவம் தோற்றுப் போனார்கள்...

மனிதங் கொண்ட மனமே
ஏன் என் வளர்ச்சி நோக்கி
பொறாமை படுகிறாய் - நீயும்
பொறாமை விடுத்து
முன்னேற வழி வகு...!

டி.ஜெசி
பளை

## இதயமில்லை...

கண்களே!
ஒரு துளி மீதமின்றி
கண்ணீர் சொரியுங்கள்.
கண்களால் கதை பேசி
இதயத்தில் இடம்பிடித்தவள்
சென்றுவிட்டதால்...

செவிகளே!
செவிடாகுங்கள்.
உங்களுக்குப் பிடித்த
இனிய குரல் கேட்காது
என்பதால்...

இதயமே!
துடிப்பதை நிறுத்திவிடு,
உன் வீட்டில் குடி புகுந்தவள்
போய்விட்டதால்...

உயிரே!
உடலை விட்டு சென்று விடு.
ஏனெனில், என்
உடலில் இதயமில்லை.

கி.தனுஷியா,
சாவகச்சேரி.

## என்னையும் சேர்த்துவிடாதே

பொழுது போகவில்லை
சோம்பேறியின்
வார்த்தையிது
நெப்போலியன் சொன்னது
அடியே-
அந்தப் பட்டியலில்
என்னையும் சேர்த்துவிடாதே
உனது தாமதிப்பால்.

கு. தவசீவன்
விசுவமடு.

## கல்வி

ஆரம்பத்தில்
கசப்பு.
போகப்போக
இனிப்பு.

எஸ். டினுஷா,
பொகவந்தலாவ.

## பிழையிருக்கலாம்

*மெல்லிய மேகத்தை விடவும்*
*மென்மை மனசு கொண்டு*
*உன் மனசை*
*தொட்டுப் பார்க்க நீ*
*விட்டு போக*
*பட்டுப் போனதடா - என் நெஞ்சம்*

*எட்டி நின்று என்னிதயத்தை*
*தட்டிப்பார்க்கின்றாய் - அது*
*தாழிடப்படவில்லை -சற்றுமுன்வரை*
*இப்போது தான்*
*இறுக்கி போடப்பட்டது*
*உன்னை உள்ளே வைத்து*

*நீ சொன்ன சொற்கள்*
*எல்லாம் இப்போதும்*
*என் தொண்டைக் குழியிலேயே*
*நின்று கொண்டிருக்கின்றன.*

*வரவேற்கப்படாத வசந்த காலமாயிற்று*
*என் காதல் - என்*
*அன்பின் அடர்த்தி அவ்வளவுதானா?*
*என்னை நீ புரிந்துக்கொண்டது*
*இவ்வளவு தானா...?*

*இல்லாத சுவர்களை*
*யாரடா எழுப்பியது பெரிய பெரிய*
*துவாரங்களை இட்டு*
*முட்டாள்தனமாய்...*
*உன் மௌனங்கள் கலைக்கப்படாதவரை*
*என் முடிவுகளில் பிழையிருக்கலாம்.*

சிவகௌரி சிவகுரு
வவுனியா வளாகம்.

## நட்பு

கல்லூரியில் பழகும் நட்பு - அது
காலத்தால் பிரிந்துவிடும்
காதலுடன் பழகும் நட்பு - அது
கணப்பொழுதில் கலைந்துவிடும்
பயணத்தில் பழகும் நட்பு - அது
பகற்கனவாய் மாறிவிடும்
அலுவலகத்தில் பழகும் நட்பு - அது
கடமையுடன் ஓடிவிடும்
உண்மையான நட்பு கூட - என்றோ
ஒருநாள்
ஒரு வார்த்தையில் உடைந்து விடும்
ஆதலால்....
உண்மை நட்பு உண்டு எனக்
கூறுவதை நம்பாதே
எந்நட்பும் எந்நேரமும்
பிரிந்திடக்கூடுமடி
இது உண்மை என்று
தெரிந்ததடி
உன்னால் அது
புரிந்ததடி.

எஸ். தியா
மூங்கிலாறு

## எவளுக்காக.?.?.?

வாழ்க்கையில் மதிப்பு மிக்க
நிமிடங்களில்
சிலவற்றை நான் வீணாக்கி
விட்டேன்
உன் கன்னங்களையும் காதுகளையும்
எப்போதும் திறந்து வைத்திரு
என்று என் மனம்
உசுப்பிக்கொண்டிருந்தபோதும்
நான் என் மனதின்
ஜன்னல்களையெல்லாம்
திறந்துவைத்திருந்தேன்
ஆனால் எனக்காக
ஒருநொடி கூட
மனம்திறக்க எவளும்
இல்லையே...!

பிரியா
வெள்ளவத்தை

## தாயின் மடி

அம்மை முத்து வந்து
அம்மாவின் மடியில்
அம்மணமாய்க் கிடந்த போது,
அம்மைமுத்தின்
எண்ணிக்கையை விட
அம்மாவின் கண்களிலிருந்து
ஊற்றெடுத்த
கண்ணீர் துளிகளே அதிகம்.

அது என் மனதில்
ஆழப் பதிந்த
தெய்வீகக் காட்சி.

இன்று பயங்கரவாத
முத்திரைக் குத்தப்பட்டு
சிறகொடித்து சிறையிடப்பட்டேன்.
நாற்சுவருக்குள் வாடுகின்றேன்.

மீண்டும் ஒரு முறை
என்னை முத்தமிட்டது
அம்மை முத்து.

இங்கு தலை சாய்க்க
தாய் மடியுமில்லை,
வேப்பிலை கொண்டு
தடவி விட அன்புத்
தங்கையும் இல்லை.

தாகம் எடுக்கும்போதெல்லாம்
செவ்விளநீர்
பருக்கி விடுவாள்
என் அன்புத் தாய்.

அம்மை முத்துக்கள்
உடலெங்கும்
தாகமெடுக்கிறது
அதிகமாகவே,
இளநீர் தர அருகில்
தாயுமில்லை,
குளோரின் கலந்த
தண்ணீரைக்
குடிக்கவும் முடியவில்லை.

காக்கிச் சட்டைகளின்
தொல்லையைத் தாங்கிக்
கொள்ளவும்
முடியவில்லை.

என் அன்புத் தாயை
விட்டுப் பிரிந்ததே
என்னை வாட்டி
வதைக்கிறது.

இனிமையிலும் இனிமை
தாய் சேய் உறவு!
கொடுமையிலும் கொடுமை
தாய் சேய் பிரிவு!

கே.ரகு.
களுத்துறைச் சிறைச்சாலை.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்




தாய்லாந்தில் உள்ள சாமுயி தீவில் குரங்குகளுக்கு என்று ஒரு தனிக் கல்லூரி உள்ளது. அக்கல்லூரியில் குரங்குகளைச் சேர்ப்பதற்கு ரு.10,000 கொடுக்க வேண்டும். அங்கு படிக்கும் குரங்குகளுக்கு மரம் வெட்டுதல், தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறித்தல், பசுமாட்டிலிருந்து பால்கறத்தல் மற்றும் இசைக் கருவிகள் வாசித்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கிறார்கள். பயிற்சி முடிந்த பின்பு போட்டி வைத்து அதில் சிறந்த குரங்குகளுக்கு பரிசும் கொடுக்கிறார்கள். அவ்வாறு இசைப்போட்டி நடந்தபோது எடுத்த படத்தையே நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள்



ஹொலிவூட் நடிகை கமருன் டயஸ் கூச்ச சுபாவம் உள்ளவர். சாள்ஸ் ஏன்ஜல்ஸ் என்ற படத்தில் பிரமாதமாக நடித்தவர். இவர் நியூஸிலாந்து மாடல் அழகியும், நடிகையுமான கொரலி இச்சோல்டஸ் என்பவருடைய முகத்தில் ஒருகுத்து விட்டார். காரணம், கமருன் டயஸ் நீண்ட மெல்லிய கவுண் அணிந்து மேடைக்கு வரும்போது அதை பின்னாலிருந்து இழுத்து விட்டாராம் கொரலி இச்சோல்டஸ். கவுண்கீழே விழுந்துவிட்டதால் உள்ளாடையுடன் நிற்கும்படி ஆகிவிட்டதாம். அவமானத்தால் கண்ணீரே வந்துவிட்டதாம் கமருன் டயஸுக்கு.

* * *



இந்தோனேஷியாவின் அரச குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் அவர்களின் பிணத்தை அழகாக அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்ற பின்னர் தான் அடக்கம் செய்வார்கள். அந்தத் தேரின் மேல் பகுதியில் ஏழு படிகள் அமைக்கப்பட்டிருக்கும். இறந்தவரின் ஆத்மா அந்த ஏழு படிகளிலும் ஏறி நேராக சொர்க்கத்துக்குச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் அந்தப் படிகள் அமைக்கப்படுகின்றன. அந்தப் படிகளை சொர்க்கப் படிகள் என்று அழைக்கிறார்கள்.

* * *

காற்று
இசைபாட
மூங்கில்
வேண்டும்
நாற்று
அபிநயிக்க
தென்றல்
வேண்டும்
வீணைமீட்க
விரல்வேண்டும்
மொட்டு மலர
வெப்பம் வேண்டும்
மௌனத்தை மொழிபெயர்க்க
காதல்வேண்டும்
என் மனதில் தீபம் ஏற்ற
நீதான் வேண்டும்

முன்னேற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது. நாயிடம் கடிபடுவதைக் காட்டிலும் நாய்க்கு வழி விடுவதே மேலானது.

ஆபிரஹாம் லிங்கன்.



பெண்: 'நான் கறுப்பாக இருக்கிறேனே? உங்களுக்குப் பிடிக்குமா?''

ஆண்: "உன் அப்பாவிடம் பெட்டி பெட்டியாகக் கறுப்புப் பணம் இருக்கிறதாமே?''




*ரோஜா கம்பைன்ஸ் தயாரிப்பில் பத்மஸ்ரீ டாக்டர் கமல்ஹாசன் - ஜோதிகா இணைந்து நடிக்கும் 'வேட்டையாடு விளையாடு' படத்துவக்க விழாவில் ஜோதிகா, விஜயகாந்த், கமல்ஹாசன், அகர்வால், இயக்குனர் கௌதம், ஹாரீஸ் ஜெயராஜ், தயாரிப்பாளர் எம்.காஜா மைதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சினி கிசுகிசு.....

## தயாரிப்பாளர்களை அலறவைக்கும் 'ஒளி' நடிகை

கால்ஷீட் கேட்டு வரும் சின்ன கம்பனிகளைத் தவிர்ப்பதற்காக 'ஒளி' நடிகை ரூ.50 லட்சம் சம்பளம் கேட்டு அலற வைக்கிறார். அறிமுகமான பெரிய கம்பனிகளை அனுசரித்துப் போகிறார்.

## டப்பிங் பேச மறுத்த "கல கல" நடிகர்

*'பார்வை' என்ற அர்த்தம் வரும் ஆங்கில வார்த்தையைத் தலைப்பாகக் கொண்ட படத்தில் 'கல கல' நடிகர், முழுச் சம்பளம் கைக்கு வராததால் 'டப்பிங்' பேச மறுத்துவிட்டாராம். இதனால் படத்தை முடிக்க முடியாமல் இயக்குனர் வருத்தத்தில் இருக்கிறார்.

## மலேசியாவிற்குப் பறக்கும் 'கண்' நடிகை

முன்னாள் பிரபல கண்நடிகைக்கு வெளிநாட்டு மாப்பிள்ளையை எஜமான் ஆக்க ஏற்பாடு நடப்பதாக சொல்லப்பட்டது. இதுவரை எந்த வரனும் அமைந்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் நடிகை அடிக்கடி அமெரிக்காவிற்குப் பறக்கிறாராம். மிகவும் நெருக்கமான ஒருவரை சந்திப்பதற்காகவே நடிகை அங்கு போய் வருகிறார் என்கிறது கோடம்பாக்க வட்டாரம்.

# ஷக்தி சிதம்பரம் இயக்க... பட்டாசு

*குறைந்த பட்ஜெட்டில் நல்ல கதையம்சமுள்ள குடும்பப் படங்களை இயக்கிய வி.சேகரின் பார்வை தற்போது பிரமாண்ட படங்களின் மீது திரும்பியுள்ளது. இவருடைய திருவள்ளுவர் கலைக்கூடம் சார்பில் ஷக்தி சிதம்பரம் இயக்கும் புதிய படத்தின் பெயர் 'பட்டாசு'.

இதில் வளர்ந்து வரும் இளம் கதாநாயகர்களான சிபி, விக்ராந்த் ஆகியோர் மாறுபட்ட வேடத்தில் இரட்டைக் கதாநாயகர்களாக நடிக்கின்றனர். கதையோடு சேர்ந்து வரும் நகைச்சுவை நாயகனாக விவேக் நடிக்கிறார்.

"பொதுவாக வி.சேகர் படத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கும். இந்தப் படம் பெண்களை மட்டுமல்லாமல் இளைஞர்களையும் பெருமளவில் ஈர்க்கும் வகையில் தயாராக உள்ளது.



சிபிராஜ் - விக்ராந்த்

ஷக்தி சிதம்பரம் கமர்ஷியல் சினிமாவை நன்கு அறிந்தவர். பிரபு, கார்த்திக் ஆகியோருக்கு எப்படி 'அக்னி நட்சத்திரம்' படம் ஒரு திருப்பு முனையாக அமைந்ததோ, அதுபோல இந்தப் படத்தின் மூலம்


# திரையில் மணிகண்...

*எப்போதும் பிஸியாக இருக்கும் நடிகர்களில் அர்ஜுனும் ஒருவர். தற்போது அவர் 'ஆணை', 'மதராஸி', 'மணிகண்டா' ஆகிய மூன்று படங்களில் நடித்து வருகிறார். இலற்றில் நீண்ட நாட்களாக தயாரிப்பில் இருந்து வந்த 'மணிகண்டா' படப்பிடிப்பு முடிந்து திரைக்கு வரத் தயாராக இருக்கிறது.

இந்தப் படத்தில் ஜோதிகா, மாளவிகா, உமா என மூன்று நாயகிகள். இவர்களுடன் பி.வாசு, பசுபதி, ஆஷிஷ் வித்யார்த்தி உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

ஜாதிக் கொடுமைகளையும், அத...

# திருவிளையாடலில் தனுஷ்...



தனுஷ்

கஸ்தூரி ராஜாவின் சொந்தப் படமான திருவிளையாடலில் தனுஷ் நடிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது.

"தேவதையைக் கண்டேன் படத்தை இயக்கிய பூபதி பாண்டியன் இப்படத்தை இயக்குகிறார். ரஜினியின் மருமகன் ஆகிவிட்ட தனுஷ், சமயம் கிடைக்கும் போதெல்லாம் ரஜினியின் புகழ் பாடத் தவறுவதே இல்லை. இந்த படத்தில் ஒரு பாடலில் என்னம்மா கண்ணு சௌக்கியமா மெட்டில் ஒரு பாடலை அமைத்திருக்கிறார்கள். கவிப்பேரரசு எழுதியிருக்கும் அந்தப் பாடலில், தனுஷிடம் அவருடைய மாமனாராக பிரகாஷ்ராஜ் கேட்பதாக ஒரு வரி -

கொள்ளைப் பணம் என்னிடத்தில் கொட்டிக் கிடக்கு-

அட ஒல்லிக் குச்சி ராஜாவுக்கு என்ன இருக்கு?

அதற்கு தனுஷ் இப்படி பதில் சொல்கிறார்-

வாரித் தரும் வள்ளலுக்கு வாரிசிருக்கு - ஒங்க

வாரிசுக்குப் பிள்ளை தரும் யோகம் எனக்கு.

வைரமுத்து எழுதிய இந்த வரிகளைக் கேட்டுவிட்டு புளங்காகிதம் அடைந்து விட்டாராம் தனுஷ்.

நேரில் அவருடைய வீட்டுக்கே சென்று ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாராம்.

"அதிருக்கட்டும்... ஒரு பக்கம் மாமா ரஜினி பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் தனுஷ்... ஒரே வீட்டில் இரண்டு நட்சத்திரங்கள்! இந்தப் போட்டியை எப்படி சமாளிக்கிறீர்கள்?" தனுஷிடம் கேட்டால்,

"என்னோட போட்டி போடுவதற்கு அவர் சின்ன ஹீரோவும் இல்லை. அவரோட போட்டி போடுறதுக்கு நான் பெரிய ஹீரோவும் இல்லை. அவர் கூட போட்டி போட முடியாது. அப்படி யாரும் வரவில்லை. வரவும் முடியாது. அவர் ஓடுகிற ரேஸ் வேறு ரேஸ். அதில் அவர் மட்டும் தான் ஓடுகிறார். இப்படி ஒத்துப் பார்ப்பதே தப்பு" என்கிறார் ஒரே போடாக!

உண்மை தானே!

# நயன்தாராவுக்குப் போ... கோபிகா?



"நயன்தாராவின் ஸ்டைல் வேறு. என்னுடைய ஸ்டைல் வேறு. ஒவ்வொருவருக்கும் ஒரு பொலிசி இருக்கும். எனக்கும் அப்படி ஒரு பொலிசி இருக்கிறது. எந்தக் காரணத்திற்காகவும், யாருக்காகவும் அதை மாற்றிக் கொள்ள முடியாது. நயன்தாராவை ஓவர்டேக் பண்ண நான் நினைக்க மாட்டேன். ரசிகர்களிடம் எனக்கென்று ஒரு நல்ல பெயர் இருக்கிறது. அதைக் காப்பாற்றுவது என்னுடைய பொறுப்பு. மற்றபடி நயன்தாராவுக்கு நான் போட்டி இல்லை. இதை வைத்து எங்களுக்குள் சண்டை மூட்டிவிடப் பார்க்காதீர்கள்." எனக் கோரிக்கை வைக்கிறார் மலையாளக் குயில் கோபிகா.

மேலும், இயக்குனர் சேரன் கால்ஷீட் கேட்டு கோபிகா மறுத்தது குறித்த கேள்விக்கு, "சேரன் இரண்டு முறை கால்ஷீட் கேட்டது உண்மைதான்.

...ங்கத்தில்



சிபி, விக்ராந்த் ஆகியோருக்கும் ஒரு நல்ல பிரேக் கிடைக்கும். மொத்தத்தில் படம் ஆக்ஷன் கலந்த ஒரு காதல் கதையாக அமையும்'' என்கிறது படயூனிட்.

ஏற்படும் பிரச்சினைகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டுவதுதான் படத்தின் கதையாம். முக்கியமாக மதுரையிலுள்ள பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்கள், அதற்கான காரணங்கள் போன்றவற்றையும் சுட்டிக்காட்டியுள்ளார்களாம்.


...குப் போட்டியா



கோபிகா

ஆனால், அந்நேரத்தில் நான் மலையாளம், தமிழ், தெலுங்கு என மூன்று மொழிகளிலும் பிஸியாக இருந்தேன். அதனால் முடியவில்லை. சேரன் என் மீது வருத்தத்தில் இருக்கிறார் என்பதைவிட அவர் கேட்டும் கால்ஷீட் தர முடியவில்லையே என்ற வேதனையில் நான் இருக்கிறேன்'' என்கிறார் கோபிகா.

# தங்கர்பச்சானின் ஆதங்கக் குமுறல்



'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' திரைப்படத்தின் ஒலிநாடா வெளியீட்டு விழாவில் இயக்குனரும், நடிகருமான தங்கர்பச்சான் நிகழ்த்திய உரை திரைப்பட உலகில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அவர் ஆற்றிய காரசாரமான உரை பற்றி அவரிடம் கேட்டபோது, கோபம் மாறாத குரலிலேயே பதிலளித்தார் தங்கர்பச்சான்.

''இந்தப் படத்தின் கடைசிக் காட்சியைப் படமெடுக்க வேண்டிய நேரத்தில் கதாநாயகி நவ்யாநாயர் சம்பள பாக்கிப் பணமான இரண்டு லட்சம் ரூபாயைக் கொடுத்தால்தான் நடிக்கவர முடியும் என்றார். உடனடியாக நான் தயாராக வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டேன்.

இவ்வளவுக்கும் பிறகு நடிகை படப்பிடிப்புக்கு வந்தவுடன், தனது பட்டா 600 ரூபாயைக் கொடுத்தால் தான் நடிகைக்கு சிகையலங்காரம் செய்வேன் என்று நிற்கிறார் சிகையலங்காரப் பெண். அதையும் எடுத்து நீட்டிய பிறகுதான் முகத்தைக் காட்டினார் நடிகை. நான் தயாரித்து வெற்றி பெற்ற 'அழகி' திரைப்படத்தைவிட சிறப்பானதொரு படத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் என்னையும், எனது மன உறுதியையும் குலைக்கும் வகையில் நடந்து கொண்ட நடிகையையும், சிகையலங்காரப்



பெண்ணையும் யார் கண்டிக்கப் போகிறார்கள்?

ஒரு பெண் பணத்திற்காகத் தான் விபசாரத்தில் ஈடுபட்டு உடலை அர்ப்பணம் செய்கிறாள் என்பது போல்தானே இதுவும். பணத்திற் காக மட்டுமே நடிக்கும் நடிகையும் ஒரு வகையில் விபசாரிக்கு ஒப்பானவள் தானே?''

**நவ்யாநாயரின் நடிப்பாற்றலுக்காக அவரைத்தேடி அழைத்து வந்த நீங்கள், இவ்வளவு கடினமான வார்த்தைகளால் விமர்சனம் செய்கிறீர்களே?**

''ஆம். இந்த இடத்தில் ஒரு உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். எனது முந்தைய படங்களைப் போலவே இந்தப் படத்திலும் நடிகை கிடைப்பதற்கு மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கினேன். பல நடிகைகளிடம் பேசி சோர்ந்து போன நிலையில், நவ்யாநாயரிடம் பேசி சம்மதம் வாங்கினேன்.

நவ்யாநாயர் சிறந்த நடிகை. அவரது நடிப்புத்திறனைப் பார்த்து நான் மட்டுமல்ல; எங்கள் யுனிட்டே அசந்து நின்றது உண்மை. உண்மையில் நவ்யாநாயருக்கு நான் கொடுக்க வேண்டிய சன்மானத்தில் பத்தில் ஒரு பங்கு தான் கொடுத்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட திறமைசாலி நடிகையை பணத்திற்காகப் பகடைக்காயாகப் பயன்படுத்துவது யார்? அவரால் எனக்கு ஏற்பட்ட தலைகுனிவிற்கு யார் காரணம்? என்று புரியாமல் தான் ஆதங்கத்தில் நான் வலியோடு புலம்புகிறேன்.''

**இது பற்றி தயாரிப்பாளர் சங்கத்திடம் முறையிட்டீர்களா? இங்காவது தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?**

''நிச்சயம் நம்புகிறேன். மிகச்சிறந்த புத்திமானும், நிர்வாகியுமாகிய சத்யஜோதி தியாகராஜன் தலைவராக இருக்கும் இந்தக் காலகட்டம் தான் தயாரிப்பாளர்களின் பொற்காலம் என்று சொல்லலாம். அவரால் தான் என் போன்ற படைப்பாளிகளின் வலியைப் போக்க முடியும்.

என்னைப் பொறுத்த வரையில் என் உள்ளக்கிடக்கைகளை விழா மேடையில் கொட்டித் தீர்த்து விட்டேன். அதைத் தெரிந்து சபையும், தலைவரும் என்னை மதித்து அழைத்தால், இன்னும் பல வேதனைகளையும், உண்மைகளையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளேன்.

என்னுடைய ஆதங்கமான குரலில் இறந்து போன - தற்கொலை செய்து கொண்ட தயாரிப்பாளர்களின் குரலும் அடங்கியிருக்கிறது என்பதை நிரூபிக்கப் பாடுபடுவேன்.''

# பெண்கள் நடத்தும் மகா சினிமா 'ஜூன் ஆர்'

"இது கமர்ஷியல் படமா? இல்லை கலைப்படமா? மார்கழி மாதத்து வெயில் மாதிரி மந்தமான கேள்வி எழுகிறது ஜூன் ஆர் படத்தின் ஸ்டில்களைப் பார்க்கும் போது. ஆனால் ஒன்று 33சதவீத ஒதுக்கீடு என்ன, 66 சதவீதத்தையும் தாண்டி பெண்கள் நடத்துகிற மகா சினிமா இது என்பது மட்டும் புரிகிறது.

சரிதா என்ற பெண் சிவாஜியும், ஜோதிகா என்கிற ஜூனியர் சிவாஜியும் கலக்கோ கலக்கென்று கலக்கியிருக்கிறார்களாம். கதைப்படி ஜோதிகா தன் தாயைத் தேடுகிறார். குழந்தையாக இருந்த போது தன்னை விட்டுப் போன தாயை பருவ வயதில் சந்திக்கிறார். மீண்டும் தாயிடம் குழந்தைப் பருவத்தை அனுபவிக்க நினைக்கிறார். இதை ஒரே பாடலில் அழகாக வெளிப்படுத்தி இருக்கிறார் இயக்குனர் ரேவதி வர்மா.

ஜோதிகா பீடிங் போத்தலில் பால் குடிக்கிறார். அம்மாவின் முதுகில் யானைச் சவாரி செய்கிறார். யோசித்துப் பாருங்கள்... அழகு பேபி ஜோதிகா, அமுல் பேபியாகும் இந்தக் காட்சிகளை எடுக்கும் போது நிஜ குழந்தையாகவே மாறிவிட்டாராம் ஜோ.

இன்னொரு நாள் படப்பிடிப்பில் சரிதாவும், ஜோதிகாவும் சமையலறையில் சமையல் செய்வது போல் காட்சி எடுத்தார்களாம். இதற்காக இரண்டாயிரம் ரூபாய்க்கு காய்கறிகள் வாங்கப்பட்டதாம். ஷூட்டிங் முடிந்தவுடன் அந்தக் காய்கறிகளை என்ன செய்வதென்ற குழப்பம். உடனே ஜோதிகா, எல்லாவற்றையும் யுனிட்டில் வேலை செய்தவர்களுக்குப் பிரித்துக் கொடுங்கள் என்று சொல்லிவிட, இந்தத் தெனாலிராமியின் தீர்ப்பைக் கண்டு யுனிட் மொத்தமும் அசந்துப் போனதாம்.



சரத்குமார் - நமீதா

# விளம்பரத் தாரகைகளுக்கு ஒரு விண்ணப்பம்



இன்றைய காலகட்டமானது விளம்பரயுகமாகும். எதைச் செய்தாலும்,எதைசெய்ய வேண்டியிருந்தாலும் அதற்கு விளம்பரம் தேவைப்படுகிறது.

குறிப்பாக வியாபாரத்திற்கு விளம்பரம் அத்தியாவசியமாகிறது.பல சமயங்களில் வியாபாரம் நடக்காத போதிலும் விளம்பரம் செய்வதுமட்டும் தவறாமல் நடைபெற்று வருகிறது. விளம்பரம் தொடர்ந்தால் வியாபாரம் தொடரும் என்ற நம்பிக்கை இங்கு பலபேரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம் சில ஆபாசத் திரைப்படங்களையும், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளையும் தான் குடும்பத்தோடு அமர்ந் திருந்து பார்க்க முடியாமல் இருந்தது. ஆனால், நிகழ்ச்சிகளினிடையில்வரும் விளம்பரங்களைக்கூட நாம் குடும்பத்தினருடன் சரிசமமாக அமர்ந்து பார்க்க மனம்கூசும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆண்களுக்கான உள்ளாடை விளம்பரமோ, ஷேவிங்கிறீம் அல்லது லோஷன் விளம்பரமோ, மோட்டார் பைக் விளம்பரமோ, சூட்டிங் சேட்டிங் விளம்பரமோ, மதுபான விளம் பரமோ அதில் ஒரு பெண்ணை நடிக்க விடுங்கள்...! வியாபாரம் தூள்பறக்கும்...! இதுதான் இன்றைய விளம்பர கர்தாக்களின் ஒரே கொள்கை.

இன்னும் சொல்லப்போனால் ஆண்களுக்கான விளம்பரத்தில் ஆண் கூடத் தேவையில்லை. பெண் இருந்தால் போதும் என்கின்றனர். பெண்ணானவள் கவர்ச்சி உடையுடனும், அசட்டுச்சிரிப்புடனும், அபத்த வசனமுமாக வசனம் பேசி வளைய வரவேண்டும் என்பது எழுதப்படாத விதியாகி விட்டது. உயிர்க்கொல்லிஎய்ட்ஸ் நோயிலிருந்து தப்பிக்க ஆணுறை அணிய வேண்டும் என்ற மருத்துவ அறிவுரையை வழங்கும் விளம்பரம்கூட எத்தனை விரசமாக வர முடியுமோ அந்தளவுக்கு விரசப்பட்டு நிற்கிறது.

எதிர்பாராத தருணங்களில் ஏவுகணை போல் சின்னத்திரையில் தோன்றித்தாக்கும் இத்தகைய விளம்பரங்களைப்பார்த்து நமது வீட்டுச்சின்னஞ் சிறுசுகள் இவற்றுக்கு கூட என்னஅர்த்தம்?என்று கேட்டால் நாம் கூனிக்குறுகிப்போய் விட வேண்டியதுதான். அத்தனை மோசமான விளம்பரங்கள். நீலப் படக்காட்சிகளுக்குச் சற்றும் குறையாத இவ் விளம்பரங்கள்சரியானதணிக்கைமுறை நடைமுறையில்லாத காரணத்தால் நமது வீட்டு நடுக்கூடத்தில் தோன்றி நமது பணத்தையும், மனதையும் ஒன்றுசேர கெடுத்து வருகின்றன.

இதற்கெல்லாம் விடிவுகாலம் இல்லையா? இதைமாற்றுபவர்கள் யாரும் இல்லையா? என்ற



கேள்விகளுக்கு விடை இருக்கிறது.

ஆம்!விடிவுகாலம் நிச்சயம் உண்டு. ஆனால் அதைச் சாத்தியமாக்கக் கூடியவர்கள் வேறு யாருமில்லை. அவ்விளம்பரங்களில் நடிக்கும் பெண்களே இதைத் தடுக்கக்கூடியவர்கள்.

ஆம்....!இத்தகைய விளம்பரங்களில் நடித்து நமது கலாசாரத்தைச் சீரழிப்பதில் தாமும் ஒரு பங்கு வகிக்கின்ற பெண்கள், மனது வைத்தால் நமது கலாசாரத்தை மீட்டெடுத்து வாழ்விக்க முடியும்.


முதலில் பெண்மணிகள் தங்களின் பெருமையை, பெண்மையின் பெருமையை உணரவேண்டும். பெண்மை என்பதோ, பெண்ணழகு என்பதோ விளம்பரச்சரக்கல்ல என்று எண்ணவேண்டும். பெண் என்பவள் யுக யுகமாக ஆணின் மோகப் பொருள் என்ற நினைப்பை அவர்கள் மனதார வெறுக்க வேண்டும். கட்டுடல் கொண்ட ஓர் ஆணைக் கண்டவுடன் காமவசப்படுவது பெண்களின் இயல்பு என்ற விளம்பரயுக மாயையைக் கிழித்தெறியத்துணியவேண்டும்.

விளம்பர நடிப்பு என்பதை பணத்துக்காகச் செய்யும் பிழைப்பு என்பதனாலும், அது பெண்ணினத்தின் சுய கௌரவத்துக்கும் பங்கம் விளைவிக்கும் என்பனாம் அதனைச் செய்யமாட்டோம் என்ற நெஞ்சுறுதி வேண்டும்.

விளம்பரத்தாரகைகளே, எமது விண்ணப்பம் உங்களது காதில் விழுகிறதா? நீங்கள் மனது வைத்தால் உங்கள் கவர்ச்சியை சற்றுக் குறைத்துக் கொள்ளலாம் அல்லவா?

பெண் மீரா

# கன்னங்களை முறையாக பராமரிக்கவேண்டும்



பெண்களின் அழகான கன்னங்களுக்கு அவ்வப்போது அச்சுறுத்தலாகத் தோன்றுவது அவர்களின் பருக்களுடைய கன்னங்கள்தான். பருக்கள் வராமல் தடுக்க வேண்டும் என்றால்,

★வெளிப்படையான பயன்பாடுகளைப் பொறுத்தவரை தலையணை உறை, சோப், துவாய் போன்றவைகளை தனித்தனியாகப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் கிருமிகள் பரவி கன்னங்களில் பருக்கள் ஏற்பட்டுவிடும்.

★குளிப்பதற்குச் சுத்தமான தண்ணீரையே பயன்படுத்த வேண்டும்.– என்கின்றார் பிரபல இந்திய அழகுக் கலை நிபுணர் ஹமீனா சையத்.

★மலச்சிக்கல் வராத அளவுக்கு வயிற்றைப் பராமரிக்க வேண்டும். பொடுகுத் தொல்லை, ஹார்மோன் பிரச்சினை, நகத்தினை வளர்த்தல், முறையற்ற உணவுப்பழக்கம், உணவில் அதிக அளவு எண்ணெய் பயன்படுத்தல் போன்றவை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

★எளிதில் ஜீரணிக்கக் கூடிய மென்மையான உணவுகளை உண்ண வேண்டும். அத்துடன் காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொண்டால் கன்னங்கள் பளப்பளக்கும்.

★தண்ணீர் நிறையப் பருக வேண்டும். அத்துடன் எண்ணெய் வழியும் முகமாக இருந்தால் உடனே சிகிச்சைபெற வேண்டும். பொடுகு அதிகமானாலும், இவ் எண்ணெய்த் தன்மையுள்ள முகத்துடன் சேர்த்து கன்னங்கள் அழகின்றி அகோரமாகக் காட்சியளிக்கும்.

★அவ்வப்போது வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவி சுத்தப்படுத்தல் வேண்டும். முடியுமானவரை மாதத்திற்கு ஒரு தடவையாவது அழகுக் கலை நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெறல் வேண்டும்.

★பல பெண்களின் கன்னங்களின் உள்ளே கரும்புள்ளிகள் போன்ற அடையாளங்கள் அவர்களின் அழகைக் கெடுத்து விடுகின்றன. இதற்கு நவீன சிகிச்சை மூலம் தீர்வு காணலாம்.

★வேப்பிலை, கிருமி நாசனி என்பதால் அதன் கொழுந்தைத் தண்ணீரில் அரைத்து முகப்பரு உள்ள இடத்தில்பூசி 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி விட வேண்டும்.

★ஐம்பது சதவீத அளவிலான பெண்களுக்கு அதிகமான அளவு தொந்தரவு தருவது முகத்தில் வளரும் ரோமங்கள் தான். அதற்கு ஹார்மோன் தான் காரணம். இதனால், ரோமங்கள் வளர்கின்றன. இதற்கு பூலான் கிழங்கு, மஞ்சள், பயறு சேர்த்து அரைத்து முகத்தில் பூசி வர நாளடைவில் ரோமங்கள் முளைப்பதைத் தவிர்க்கலாம்.

★ ★ ★ ★ ★ ★ ★

# அனுபவம் பேசுகிறது...

என்ன காரணமோ அன்று காலையிலேயே உற்சாகம் தொலைந்துபோய் மனம் வியர்த்துக் கிடந்தேன். உடனடியாக செய்தாக வேண்டிய வேலைகள் வேறு, கண்முன்னே குவிந்து கண்ணாமூச்சி காட்டின. சலிப்பாக இருந்தது. அப்போது தான் சிணுங்கியது எங்கள் வீட்டு டெலிபோன் மணி. சுவாரஸ்யத்துடன் போனை எடுத்து, ஹலோ என்றேன் நீண்ட கொட்டாவியுடன். ஆனால், மறுமுனைக்குரல் அத்தனை பெரிய உற்சாகத்தை எனக்குள் ஊற்றி விடும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

'வெறிகுட்மார்னிங்...' யார்னு தெரியுதா? என்றது. நானும் யோசித்து யோசித்துப் பார்த்தேன். அந்தக் குரல் என் நினைவுக்கு சிக்கவில்லை. ஆனால், வெரிகுட்மார்னிங் என்ற தொனி எனக்குள் மிகப்பெரிய உற்சாகத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

''ஜேர்மன் மெடிசின் எடுத்து வைத்திருக்கிறேன். இப்போதாவது நான் யார் என்று தெரிகிறதா''? - மீண்டும் சொன்னது அந்தக் குரல். இப்போது, உடனடியாக நினைவு வந்தது. எங்கள் குடும்ப நண்பரும் ஹோமியோபதி மருத்துவருமான பாஸ்கர் என்பவர்தான் அவர்.

வழக்கமான நலன் விசாரிப்புகளுக்குப் பிறகு போனை வைத்த பிறகும், அந்த உற்சாகம் என்னோடு ஒட்டிக்கொண்டே இருந்தது.

மிகச் சாதாரண ஒரு உரையாடலில் இப்படி ஒரு உற்சாகத்தை ஒருவரால் தர முடியுமா? என்று வியந்தப்படியே அன்றைய வேலைகளில் இறங்கினேன். அந்தநாள் முழுவதுமே உற்சாகமான, மனச்சோர்வே இல்லாத ஒரு நாளாக இருந்தது எனக்கு.

இப்படி ஒவ்வொருவரும் சின்னச் சின்ன சந்தோஷங்களை, உற்சாகங்களை எந்த எதிர்பார்ப்புமின்றி மனப்பூர்வமாகத் தர முடிந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று எண்ணியது என்மனம். அதை மற்றவர் தரக் காத்திருக்காமல், ஏன் நாமே மற்றவருக்குத் கொடுக்கக் கூடாது? என்று தோன்றியது. அன்று முதல் காலையில் எழுந்து இறைவனைப் பிரார்த்தித்து யார் மீதும் எரிச்சலோ, கோபமோ இல்லாமல் முதலில் என்னை உற்சாகமாக்கிக் கொண்டு பின்பு, மற்றவர்களையும் உற்சாகமாக்கத் தொடங்கினேன்.



இதில் கிடைக்கும் சந்தோஷத்தை வார்த்தைகளில் விவரிக்க முடியாது

நீங்களும் முயற்சித்துப் பாருங்களேன் இந்த உற்சாக ரெசிபியை!

கீதா - கண்டி

# சுவையான சமையல் டிப்ஸ்... டிப்ஸ்...

★பச்சை அரிசியை களைந்து நன்றாகக் காய வைத்து அரைத்து, உளுந்தும் மாவுடன் சேர்த்து வைத்துக்கொண்டால் தேவைப் படும்போது அதிரசம், தேன்குழல், முறுக்கு செய்யலாம்.

★புழுங்கல் அரிசியை நன்கு ஊற வைத்து கிரைண்டரில் வெண்ணெய்போல் அரைத்து, உளுத்தம் பருப்பை பொன்னிறமாக வறுத்து மாவாக்கிக் கலந்து உப்பு சேர்த்து இரண்டு ஸ்பூன் நெய்யை உருக்கி மாவில் கொட்டி சீரகம், எள் சேர்த்து வாசனைக்கு சிறிது ஓமமும் நசுக்கிக் கலந்து தேன்குழல் செய்தால் சுவைகூடும்.

# கேள்வி-பதில்

அன்புக்குரிய சகோதரிகளே!

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூக பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு மீரா பதில் அளிப்பார். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்தும் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-

பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜாந்த மல்லிமாரச்சி மாவத்தை.

# காதுக்குள் உருவாகும் குடும்பியும் ஒரு பாதுகாப்புக் கவசமே!

**கே - வயது 26 பெண். எனக்கு தொடர்ந்து காய்ச்சல் இருந்தது. எத்தனையோ மருந்துகள் எடுத்தும் குறையவில்லை. இரத்தம் சோதித்துப் பார்த்ததில் ESR 112 முதலாவது மணித்தியாலம் இருந்தது. எனது மருத்துவர் எக்ஸ்ரேயும் எடுத்து எனது எச்சிலையும் சோதித்துப் பார்த்து,எனக்கு காசநோய் (TB) இருப்பதாகக் கூறினார். எனக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது. எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கும் காசநோய் இல்லை. அதுதவிர நாங்கள் ஏழைகளும் இல்லை. நல்ல போஷாக்கான உணவை மூன்று நேரமும் உண்கிறோம். அப்படி இருக்கையில் எனக்கு ஏன் காசநோய் வந்தது? மருந்து எடுத்தால் முற்றாக குணமாகுமா? குடும்பத்தில் மற்றவர்களுக்கு என் மூலம் தொற்றியிருக்குமா?**

ப - வசதியானவர்களுக்குக் காசநோய் வருவதில்லை என்பதும், வறுமையானவர்களைத்தான் காசநோய் பீடிக்கும் என்பதும் பழைய கதை. காசநோய் என்கின்ற TB அல்லது Tuberculosis நோயைத் தருகின்ற மைக்கோ பற்றீரியம் நியூபோகுளோசிஸ் (Mycobacterium Tuberculosis) என்ற பற்றீரியாவைக் காவித் திரிபவர்கள் (CARRIERS) கிட்டத்தட்ட எமது ஜனத்தொகையில் 50 சதவீதத்திலிருந்து 70 சதவீதமானோர் என்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரும். இந்த 'பற்றீரியாக் காவிகள்'என்போரைக் காசநோயாளர்கள் என்று கருதக் கூடாது. விளக்கமாகச் சொல்லப் போனால் இந்தக் காவிகளின் உடலினுள் இந்தக் காசநோய் பற்றீரியாக்கள் வாழ்கின்றன. ஆனால், அவை சிறையினுள் அடைபட்டிருக்கின்ற திருடர்களைப் போல்- காவிகளின் நோய் எதிர்ப்புச் சக்தியினால் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.'கட்டுண்டோம் பொறுத்திருப்போம் - காலம் வரும் வெளிவருவோம்'- என்ற ரீதியில் - எமது உடலின் எதிர்ப்புச் சக்தி குன்றும் போது- இவை தப்பித்து வெளியேறி- காசநோயை உண்டாக்குகின்றன.

ஆகவே, போஷாக்குக் குறைந்த உடலில், குடிகாரர்களின் உடலில் , போதைவஸ்து பாவனையாளர்களின் உடலில், நீரிழிவு நோயாளர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு என்பதால் அவர்களின் உடலில் காசநோய் பீடிப்பது வெகு சுலபம். உங்களைப் பொறுத்த வரையில்- நீண்ட நாள் காய்ச்சல், பருமனைக் குறைப்பதற்காக உணவுக் கட்டுப்பாடு என்ற சாக்கில்- போஷாக்கான உணவுகளைத் தவிர்த்தல், சுகாதாரமற்ற சூழலில் வசித்தல், அப்படியான சூழலில் வேலை பார்த்தல் என்பன கூட உங்களுக்கு நோய் வரக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

நோயாளர்களோடு பழகும் டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் என்போர் கூட- காசநோய்த் தாக்கத்துக்கு ஆளாகும் வாய்ப்புகள் அதிகம். எனவே, கவலைப் படாதீர்கள்.முன்னைய காலங்களைப் போல பல மாதங்கள் காசநோயாளர்கள் வார்ட்டுகளில் இருக்க வேண்டிய தேவை இல்லை. நோயின் உக்கிரம் குறையும் வரை வைத்தியசாலையில் இருந்து மருந்துகளை சில வாரங்கள் உபயோகித்துவிட்டு - பின்னர் சில மாதங்களுக்கு - வீட்டிலிருந்து - உபயோகித்தால் முற்றாகக் குணமடையலாம்.

**கே - வயது 64. ஆண்.எனக்கு கடந்த 15ஆண்டுகளாக நீரிழிவுவியாதி. மாத்திரைகள் சாப்பிட்டு வருகிறேன்.உணவுக் கட்டுப்பாட்டை அனுசரித்து வருகிறேன். என்றாலும் எவ்வளவு கவனமாக இருந்தாலும் சிலவேளைகளில் சர்க்கரைச்சத்து அதிகரித்துக் காணப் படுகின்றது. நான் சரியாக உணவைக் கட்டுப்படுத்துவதில்லை. மாத்திரைகள் ஒழுங்காகப் போடுவதில்லை என்று எனது டாக்டர் என்னைச் சந்தேகித்துக் கடுமையாக ஏசுவார். நான் பொய் சொல்கின்றேன் என்று டாக்டர் நினைக்கிறார்.**

**நீரிழிவு வியாதியில் என்ன கஷ்டம் வந்தாலும் எனது டாக்டரிடம் போவதில்லை என்று எரிச்சலுடன் இருக்கிறேன். எவ்வளவு கட்டுப்பாடாக இருந்தாலும் ஒழுங்காக மருந்துகள் எடுத்தாலும் ஏன் எனது நீரிழிவு கட்டுப்பாட்டிற்குள் வருவதில்லை. நீரிழிவைக் கவனிக்காமல் இருந்தால் ஏதாவது பிரச்சினையா?**



ப - முதலில் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைக்காவிடில் என்ன நேரிடும் என்பதற்குப் பதில் கூறுகின்றேன். நோய்களின் ராணி நீரிழிவு. அதாவது, நீரிழிவு நோய் ஏற்பட்டால்- இது உடலில் பல பகுதிகளைத் தாக்கி நோயுண்டாக்கும் என்பதனால் தான்- நோய்களில் ராஜ மரியாதையை நீரிழிவு பெற்றது. நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்காவிடில், குருட்டுத் தன்மை ஏற்படுவது 25 மடங்காகவும், சிறுநீரகம் பழுதாவது 17 மடங்காகவும், தசை அழுகல் போன்ற தொற்றுகள் ஏற்படுவது 20 மடங்காகவும் அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு . எனவே, நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியம்.

உங்கள் டாக்டர் - உங்கள் நன்மைக்காகத்தான் உங்களைக் கண்டித்திருக்கின்றார். நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க மருந்துகள், வாழ்க்கை முறை, உணவு முறை இந்த மூன்றும் தேவை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள் நேரம் தவறாமல் உபயோகிக்கப்பட வேண்டும். இரத்தத்திலோ, சிறுநீரிலோ சர்க்கரைச்சத்து குறைந்துவிட்டால்- சாதாரண நிலைக்கு வந்துவிட்டால் நீரிழிவு குணமாகிவிட்டது என்று மருந்தையே கைவிடுவது சரியல்ல. நீரிழிவு நோய் மருந்தினால் தான் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை மனதில் கொள்ள வேண்டும். நீரிழிவு நோய் அசாதாரண காய்ச்சல் நோய் போல் மருந்தோடு குணமாகி விடும் நோயல்ல. எனவே, டாக்டரோடு ஆலோசித்துத்தான் எடுக்கும் மருந்தின் அளவு மாற்றப்பட வேண்டும். உணவுக் கட்டுப்பாடு மிக மிக அவசியம். மாத்திரைகள் உபயோகிப்பதால் - ஆரம்ப காலத்தில் இரத்தத்தில் சர்க்கரைச் சத்து குறைந்து பசி அதிகரிக்கலாம். எனவே, மனக் கட்டுப்பாட்டோடு- அதிகம் உண்ணாமல் உணவு முறை களைப் பின்பற்ற வேண்டும். என்ன உணவுகளை- எவ்வளவு உண்ண வேண்டும் என்பது ஒவ்வொரு நோயாளிக்கும் வேறுபடும். ஒரு உளவியல் வைத்தியரை (NUTRITIONIST) அணுகி உங்களுக்குப் பொருத்தமான உணவு முறைகளை அறிந்து அதன் படி ஒழுக வேண்டும். வாழ்க்கை முறையில் மாற்றங்கள் வேண்டும். ஓய்வு, அமைதியான வாழ்க்கை தேவை. எரிச்சல், கோபம் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.தேகப் பயிற்சி- தினமும் கிலோமீட்டர் தூரம்- விரைவான நடை, மதுபானம் தவிர்த்தல் என்ற வாழ்க்கை முறைகள் அவசியம். இவை தேவையற்ற மன உளைச்சல், மன அழுத்தம் என்பவற்றைக் குறைக்கும். இந்த மன உளைச்சல், அழுத்தம் என்பன கூட- இரத்த சர்க்கரை அளவை அதிகரிப்பதாக கண்டறிந்துள்ளார்கள். உதாரணமாக எமது நாட்டில் பதற்றமான சூழ்நிலை இருந்த 85ஆம் ஆண்டில்- நான் பணி புரிந்த வைத்தியசாலையில் - நீரிழிவு நோயாளர்கள் தொகை அதிகமாயிருந்தது. நாட்டின் பதற்ற சூழ்நிலை பெருமளவில் குறைந்த போது- 'நீரிழிவுக் கிளினிக்' வரும் நோயாளர்களின் தொகை பெருமளவு குறைந்தது. காரணம்- பாதி நோயாளர்களுக்கு நீரிழிவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் மன அழுத்தம் என்பதே.

**கே- வயது 18. எனக்கு காதுக்குள் அடிக்கடி பரு ஏற்பட்டு, வீங்கி வருத்தம் தரும். இந்த வேளை களில் மருந்து எடுத்துகுண மாக்குவேன். நான் காதை EAR BUDS ஆல் அடிக்கடி துடைத்து சுத்த மாக வைத்திருந்தும், இப்படி ஏன் ஏற்படுகிறது?**

ப - காதினுள் பருக்கள் வருவதற்கு நீங்கள் அடிக்கடி செய்கின்ற சுத்திகரிப்பு வேலையும் ஒரு காரணமாக இருக்கலாம். வெளிக் காது போல் - உட்காதிலும் - அரை சென்ரி மீற்றர் தூரத்துக்கு சாதாரண தோல், மயிர் துளைகள், வியர்வைச் சுரப்பிகள், SEBACEOUS GLANDS எனப்படும் எண்ணெய் சுரப்பிகள் உண்டு. நீங்கள் சுத்தம் செய்யும் போது - கடைகளில் கிடைக்கும் EAR BUDSஐ துவாரத்தில் நுழைத்து அழுத்தித் துடைத்தெடுப்பதால்- அவ்விடத்திலுள்ள மயிர்க் கால்கள் (HAIR FOLLICLES) - தாக்கப்பட்டு - தொற்று ஏற்பட சாத்தியம் உண்டு. எல்லாம் வியாபாரமாகி விட்ட இந்தக் காலத்தில்பிரபல கம்பனிகளின் பெயரில்- குடிசைத் தொழிலாய் சுத்திகரிக்கப்படாத பஞ்சை (COTTON WOOL) எடுத்து தயாரிக்கப்பட்ட EAR BUDS இல் நிச்சயம் தொற்றுகள் இருக்கலாம். அத்துடன், அடிக்கடி EAR BUDS கொண்டு காதை சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

காதினுள் உருவாகும் குடும்பி, காதுச் சவ்வை பலத்த சத்தங்கள் தாக்காதவாறு- ஒரு அதிர்ச்சித் தடையாக (SHOCK ABSORBER) தொழில் புரிகிறது. எனவே, அடிக்கடி காதைச் சுத்தம் செய்வதைத் தவிர்க்கவும்.

## சொந்தங்களைத் தேடி.....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதிக்கு வந்தார். மூதாட்டிகள் அவரை அன்போடு வரவேற்றார்கள். பீரிட்டு வரும் அழுகையை அடக்கிக்கொண்டு அமர்ந்திருந்த பாட்டியிடம், "பாட்டி சந்தோசம் தானே?.. உங்கட மகள், பேரன் எல்லாரும் வந்திருக்கினம்.." என்றார் செயலாளர்.

பாட்டி பேசாமல் இருந்தாள். மகளும், பேரனும் கொண்டு வந்த பிஸ்கற், இனிப்பு வகைகளை தொடக்கூட இல்லை. அவர்கள் இன்னும் அழுது கொண்டிருந்தார்கள். பாட்டி செழிப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தது அவர்களுக்கு ஆனந்தமாக இருந்தது. எனினும், அவளது மௌனம் குற்றமுள்ள இவர்களின் மனதை நெருடியது.

"அம்மா கதையணை.."

"பாட்டி கதையுங்க.."

"அழாதீங்க... வாங்க இதில அமர்ந்திருந்து கதையுங்க... பாட்டிக்கு கோபம் மாறயில்லைப் போல..."

"பாட்டி உங்கட பேரன் ரவி வந்திருக்கிறன்... தெரியுதா?" பாட்டிக்குப் பார்வை குறைவு என எண்ணிய ரவி கேட்டான்.

"போடா போக்கற்றவனே... எனக்கு கண் இரண்டும் தெரியும். ஐயா கொழும்புக்கு அனுப்பி ஒப்பிறேசன் செய்விச்சவர்..ம்.. நீங்கள் எல்லாம் ஏன் வந்தீங்க?"

"உங்களைக் கூட்டிப் போகத்தான் பாட்டி..." என்றபடி ரவி பாட்டியின் கைகளைப் பற்றிக் கொண்டு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதான்.

"எங்கேடா?" பாட்டி வெடுக்கென்று கேட்டாள்.

"நம்ம வீட்டுக்குத்தான்..."

"நான் வரல்லை...." என்று கடுப்பாகக் கூறினாள் பாட்டி.

"அம்மா" கமலாவுக்குத் தொண்டை அடைத்தது. மனம் கலங்கி வெதும்பியபடி மீண்டும், "அம்மா எங்களோட வாணை..." என்றாள்.

"நான் இங்கதான் இருப்பேன்... என்னை விட்டுட்டுப் போனீங்க. இப்ப உங்கட அம்மா, உங்க பாட்டி செத்திட்டா... நான் வரல்லை... இதுதான் என்ர வீடு .. இங்கதான் என்ர சாவு..."

"ஏன் பாட்டியம்மா உங்கட பிள்ளைகள் தானே கூப்பிடுகினம்...?" என்று பாட்டியை அன்போடு தடவினார் செயலாளர்.

"நீ தான் என் பிள்ளை... எங்கே மற்ற மகன் ஆ... பராமரிப்புப் பிள்ளைதான் என்ர பேத்தி... இவங்களா என்னை இத்தனை நாளாகப் பார்த்தாங்க?.. அந்தப் பொடியங்க இங்க என்னைக் கொண்டாந்து சேர்க்கட்டா நான் எப்பவோ செத்திருப்பன்.. ஏன் நாயே என்டு கேட்காமல் விட்டுட்டுப் போனவங்க இப்ப அழுகிறாங்க... நான் போகல்லை."

"அம்மா மன்னிச்சிடம்மா... அப்ப இருந்த நிலையில் யோசிக்கல்ல..." கமலா அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதாள். கூட நின்றவர்களின் கண்களும் கலங்கின.

"பாட்டி எங்ககூட வாங்க பாட்டி... இன்னிக்கு இருக்கிற மாதிரி வளர்ந்தவனாக இருந்திருந்தா, நான் உங்களைத் தோளில் தூக்கி வந்திருப்பேன்... அப்ப நான் சின்னப் பொடியன்" என்று ரவி கெஞ்சினான்.

"வாங்க பாட்டி..."

"நான் வரல்லை... வரல்லை... வரல்லை.."

(முற்றும்)

### 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
| --- | --- | --- |
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

இவ்வாரப் பொன்மொழி

அறிவும், செல்வமும் அதிகம் உடையவர்கள் எப்பொழுதும் எளிமையாகவே காட்சி அளிப்பார்கள்.

- இங்கிலாந்துப் பழமொழி

# தலைப்பாகை

பக்கத்து வீட்டுக்காரர் தலைப்பாகை அணிந்திருந்த அதைப் பார்த்ததில் இருந்தே முல்லாவுக்கும் அது போல் அணிய ஆசை உண்டாகியது.

கடைக்குப் போன முல்லா, அங்கிருந்த தலைப்பாகைகளில் தனக்குப் பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்.

இனித்தான் பிரச்சினை. கடைக்காரர் சொன்ன விலை முல்லாவை அதிர்ச்சி அடைய வைத்தது. அந்தப் பணத்தில் கால் பங்கு கூட முல்லா கையில் இல்லை.

ஆனால், எப்படியும் தலைப்பாகையை வாங்கி விட வேண்டும். அதற்கு சாமர்த்தியமாகச் செயற்பட வேண்டும் என்று முடிவு செய்தார்.

"சரி... பணத்தைக் கொடுங்கள்" - முல்லாவிடம் கேட்டார் கடைக்காரர்.

"தருகிறேன்... இந்த சால்வையின் விலை என்ன?" -முல்லா கேட்டார்.

"தலைப்பாகை, சால்வை இரண்டும் ஒரே விலை தான் என்றார் கடைக்காரர்.

"அப்படியானால் சால்வையை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொன்ன முல்லா, தலைப்பாகையைக் கொடுத்து விட்டு, சால்வையுடன் புறப்பட்டார்.



"ஐயா, சால்வைக்குப் பணம் கொடுக்காமல் புறப்பட்டால் எப்படி?" மடக்கினார் கடைக்காரர்.

"தலைப்பாகைக்குப் பதிலாகத் தானே சால்வையை வாங்கினேன். அப்படியிருக்க நான் ஏன் பணம் தர வேண்டும்?" கேள்வி எழுப்பினார் முல்லா. அதாவது குழப்பினார்.

"தலையைப் பிய்த்துக் கொண்ட கடைக்காரர் "அப்படியானால் தலைப்பாகைக்குரிய பணம்?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் முல்லாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. "எந்தத் தலைப்பாகைக்குப் பணம் கேட்கிறீர்கள்?" என்றார்.

"இதோ இந்தத் தலைப்பாகைக்குரிய பணம் தான்" - தன் மேசை மீது இருந்த தலைப்பாகையை உயர்த்திக் காட்டினார் கடைக்காரர்.

"தலைப்பாகை உங்களிடம் தானே இருக்கிறது கடைக்காரரே?"

"ஆமாம்"

"அப்படியானால் அதற்கு நான் ஏன் பணம் தர வேண்டும்?"

கடைக்காரர் குழம்பி நிற்க, கிடைத்த சால்வையோடு நடையைக் கட்டினார் முல்லா.

## மொழியிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| தமிழ் | 247 |
| கிரேக்கம் | 24 |
| பிரெஞ்சு | 16 |
| அரபு | 28 |
| இலத்தீன் | 22 |
| இத்தாலி | 20 |
| ஆங்கிலம் | 26 |

அ.தர்ஷன்
தரம் - 02
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## ஒரேமாதிரி உள்ள இரண்டு நட்சத்திரங்கள் எவை?



## நாடுகளும் அதன் நாணயங்களும்

| | |
|---|---|
| இலங்கை | - ரூபாய் |
| இந்தியா | - ரூபாய் |
| ஜப்பான் | - யென் |
| சிங்கப்பூர் | - டொலர் |
| பிரான்ஸ் | - பிராங்க் |
| இத்தாலி | - லீரா |
| ஈராக் | - தினார் |
| பஹ்ரேன் | - தினார் |
| லெபனான் | - பவுண் |
| குவைத் | - தினார் |

ம.அனுஷன்
தரம் - 11
குடத்தனை அம்பன்
அ.மி.த.க பாடசாலை.

# சிறார்களின் கைவண்ணம்



ஆர். தீபா
பெ.வானதி
பாரதிபுரம்
கிளிநொச்சி








த.மாதங்கி
தரம் -7
கொ/ முகத்துவாரம்
இந்துக்கல்லூரி
கொழும்பு - 15



எஸ். அபினாஷ் கோகுல்
தரம் - 1
டி.எஸ். சேனநாயக்க கல்லூரி



# திருமலை – மூதூர் கடல் பயணம் எப்போது தீரும் பயணிகள் அவலம்?

திருகோணமலை - மூதூர் கடல் ப்படகுச் சேவையின்றி பகுதிக்குச் செல்லும் பயணிகள் வதியுறுகின்றனர்.

மூதூர் தேர்தல் தொகுதி பாரிய மக்கள் தாகையைக் கொண்ட பிரதேசமாகும். னைத்தவர்களும் இப்பகுதிகளில் சிக்கின்றனர். திருமலைத் தலைநகருக்கு நாளாந்தம் ஆயிரக் கணக்கானோர் சுமார் 2500) வந்து செல்வதுண்டு. அத்துடன் சேருநுவர போன்ற பாரம்பரிய விகாரைகளை தரிசிப்பதற்காக உல்லாசப் பயணிகளும் செல்வதுண்டு.

இதுவரை கடல்வழியால் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்பட்டுவந்தன. இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் அனுசரணையில் 'சேருவில II' எனும் பயணிகள் கப்பல் பயன்படுத்தப் பட்டது. இதில் சுமார் 200 பயணிகள் செல்லமுடியும். மேலும் கூட்டுறவுச் சங்கம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி என்பவற்றின் அனுசரணையுடன் நான்கு சிறிய இயந் திரப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டன. சுமார் 40 நிமிடங்களில் பிரயா ணம் முடிவடையும். தற்போது எந்தப் படகும் சேவையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. அனைத்துப் படகுகளுக் கும் ஒரே காலத்தில் கோளாறு வந்தது தான் விந்தையாக இருக்கின்றது.

'சேருவில II' கப்பல் கடற்படை டொக்யாட்டில் திருத்த வேலைக்கு நிறுத்தப்பட்டதாகவும் சுமார் 50 இலட்சம் ரூபா இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையால் வழங்கப்பட வேண்டியுள்ளதாக வும் அதனால் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளதாகவும் அரசியல் வட் டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அதேவேளை பணவிவரம் குறித்து பேசித்தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வாரம் 'சேருவில II' சேவையில் ஈடுபடுத் தப்படும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. எது எப்படியோ படகுகள் சேவையில் ஈடுபடும் வரை எதையும் நம்ப முடியாது.

தற்போது பயணிகள் பெரும் சிரமத் தின் மத்தியில் கந்தளாய் ஊடாக தரை வழிப்பயணத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக சில மணித்தியாலங்களை அவர்கள் வீண் விரயம் செய்வதோடு, சோதனைக் கெடுபிடி களையும் சந்திக்கின்றனர். அதேவேளை இன்றைய சூழ்நிலையில் பாதுகாப்பு அச்சமும் நிலவுகின்றது.

வெருகலம்பதி ஆலயத்தில் வருடாந்த உற்சவம் நடைபெறுவதால் பேருந்துகள் ஆலய சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளன. இதனால் போக்குவரத்துக்கு வாகனங்கள் இன்றி மேலும் பல அசௌகரியங்களை பயணிகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகியபோது எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

கடந்த மாதம் முதலாம் திகதியும், இம்மாதம் 13ஆம் திகதியும் துறை முகங்கள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு திருகோணமலை மாவட்ட எம்.பி.துரை ரெட்ணசிங்கம் கடிதம் மூலம் அறிவித் திருந்தார். அதன் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், பிரதி அமைச்சர்களுக்கும் அனுப்பட்டன.

ஆயினும் பயன் கிடைத்ததாகத் தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்களோடு தொலை பேசியில் பேசுவதற்கும் முடியாத நிலை காணப்படுகின்றது. தேர்தலில் மூழ்கியிருக்கும் அமைச்சர்களா லும், அரசியல்வாதிகளாலும் இந்த விட யத்தை கண்டுகொள்ள முடியவில்லை போலும்.

துரைரெட்ணசிங்கம் எம்.பி. அமைச் சர் மங்கள சமரவீரவுக்கு எழுதிய கடிதத்தில் முழு விவரங்களையும் குறிப்பிட்டுள்ளார். பயணிகளுக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் அசௌகரி யங்களை தெளிவாகக் காட்டியுள்ளார். எனினும் உரிய பதில் கிட்டாததால் இதுவரை பிரயாணிகள் அல்லை - கந்தளாய் வீதியில் 70 கிலோ மீற்றருக்கு மேல் 4 மணித்தியாலங்கள் செலவிட்டு செல்ல வேண்டியுள்ளது.

என்று தீரும் இந்த வேதனை என்று மக்கள் குமுறுகின்றனர்.

***எஸ்.எஸ்.ஆர்.***

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 03–10–2005 முதல் 09 –10–2005வரை

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசமானது. இருப்பினும் சூரியனின் நட்சத் திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு.ராசியை குரு பார்ப்பது நல்லது. சனியின் பார்வை கூடாது. தொடங்கும் காரியங்கள் தாமதாமாகலாம். மன அமைதி பாதிக்கலாம். (2–7) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லது. கையில் பணமிருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3,6) உரிய புதன் 7இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மாமன், மாமிக்குக் கூடாது. நான்காம் வீட்டில் உள்ள சனிக்கு சுபப்பார்வை இல்லாமையால்தாய்க்குக் கூடாது. வாகன சுகம் இருக்காது.(9,12) உரிய குரு 7 இல் இருப்பது விசேஷம். பிதா நலம், சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. இராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் இருப்பது பாதகமானது, அவதானம் வேண்டும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருக சீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது தீங்கானது. இருப்பினும், சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமத மாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை வர வாய்ப்புண்டு. (2,5) உரிய புதன் 6இல் நல்ல பலனைத் தருவார். கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 5இல் இருப்பது நல்லதல்ல.வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம்இருக்காது. (8,11) உரிய குரு 6ல் நல்ல பலனைத் தராது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. முதலீடுகளால் லாபம் இருக்காது. (9, 10) உரிய சனி 3இல் இருப்பது விஷேசம். பிதா நலம் தூரதேசப் பிரயாணம் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 5இல் இருப்பது விஷேசம். மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தாய் நலம். வாகன சுகம் உண்டு. மன அமைதி இருக்கும். இரண்டாம் இடத்தில் உள்ள சனி சுபக்கிரகங்கள் பார்க்காத படியால் கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைத் தராது. பிள்ளைகள் சொற்கேளார். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய செவ்வாய் 12இல் இருப்பது பயன் குறைவு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவிலகும், நண்பர்களுக்குசெலவான காலம். (7,10) உரிய குரு 5இல் இருப்பது விஷேசம். திருமண பலன் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. பிதாவுக்குக் கெடுதல் உண்டு. முதலீடுகளால் லாபம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசி நாதன் சந்திரன் கன்னி முதல் தனு வரை சஞ்சரிப்பார். வார மத்தியிலும் பிற்பகுதியிலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். ராசியில் சனி இருப்பதால் மன அமைதி இருக்காது. இரண்டுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் நாலில் நல்ல பலனைத் தராது. சயன சுகம் குறையலாம். மாமன், மாமிக்கு நல்ல பலன் இல்லை. (4,11) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது சிறப்பானது. தாய் நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் காட்டும். (5,10) உரிய செவ்வாய் 11இல் இருப்பது சிறப்பானது. தொழில்துறை முன்னேறும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,9) உரிய குரு 4இல் நல்ல பலனைத் தருமாட்டார். பிதாவுக்குக் கூடாது. உடலாரோக்கியம் பாதிக்கலாம், பிரயாணவாய்ப்புப் பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் இரண்டில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரி யங்கள் தடைபடலாம். மேலும், ராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் இருப்பது முன்னேற்றத்துக்குப் பாதகமானது. (2,11) உரிய புதன் மூன்றில் நல்ல பலனைத் தரமாட்டார். கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் செலவு அதிகரிக்கலாம். (3,10) உரிய சுக்கிரன் 4இல் நல்ல பலனைத் தருவார். தொழில் துறை முன்னேற்றம் இருக்கும். தங்க நகைகள் சேரப் பலன் உண்டு. பிரயாண வாய்ப்பு உருவாகும். (4,9) உரிய செவ்வாய் 10இல் மத்திம பலனைத் தரும். பெற்றோர் நலம். வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்க லாம். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 2இல் நல்ல பலனைத் தருவார். மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற் றம் இருக்கும். சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருக்கும். (2,9) உரிய சுக்கிரன் மூன்றில் ஆட்சியாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவிற்கு நல்ல பலன் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது சிறப்பானது. தாய் நலம், வாகன சுகம் உண்டு. திரு மண வாய்ப்பு உண்டு. (5,6) உரிய சனி 11இல் இருப்பது மிகவும் நல்ல பலனைத்தரும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். 12இற்குரிய சூரியன் ராசியில் இருப்பது தீங்கானது. சயன சுகம் இருக்காது. ராசியில் கேது இருப்பது தீங்கானது. ராசியை சனி பார்ப்பதும் கூடாது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 2இல் இருப்பது நல்லது. மேலும், சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல பல னைத்தரும். பெரிய முதலீடுகள் செய்ய வாய்ப்புண் டாகும். (2,7) உரிய செவ்வாய் 8இல் நல்ல பலனைத் தராது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது தீங்கானது. பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யிருக்கும். (4,5) உரிய சனி 10இல் இருப்பது மத்திம பலனைச் செய்யும். வாகன சுகம் இருக் காது. தாய் நலம், பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (9,12) உரிய புதன் ராசியில் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்லதல்ல, சயன சுகம் இருக்காது. 10ல் சனி தொழில் முன்னேற்றம் இருக்கும். சுபப் பார்வை இல்லாதது குறை.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 7இல்இருப்பது தீங்கா னது. இருப்பினும், சூரியனின் நட்சத்திரத் தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங் கள் தடைபடலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்க லாம். பகைவரால் தொல்லை உண்டு. (2,5) உரிய குரு 12இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. (3,4) உரிய சனி 9இல் தீங்கு இல்லை.வாகன சுகம் இருக்காது. தாய் நலம். குறுந்தூரப்பிரயாண அமையும். (7,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது விஷேசம். திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (8,11) உரிய புதன் 12ல் நல்ல பலனைத் தராது. நண்பர்களுக்கு நல்ல பலனில்லை. முதலீடுகளால் இலாபம் இருக்காது. பத்துக்குரிய சூரியன் 11இல் இருப்பது விஷேசம். தொழில் துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். மேலும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தாய் நலம், வாகன சுகம் உண்டு. பிர யாண வாய்ப்புண்டு. (2,3) உரிய சனி 8இல் இருப்பது தீங் கானது. கையில் பணம் இருக்காது. மாமன், மாமிக்கு நல்ல பலன் இல்லை. தங்க ஆபரணங்கள் தங்காது. (5,12) உரிய செவ்வாய் 6இல் இருப்பது விசேஷம். பிள்ளைகள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய சுக்கிரன் 12இல் நல்ல பலனைத் தருவர். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர்கள் விலகி நடப்பர். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (7,10) உரிய புதன் 11இல் இருப்பது விஷேசம். திருமண பலன் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது தீங்கானது. இருப்பினும், தன்து நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. ராசியை சனி பார்ப்பதால் மன அமைதிப் பாதிக்கலாம். (3,12) உரிய குரு 10இல் இருப்பது சுமாரானது. சிலர் தீங்கானது என்கின்றனர். சமசுகமாகக் கொள்ளலாம். சயன சுகம் உண்டு. தங்க ஆபரணங்கள் சேர வாய்ப்புக் குறைவு. (4,11) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலனைத் தராது. வாகனசுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கும் கூடாது. (5,10) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விஷேசம். பிள்ளைகள் கல்வி யில் ஆர்வம் காட்டு வர். தொழில் துறை யில் முன் னேற்றம் இருக்கும் 7இல் சனி சுபப் பார்வை இல்லா ததால் திருமண வாய்ப்புபாதிக்கலாம்.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | | செவ் | |
| | செவ்வாய் கார்த்திகை சூரியன்<br>சுக்கிரன் அனுசம் சனி<br>புதன் சுவாதி ராகு<br>சூரியன் அத்தம் சந்திரன்<br>குரு சித்திரை செவ்வாய்<br>சனி பூசம் சனி | | சனி |
| | | | |
| | சுக்கிரன் | புதன் குரு | சூரியன் கேது |

புரட்டாதி 17 முதல் 24 வரை

சந்திரன் கன்னி முதல் தனு வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பதும் சிறப்பு. தொடங் கும் காரி யங்கள் நல்ல பலனைத் தரும். மன அமைதி இருக் கும். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9இல் இருப்பது விஷேசம். கையில் பணம் இருக் கும். நண்பர்களுக்கு நல்லது. (3,10) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோஷம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக் காது. தங்க ஆபரணங்கள் தொலைய வாய்ப்புண்டு. (4,9) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைத் தரமாட்டார். பெற் றோருக்குக் கூடாது. வாகனசுகம்இருக்காது. 7இற்குரிய சூரியன் 8இல் நல்ல பலனைத் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக் கலாம். சனி, குரு நல்ல நிலையில் இருப்பது பலவழிகளி லும் முன்னேற்றம் உண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல் இருப்பதுதீங்கானது. இருப்பினும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங் கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.ராசியில் ராகு இருப்பது மன அமைதியைப் பாதிக் கலாம்.(2,9) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விஷேசம். கையில் பணம் இருக்கும். பிதா நலம். பிரயாண வாய்ப்பு உருவாகும். (4,7)உரிய புதன் 8இல் நல்லபலனைத் தர மாட்டார். வாகன சுகம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.தாய்க்குப் போதாத காலம். 6இற்குரிய சூரியன் 7இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. ஏதேனும் வழக்குகளில் சிக்க நேரிடும். (11,12) உரிய சனி 5இல் இருப்பது பயன் குறைவு. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்லபலனில்லை. சனி, குரு இரண்டும் நல்ல நிலையில் இல்லை. அவதானம் வேண்டும்.

# தியாகி திலீபனின் நினைவு நாளின்போது..









தியாகி திலீபன் மற்றும் கேணல் சங்கர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதை முதலாவது படத்தில் காண்க. திலீபனின் திருவுருவப்படத்துக்கு பெண் ஒருவர் மலர் மாலை அணிவிப்பதையும், புலிகளின் அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றுவதையும், திலீபனின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதையும் ஏனைய படங்களில் காணலாம்.


வவுனியாவில்!

சுடர் ஒளி


உதயன்

கிளைப் பணிமனை

*வவுனியா நகர மையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

58, கண்டிவீதி,
(பஸ்நிலையம் முன்பாக,
கண்டிவீதி - முதலாம் குறுக்குத்தெருச் சந்தியில்)
வவுனியா.
தொலைபேசி: 024 222 4848, 071 422 0008

HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**
T.P.: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com




நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரும், திலீபனின் திருவுருவப்பட ஊர்வலமும்.




EXPOAIR
*your friend in the skies...*

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஒக்டோபர் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டது.